REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2020 செப்டெம்பர் 22 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN
වරු. 88 இல. 225 | September 22,Tuesday, 2020 | 16பக்கங்கள் | 30/-




# திலீபன் நினைவேந்தல் தடை விவகாரம்; நீடிப்பா? நீக்கமா? 24 இல் தீர்ப்பு

**யாழ். நீதவான் நீதிமன்றம் வியாழனன்று உத்தரவு பிறப்பிக்குமென நேற்று அறிவிப்பு**

**யாழ்ப்பாணம் குறூப், கந்தர்மடம் நிருபர்கள்**




திலீபனின் நினைவேந்தலுக்கு எதிராக நீதிமன்றம் வழங்கியுள்ள தடை உத்தரவை நீடிப்பதா அல்லது நீக்குவதா என்ற உத்தரவு நாளைமறு தினம் 24ஆம் திகதி வியாழக்கிழமை யாழ் நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்படவுள்ளது. இது தொடர்பான உத்தரவை நாளைமறுதினம் வழங்குவதென யாழ் நீதவான் நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.

திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாணம் பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்துக்கு அமைய நீதிமன்றம் மேற்படி நினைவேந்தலுக்கு ஏற்கனவே தடை விதித்திருந்தது.

இந்நிலையில், திலீபன் நினைவேந்தலை தடை செய்யக் கோரி யாழ்ப்பாணம் பொலிஸார் தாக்கல் செய்திருந்த வழக்கு நேற்று (திங்கட்கிழமை) யாழ். நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிர்மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து, பொலிஸாரின் வாதத்துக்கு ஏற்றபடியான சரியான சட்ட ஏற்பாடுகளை முன்வைக்கவில்லையென இங்கு தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் பொலிஸாரின் கடும் ஆட்சேபனையுடனான விண்ணப்பம் நீதிமன்றால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எனினும் நேற்றைய தினம் முன்னிலையாகாத எதிர்மனுதாரர்கள் தரப்பு இன்று நகர்த்தல் பத்திரம் இணைத்து வழக்கை மீள அழைத்து, பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவைக்கு எதிராக தமது கடும் ஆட்சேபனையை முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நல்லூரில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் நினைவேந்தல் நடத்தக் கோரிய இம்மனுவில்

06

இரட்டை பிரஜாவுரிமை திருத்தம்;

# புலம்பெயர் அமைப்புகள் பாராளுமன்றம் வர வாய்ப்பு



விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ள புலம்பெயர் அமைப்பினரும் அதிகளவில் இரட்டைக் குடியுரிமை கோரி விண்ணப்பித்துள்ளனர். 20 ஆவது திருத்தத்தில் இரட்டைக் குடியுரிமையுள்ளவர்களுக்கு தேர்தலில் போட்டியிட அனுமதிப்பதன் மூலம் புலம்பெயர் அமைப்புக்களும் பாராளுமன்றம் வரலாம் என பொதுபல சேனா செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் எச்சரித்துள்ளார்.

06

# 19 திருத்தத்திலுள்ள இரட்டை குடியுரிமை 20 இலும் இருக்க வேண்டும் என்கிறார் வாசு

**தேவையான விடயங்களை தொடர வைப்பதில் தவறில்லை என விபரிப்பு**



19ஆம் திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இரட்டைக் குடியுரிமை குறித்த பிரிவு 20ஆம் அரசியலமைப்பு திருத்தத்திலும் தக்க வைக்கப்பட வேண்டுமென ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்று தெரிவித்துள்ளார்.

19ஆம் திருத்தத்தில் அநேக சாதகமான அம்சங்கள் இருந்ததால் அதை முற்றாக நிராகரிக்க முடியாது என அவர் தெரிவித்தார்.

06

# 20ஆவது திருத்தச் சட்டமூலம் இன்று பாராளுமன்றில் சமர்ப்பிப்பு



அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலம் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதன் பின்னர் அதனை சவாலுக்குட்படுத்தி யாரேனும் உயர் நீதிமன்றத்தை நாடினால் நீதிமன்றம் 21 நாட்களுக்குள் அதுதொடர்பான தீர்ப்பை தெரிவிக்கவேண்டும் என பாராளுமன்ற செயலாளர் நாயக அலுவலகம் தெரிவித்துள்ளது. குறித்த காலப்பகுதியில் இந்த அரசியலமைப்பு தொடர்பில் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க பாராளுமன்றத்திற்கு உரிமை இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

21 நாட்களுக்கு முன்னர் உயர் நீதிமன்றம் தனது தீர்மானத்தை அறிவித்தால், அதன்பின்னர்

06



நீதி அமைச்சர் அலி சப்ரிக்கும் பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் முஹம்மது சாத் கட்டாக்கிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று நீதி அமைச்சில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படம்.

புகையிரதத்தில் மோதுண்டு;

# கிளிநொச்சியில் நேற்று இளைஞன் பரிதாப பலி



கிளிநொச்சியில் புகையிரதத்தில் மோதுண்ட இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்று காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த மன்னவாகினி புகையிரதம் ஆனந்தபுரம் கிழக்கு

06

# கொரோனா காரணமாக 28 பேர் சவுதி அரேபியாவில் மரணம்

**கடந்த 04 மாதங்களில் தூதரகத்தில் பதிவு**



தொழில் நிமித்தமாக சவுதி அரேபியாவுக்குச் சென்ற இலங்கையர்களில் 28 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளனர். கடந்த 04 மாதங்களில் இந்த மரணங்கள் பதிவாகியுள்ளதாக சவுதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரக

06

# வெள்ளிக்கிழமைகளில் அரச ஊழியர்கள் இனி தேசிய உடையில்



ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தேசிய உடை அணிந்து சேவைக்கு சமுகமளிக்குமாறு இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர அரச ஊழியர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். பன்னல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

06

# ஐந்து மாடிக் கட்டட உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

**சம்பந்தப்பட்ட பல பிரிவுகள் விசாரணை முன்னெடுப்பு**



கவனயீனமான செயற்பாடு காரணமாக மூவர் உயிரிழக்கவும் இரு வீடுகள் சேதமடையும் காரணமாக இருந்த குற்றச்சாட்டின் பேரின் உடைந்து விழுந்த ஐந்து மாடிக் கட்டிடத்தின் உரிமையாளருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க இருப்பதாக கண்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்க நேற்று தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்த பின்னர் விசாரணை ஆரம்பிக்க இருப்பதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் பொறியியல் பிரிவு, நகர அபிவிருத்தி அதிகார சபை, கட்டட ஆய்வு நிறுவனம், இணைந்து விசாணை செய்து அறிக்கை

06

# கஜேந்திரகுமார், கஜேந்திரன் மீதும் விசாரணை நடத்தப்பட வேண்டும்

**தனது ஒத்துழைப்பு வழங்கப்படும் என்கிறார் மணிவண்ணன்**



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மத்திய குழுவால் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய தன் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளித்து கடிதம் அனுப்பியுள்ள சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், கட்சியினால் முன்னெடுக்கப்படும் ஒழுக்காற்று

06



வடக்கில தமிழ் கட்சிகளின் ஒற்றுமையை பாத்தா எங்க போராட்டம் வெடித்து விடுமோ என பயமா இருக்கு.....

நீ வேற, அவங்க பொங்கலுக்கு சொந்த காசில ஒரு வெடிகூட வெடிக்க வைக்க மாட்–டாங்க... வாயால வெடி போடுறதா இருந்தா இவங்கள யாரும் மிஞ்ச முடியாது.... இவங்க போய்...

ஐயோ!! ஐயோ!!!

# பதினோராவது நாளாகவும் தொடரும் நானுஓயா மக்களின் போராட்டம்




தோட்ட முகாமையாளருக்கு இடமாற்றம் வழங்கப்படவேண்டும் என்பது உட்பட மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்து நுவரெலியா மாவட்டத்துக்குட்பட்ட நானுஓயா, உடரதல்ல தோட்ட தொழிலாளர்கள் நேற்று (21) 10 ஆவது நாளாகவும் வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என பதாகைகளை தாங்கியவாறு கோஷமெழுப்பும் தொழிலாளர்கள், தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும் எனவும்

06

# வெளிநாடுகளிலிருந்து மேலும் 764 இலங்கையர் நேற்று நாடு திரும்பினர்



கொரோனா தொற்று காரணமாக தாய் நாட்டிற்கு திரும்பி வர முடியாமல் வெளிநாடுகளில் சிக்கியிருந்த 724 பேர் நேற்று நாடு திரும்பியுள்ளனர். அவுஸ்திரேலியா, டுபாய், சென்னை மற்றும் ஜப்பானில் இருந்து இவர்கள் வருகை

06

சிறையிலிருந்து பலத்த பாதுகாப்புடன்

# கொழும்புக்கு நேற்று அழைத்துவரப்பட்ட பிள்ளையான் இன்று பாராளுமன்றில்




தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாணசபை முதலமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

06



எகிப்தின் பண்டைய இடுகாட்டில்

# 2,500 ஆண்டுக்கு முந்தைய சவப்பெட்டிகள் கண்டுபிடிப்பு



பண்டைய எகிப்து இடுகாடு ஒன்றில் இருந்து 2,500 ஆண்டுகளுக்கு முன்னர் புதைக்கப்பட்ட 27 சவப்பெட்டிகளை அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

தலைநகர் கெய்ரோவின் தெற்காக சக்காராவில் ஒரு புனிதத் தளத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கிணறு ஒன்றுக்குள் இருந்தே இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இம்மாத ஆரம்பத்தில் பதின்மூன்று சவப்பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் மேலும் 14 தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

இதுபோன்ற மிகப்பெரிய கண்டுபிடிப்பாக இது உள்ளது என்று நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வேலைப்பாடுகள் செய்யப்பட்ட, மரத்தாலான, நன்கு பாதுகாக்கப்பட்ட சவப்பெட்டிகள் மற்றும் பிற கலைப் பொருட்களின் படங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

சக்காரா 3000 ஆண்டுகளுக்கு மேல் இடுகாடாக இருந்திருப்பதோடு அது தற்போது யுனெஸ்கோவின் உலக மரபுரிமைத் தளமாகவும் உள்ளது.

“இந்த சவப்பெட்டிகள் முற்றாக மூடப்பட்டிருப்பதும் அவை புதைக்கப்பட்டது தொடக்கம் இதுவரை திறக்கப்படவில்லை என்பதும் ஆரம்பக்கட்ட ஆய்வுகளில் தெரியவருகிறது” என்று எகிப்து தொல்பொருள் துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

குறித்த பகுதியில் தொடர்ந்து அகழ்வாராய்ச்சிகள் இடம்பெற்று வரும் நிலையில் இந்த சவப்பெட்டிகள் குறித்து மேலும் தகவல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தாய்லாந்தில் முடியாட்சி சீர்திருத்த சின்னம் மாயம்



“தாய்லாந்து மன்னருக்கு அன்றி மக்களுக்கு உரியது” என்று குறிப்பிடப்பட்ட அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களால் வைக்கப்பட்ட உலோகச் சின்னம் அகற்றப்பட்டுள்ளது.

நாட்டின் முடியாட்சிக்கு எதிரான வலுவான எதிர்ப்பை வெளியிடும் வகையிலேயே கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த உலோகச் சின்னம் பதிக்கப்பட்டது.

இதன்போது முன்னெப்போது இல்லாத வகையில் மன்னருக்கான அதிகாரங்களை சீர்திருத்தும்படியும் பிரதமரை பதவி விலகும்படியும் பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

நேற்று காணாமல்போயிருக்கும் இந்த உலோகச் சின்னம் பற்றி விசாரணை நடத்தப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். எனினும் இந்தச் சின்னத்தை பதித்த ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று பாங்கொக் பிரதி பொலிஸ்மா அதிபர் பியா ட்விசாய் எச்சரித்துள்ளார்.

மன்னர் அரண்மனைக்கு அருகில் இருக்கு வரலாற்று முக்கியம் வாய்ந்த சனம் லுவாங் தளத்திலேயே இந்த உலோகச் சின்னம் பதிக்கப்பட்டது.

1930களில் முழுமையான முடியாட்சி முறை முடிவுக்கு வந்ததை அடையாளப் படுத்தும் வகையிலேயே இந்த உலோகச் சின்னம் பதிக்கப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டனர். இது தொடர்பான முந்தைய உலோகச் சின்னம் 2017 ஆம் ஆண்டு காணாமல்போனது.

கடந்த 2 நாட்களாகப் பல்லாயிரக்கணக்கானோர் தாய்லந்தின் மன்னராட்சியில் சீர்திருத்தம் கோரி ஆர்ப்பாட்டம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கா–தாய்வான் இடையே பொருளாதார உறவுக்கு முயற்சி



தாய்வானும் அமெரிக்காவும் சீனாவின் எதிர்ப்பை மீறி அதிகாரபூர்வமான பொருளாதார உறவை ஏற்படுத்திக்கொள்ள முற்பட்டு வருகின்றன.

இருதரப்புப் பொருளாதார கலந்துரையாடல் விரைவில் ஆரம்பிக்கவிருப்பதாக தாய்வானியப் பொருளாதார விவகார அமைச்சர் தெரிவித்தார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சின் உயர்நிலைப் பிரதிநிதி கீத் க்ரக் தாய்வானுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட மறுநாள் அவர் இவ்வாறு கூறியுள்ளார். பொருளாதார கலந்துரையாடலுக்கான திகதி இன்னும் முடிவுசெய்யப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

நவம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன் இருநாட்டு உறவை வலுப்படுத்திக்கொள்வதற்கான முயற்சிகள் தீவிரமடைந்துள்ளன

# துப்பாக்கியை கைவிட்ட பொலிஸார் இடைநீக்கம்



விமானத்தில் துப்பாக்கியை விட்டுச் சென்ற பிரிட்டிஷ் பொலிஸ் அதிகாரி தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டோமினிக் ரொப்பின் பாதுகாவலர் குழுவில் அவர் இருந்துவந்தார். அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்ட அமைச்சருடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாரி, மீண்டும் லண்டன் திரும்பியபோது விமானத்தில் துப்பாக்கியை விட்டுச்சென்றார்.

சம்பவத்தை பிரிட்டனின் மெட்ரோபொலிடன் காவல் துறை கடுமையாகக் கருதுவதாகவும் விசாரணை நடக்கும் வேளையில் அவர் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

ரொப் அமெரிக்காவில் அந்நாட்டு இராஜாங்கச் செயலாளர் மைக் போம்பியோவைச் சந்தித்தார்.

இவ்வாண்டின் ஆரம்பித்தில் பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டேவிட் கெமரனின் பாதுகாவலரும் துப்பாக்கியுடன், முன்னாள் பிரதமரின் கடவுச்சீட்டையும் விமானக் கழிப்பறையில் விட்டுச்சென்றார்.

# கொவிட்-19: ஸ்பெயின் தலைநகரில் மீண்டும் பகுதி அளவு முடக்க நிலை

## அமெரிக்காவில் 200,000ஐ நெருங்கும் உயிரிழப்பு



கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் அதிகரிக்க ஆரம்பித்ததால் ஸ்பெயின் தலைநகர் மெட்ரிட்டில் ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் ‘வீட்டில் தங்கி இருக்க’ உத்தரவிடப்பட்டுள்ளது.

எனினும் தற்போது உலகில் வேகமாக பரவி வரும் நாடாக உள்ள இந்தியாவில் தாஜ்மஹால் மற்றும் சில பாடசாலைகள் நேற்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. உலகில் அமெரிக்காவுக்கு அடுத்து அதிக நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவான நாடாக இந்தியா உள்ளது.

இந்நிலையில் மெட்ரிட்டில் நேற்று ஆரம்பமான புதிய கட்டுப்பாடுகள் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கவுள்ளன. குறைந்த வருவாய் மற்றும் அதிக மக்கள் செறிவுகொண்ட பகுதிகளே இதனால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்கள் வேலை, மருத்துவம் அல்லது குழந்தைகளை பாடசாலைக்கு அழைத்துச் செல்வது போன்ற அவசிய தேவைகளுக்கு மாத்திரமே வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது பூங்காக்கள் அனைத்தும் மூடப்படும். கடைகள், மதுபானக் கூடங்கள், உணவகங்கள் ஆகியவற்றில் 50 வீதம் வரை மட்டுமே வாடிக்கையாளர்கள் அனுமதிக்கப்படுவர். மெட்ரிட் முழுவதும் ஆறு பேருக்கு மேல் ஒன்றுகூட தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய கட்டுப்பாடுகளுக்கு எதிராக கடந்த ஞாயிறன்று சில பகுதிகளில் மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொரோனா தொற்றினால் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாக இருக்கும் ஸ்பெயினின் குறித்த பகுதிகளில் வைரஸ் பரவல் அதிகமாக இருப்பதால் அந்த நடவடிக்கை அவசியம் என்று ஸ்பெயின் நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

உலகளாவிய கொரோனா தொற்று எண்ணிக்கை வேகமாக 31 மில்லியனை நெருங்குவதோடு 958,000க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

6.8 மில்லியனுக்கும் அதிகமான நோய்த் தொற்று சம்பவங்களுடன் உலகில் மோசமாக பாதிக்கப்பட்ட நாடாக இருக்கும் அமெரிக்காவில் உயிரிழப்பு 200,000ஐ நெருங்கியுள்ளது. இந்த பெருந்தொற்று அமெரிக்க பொருளாதாரத்தை அதிகம் பாதித்திருப்பதோடு மில்லியன் கணக்கானவர்கள் வேலை வாய்ப்பை இழந்துள்ளனர். இது தொடர்பில் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகி வருகிறார்.

எனினும் வரும் ஒக்டோபர் மாதத்தில் தடுப்பு மருந்து தயாராகிவிடும் என்று டிரம்ப் கூறியபோதும் அவரது கருத்து நாட்டின் முன்னணி சுகாதார நிபுணர்களின் கருத்துக்கு முரணாக உள்ளது.

நியூஸிலந்தின் ஒக்லந்து நகரில் கொவிட்–19 நோய்ப் பரவல் தொடர்பாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவுள்ளன. வியாழக்கிழமை முதல் ஒக்லந்தில் நோய்ப்பரவலுக்கான எச்சரிக்கை நிலை 2ஆகக் குறைக்கப்படும்.

நாட்டின் மற்ற இடங்களில் நேற்று நள்ளிரவிலிருந்து எச்சரிக்கை நிலை 1ஆகக் குறைக்கப்பட்டதாக நியூஸிலந்துப் பிரதமர் ஜசிண்டா ஆர்டன் தெரிவித்தார்.

# அவுஸ்திரேலிய விரிகுடாவில் 270 திமிங்கிலங்கள் நிர்க்கதி



அவுஸ்திரேலியாவின் டஸ்மேனிய தீவில் உள்ள விரிகுடா ஒன்றில் சுமார் 270 திமிங்கிலங்கள் சிக்கி இருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். அவைகளை மீட்கும் சாத்தியங்கள் பற்றி கடல்சார் நிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

அந்த தீவின் கரடுமுரடான மக்குவாரி துறைமுகப் பகுதியில் இருக்கும் இந்த திமிங்கிலங்கள் மணல் திட்டு ஒன்றில் சிக்கி இருப்பதாக நம்பப்படுகிறது.

அந்தத் தளத்திற்கு பொலிஸார் விரைந்திருப்பதோடு கடல் சார் நிபுணர்கள் நிலைமையை ஆராய்ந்து வருவதாக டஸ்மேனிய சுற்றுச்சூழல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. திமிங்கிலங்களை மீட்கும் கருவிகளுடன் மீட்பாளர்கள் அங்கு செல்லவிருப்பதாகவும் அது குறிப்பிட்டது.

பைலட் திமிங்கலங்களே இவ்வாறு சிக்கி இருப்பதாக நம்பப்பட்டபோது அது இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

முன்னதாக அவுஸ்திரேலியாவின் முதலைகள் இருக்கும் நதி ஒன்றில் ஹம்பக் திமிங்கிலங்கள் வழி தவறி நுழைந்த சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்குப் பின்னரே இது இடம்பெற்றுள்ளது. எனினும் அந்த ஹம்பக் திமிங்கிலங்கள் மீண்டும் பாதுகாப்பாக கடலுக்கு திரும்பியுள்ளன.

# டிரம்புக்கு நச்சுக் கடிதம் அனுப்பிய பெண் கைது



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்புக்கு விசம் தடவிய கடிதத்தை அனுப்பிய சந்தேக நபரை கைது செய்ததாக அமெரிக்க நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

சந்தேக நபரான அந்தப் பெண் கைது செய்யப்படும்போது துப்பாக்கியுடன் இருந்ததாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கனடா மற்றும் அமெரிக்காவின் நியூயோர்க் மாநிலத்தை இணைக்கும் பகுதியில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். வெள்ளை மாளிகைக்கு அனுப்பப்பட்டிருந்த அந்தக் கடிதத்தை கடந்த சனிக்கிழமை சோதித்தபோது அதில் ரிசின் என்ற கொடிய விசம் தடவப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கடிதம் கனடாவில் இருந்து அனுப்பப்பட்டிருப்பது விசாரணையில் தெரியவந்தது.

இந்த கடிதம் கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டபோதும் அது வெள்ளை மாளிகையை அடையவில்லை என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குண்டூசி முனையளவு ரிசின் நச்சுப் பொருள் 36 முதல் 72 மணி நேரத்திற்குள் மரணம் விளைவிக்கும் ஆற்றல் கொண்டது. இதுவரை அதனை முறியடிப்பதற்கான மருந்து ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை.

# ருமேனியாவில் திருடப்பட்ட மிக அரிய புத்தங்கள் மீட்பு



வட கிழக்கு ருமேனியாவிலுள்ள கிராமப்புற வீடு ஒன்றின் தரைக்கு அடியில் சுமார் 4.4 மில்லியன் டொலர் மதிப்புள்ள திருடப்பட்ட புத்தகங்கள் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.


ஐசக் நியூட்டன், கலிலியோ போன்ற விஞ்ஞானிகள் பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுதிய அரிய முதல் பதிப்புப் புத்தகங்களும் கண்டெடுக்கப்பட்டன.

லண்டனிலுள்ள புத்தகக் கிடங்கு ஒன்றிலிருந்து 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திருடர்களால் அந்தப் புத்தகங்கள் திருடப்பட்டன. திருடர்கள் கிடங்கின் கூரையில் துவாரங்களை வெட்டி அதனுள் நுழைந்தனர்.

அந்தத் திருடர் கும்பல் லண்டனில் பல பெரிய திருட்டுச் சம்பவங்களின் பின்னணியில் உள்ளதாக லண்டன் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். விலை மதிப்பற்ற அந்த அரிய புத்தகங்கள் கலாசார வரலாற்றின் ஒரு முக்கிய அம்சமாக அமைகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ருமேனியத் திருடர் கும்பல்கள் பிரிட்டனுக்கு அவற்றின் உறுப்பினர்களை அனுப்பி அம்மாதிரியான குற்றங்களைப் புரிய வைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளன என்று பொலிஸார் கூறினர்.

# 'விசாட்' தடைக்கு அமெ. நீதிமன்றம் முட்டுக்கட்டை




குறுஞ்செய்தி மற்றும் பணக் கொடுப்பனவுக்கான சீனாவின் விசாட் செயலி மீதான அமெரிக்க அரசின் தடை முயற்சிக்கு நீதிபதி ஒருவர் முட்டுக்கட்டை போட்டுள்ளார்.

இந்தத் தடை அரசியலமைப்பின் முதல் திருத்தமான கருத்துச் சுதந்திரத்தை உறுதி செய்வதை தீவிரமாகக் கேள்விக்குறியாக்குகிறது என்று அமெரிக்க நீதிவான் நீதிபதி லோரா பீலர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அமுலுக்கு வரும் வகையில் அமெரிக்காவில் விசாட் செயற்பாடுகளுக்கு தடைவிதிக்கும் அறிவிப்பை வர்த்தகத் திணைக்களம் வெளியிட்டது.

எனினும் இந்த செயலி தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்தார். இந்த செயலி பயனர்களின் தரவுகளை சீன அரசுக்கு வழங்கக்கூடும் என்று அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் இந்தத் தடைக்கு எதிராக அமெரிக்காவின் விசாட் பயனர்கள் குழு ஒன்றே வழக்குத் தொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க தடைக்கு உள்ளாகும் நெருக்கடியில் இருக்கும் மற்றொரு சீன செயலியான டிக்டொக் தடையை தவிர்க்க அமெரிக்காவின் ஒராகில் நிறுவனத்திற்கு அதனை விற்க பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

# 2ஆம் உலகப் போர் குண்டு வெடித்து இருவர் உயிரிழப்பு




சொலமன் தீவுகளில் இரண்டாம் உலகப் போரின் வெடிக்காத குண்டுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த இருவர் அவ்வாறான குண்டு ஒன்று வெடித்து உயிரிழந்துள்ளனர்.

நோர்வே தொண்டு நிறுவனம் ஒன்றுக்காக பணியாற்றிய பிரிட்டன் மற்றும் அவுஸ்திரேலிய நாட்டவர்களே கொல்லப்பட்டுள்ளனர்.

தலைநகர் ஹொனையராவின் குடியிருப்புப் பகுதி ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த வெடிப்பு இடம்பெற்றுள்ளது. இந்த இருவரும் அனுமதி இன்றி குடியிருப்புப் பகுதியில் குண்டை செயலிழக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த வெடிப்புக்கான காரணம் கண்டுபிடிக்கப்படும் வரை தமது செயற்பாடுகளை இடைநிறுத்துவதாக நோர்வே மக்கள் உதவித் தொண்டு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இரண்டாவது உலகப் போரின் தெற்கு பசிபிக் யுத்த பூமியாக இருந்த சொலமன் தீவில் வெடிக்காத ஆயிரக்கணக்கான குண்டுகள் சிதறிக் காணப்படுகின்றன.

குறிப்பாக இங்கு நேசப் படைக்கும் ஜப்பான் படைக்கும் இடையே உக்கிர மோதல் இடம்பெற்றதோடு இரண்டாவது உலகப் போர் முடிவடையும்போது நிலக்கண்ணி வெடிகள் மற்றும் ஏனைய வெடிபொருட்கள் கைவிடப்பட்டன.

2020 செப்டெம்பர் 22 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

| 18ம் திகதி முதல் 22ம் திகதி வரை | |
|---|---|
| **தொழுகை நேரம்** | |
| சுபஹ் | 04.45 |
| லுஹர் | 12.06 |
| அஸர் | 03.15 |
| மஃரிப் | 06.09 |
| இஷா | 07.19 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் புரட்டாசி 06

ராகுகாலம் : மாலை : 3.00 - 4.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை
யோகம்: சித்த யோகம்
நட்சத்திரம்: அனுஷம் ந.இ 1.45
திதி: சஷ்டி

தினகரன் விளம்பரம் 0112429367 | விற்பனை பிரிவு 0112429444, 0112429378 | ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# ரவி கருணாநாயக்க, அலோசியஸ் எதிராக குற்றப்பத்திரம் தாக்கல்

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் பேர்பெசுவல் டிரெசரிஸ் நிறுவனத்தின் சொந்தக்காரர் அர்ஜுன் ஆலோசியஸ் ஆகியோர் மீது லஞ்ச ஆணைக்குழு நேற்று ஆறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து கொழும்பு உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

லஞ்ச ஆணைக்குழு சட்டத்தின் 19 (சி) பிரிவின் கீழ் முன்னாள் அமைச்சர் பொதுச் சேவையில் ஈடுபட்டிருந்த நிலையில் 2016 பெப்ரவரி 12 க்கும் 2016 செப்டம்பர் 30 ஆம் திகதிக்கும் இடையில் லஞ்சம் வாங்கியதன் மூலம் தண்டனைக்குரிய குற்றத்தை இழைத்துள்ளதாக லஞ்ச ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் குற்றம்சாட்டியுள்ளார்.

முதலா சந்தேக நபரான ரவி கருணாநாயக்க இரண்டாம் நபரான அலோசியஸிடம் இருந்து இந்த லஞ்சத்தை பெற்றுள்ளார். கொள்ளுப்பிட்டியில் உள்ள வீட்டுத் தொகுதியொன்றை வாக்குவதற்காக 11.68 மில்லியன் ரூபாவுக்கான காசோலைகளை பயன்படுத்தியதாகவும் இந்த காசோலையை வோல்ட் அன்ட் ரோ மற்றும் பேர்பெஸுவல் கபிடல் தனியார் நிறுவனமும் வெளியிட்டுள்ளதாகவும், அலோஸியஸ் இந்த நிறுவனத்தின் ஒரு பணிப்பாளர் என்றும் லஞ்ச ஆணைக்குழு குற்றம்சாட்டியுள்ளது.

இந்த வழக்கில் லஞ்ச ஆணைக்குழு 58 பேரை சாட்சிகளை பெயரிட்டுள்ளதுடன் 32 ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளது.



மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, ஆரம்ப பாடசாலை, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதி மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் தலைமையில் விசேட பேச்சுவார்த்தையொன்று நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு ஜனாதிபதி எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் விளக்கமளிப்பதைப்படத்தில் காணலாம்.

## நாணயமாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 |
| குவைத் டினார் | 603.09 |
| ஓமான் ரியால் | 483.42 |
| கட்டார் ரியால் | 50.73 |
| சவூதி ரியால் | 49.54 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

எதிர்வரும் 26 ஆம் திகதி

# ஜனாதிபதி கோட்டாபய- இந்திய பிரதமர் மோடி இடையில் காணொளியில் பேச்சு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுடன் எதிர்வரும் 26ந்தேதி (சனிக்கிழமை) காணொலியில் தொடர்பு கொண்டு பேச பிரதமர் மோடி முடிவு செய்துள்ளார்.

கொரோனா காரணமாக பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயணங்கள் தடைப்பட்டுள்ளது. இதனால் அவர் காணொலி காட்சி மூலம் முக்கிய தலைவர்களுடன் பேசி வருகிறார்.

சமீபத்தில் அவர் ஆஸ்திரேலியா, ஜப்பான் நாட்டு தலைவர்களுடன் காணொலி காட்சி மூலம் பேசினார்.

எதிர்வரும் 26ம் திகதி (சனிக்கிழமை) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் காணொலியில் தொடர்பு கொண்டு



பேச பிரதமர் மோடி முடிவு செய்துள்ளார். அண்டைநாடுகளுடன் சுமுக உறவை மேம்படுத்தும் நடவடிக்கையாக இந்த கலந்துரையாடல் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவை சுற்றி அமைந்துள்ள அண்டைநாடுகளில் மாலைத்தீவு, ஆப்கானிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகளுடன் இந்தியா சுமுக உறவுடன் உள்ளது. நேபாளமும், இலங்கையும் சீனாவுக்கு ஆதரவாக மாறி இருக்கின்றன.

இதையடுத்து சீனா பக்கம் இந்த நாடுகள் முழுமையாக சாய்வதை தடுக்க பிரதமர் மோடி அந்த நாடுகளுடன் பேச ஆரம்பித்துள்ளார். அதன் ஒரு பகுதியாக அவர் கோட்டாபய ராஜபக்சேவுடன் பேச்சு நடத்த உள்ளதாக 06

# மலசலகூட வசதியில்லாத மக்கள் அதிகளவில் உள்ளனர்



தோட்டப் பகுதிகளிலும் கிராமப்புறங்களிலும் கூடுதலாக இந்த நிலைமை இருக்கிறது. இந்த நிலையை மாற்ற வேண்டும் என நீர் விநியோக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

தோட்ட, கிராம மக்களில் பலருக்கு மலசலகூட வசதியில்லை நிலைமையை மாற்ற வேண்டும் என்கிறார் அமைச்சர் வாசு.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள் சிலர் நீர் விநியோக அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவை அவரது நீர் விநியோக அமைச்சு வளாகத்தில் நேற்று சந்தித்தார்கள். அந்நிகழ்வில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹெனா சிகர், ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட வதிவிட பிரதிநிதி ரொபர்ட் ஜுக்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் காலநிலை மற்றும் சூழல் நிகழ்ச்சித் திட்ட அணியின் தலைவர் (அபிவிருத்தி) புத்திக ஹபுஆராச்சி ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் கூறியதாவது,

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகளுடன் அமைச்சின் நடவடிக்கைகளுக்கும் 06

# ஐ.நா.வுக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதியாக மொஹான் பீரிஸ்



முன்னாள் பிரதம நீதியரசரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான மொஹான் பீரிஸ் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி பதவிக்கு 06

SAMSUNG



Galaxy M01 Core

எனது தொகைக்கு SMART ஆன Choice

அ.கூ.வி ரூ.15,499/- ற்கு மேல்*

HD+ infinity display உடன் மிக சிறந்த பார்வை அனுபவம் |
11 மணித்தியாலங்களுக்கும் மேல் தடையற்ற வீடியோ பார்க்கும் வசதி** | மெல்லிய மற்றும் அழகிய வடிவமைப்பு

கிடைக்குமிடங்கள்:
JKOA | softlogic | SINGER | SINGHAGIRI | DAMRO | Dialog | Sri Lanka Telecom Mobitel | SAMSUNG e-Store | mysoftlogic.lk | daraz | மற்றும் நாடளாவிய அதிகாரமுடைய முகவர்களிடம்

Contact us
011 SAMSUNG
7 2 6 7 8 6 4
Live Chat | support.lk@samsung.com | Samsung Members

*முன்னறிவிப்பின்றி விலைகள் மாற்றமடையலாம். படம் உருவகப்படுத்தப்பட்டது. **பயன்பாடு ஆஃப்லைன் நிலையில் Samsung உள்ளக ஆய்வகங்களில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளுக்கு அமைவானது. தனிப்பட்ட பயன்பாட்டிற்கு அமைய நேரங்கள் மாறலாம். மேலதிக விபரங்களுக்கு www.facebook.com/SamsungLanka/ பக்கத்திற்கு நுழையுங்கள்.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 06ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 சபர் பிறை 04

### குறள் தரும் சிந்தனை



குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்

தம் மக்களின் மழலைச் சொல்லைக் கேட்டு அதன் இனிமையை நுகராதவரே குழலின் இசை இனியது யாழின் இசை இனியது என்று கூறுவர்.

## ஐந்து மாடி கட்டடம் இடிந்து வீழ்ந்த காரணங்களை கண்டறிய வேண்டும்

கண்டி, பூவெலிகட பிரதேசத்தில் ஐந்து மாடிகளைக் கொண்ட ஹோட்டல் கட்டடமொன்று அருகிலிருந்த வீடொன்றின் மீது நேற்றுமுன்தினம் அதிகாலையில் திடீரென சரிந்து விழுந்ததில் பாரிய அனர்த்தம் ஏற்பட்டது. இதன் விளைவாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இளம் தம்பதியினருடன் அவர்களது ஒன்றரை மாத குழந்தையும் உயிரிழந்திருக்கின்றது. இச்சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இக்கட்டடத்தின் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்தவர்களை மீட்கும் பணியை பொலிஸாரும் இராணுவத்தினரும் உடனடியாக ஆரம்பித்தனர். இதன் பயனாக இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்தவர்களில் இருவர் உயிருடன் மீட்கப்பட்டதோடு, ஏனையவர்கள் சடலமாக மீட்கப்பட்டனர். அவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இச் சம்பவத்தில் உயிரிழந்துள்ள பெண்மணி சட்டத்தரணியும் திறந்த பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளருமாவார். இடிந்து வீழ்ந்த இக்கட்டடத்தின் உரிமையாளரும் அவரது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் அதிகாலை மூன்று மணியளவில் வெளியேறிச் சென்றிருப்பதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்திருக்கிறது. இவ்வாறான நிலையில் இச்சம்பவம் தொடர்பில் பல கோணங்களிலும் கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

ஏனெனில் குறித்த கட்டடத்தின் உரிமையாளர் அவரது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் அன்றைய தினம் அதிகாலையிலேயே வெளியேறிச் சென்றிருப்பதற்கான காரணம் என்ன? கட்டடம் சரிந்து விழுவதற்கான முன் அறிகுறிகள் வெளிப்பட்டதன் விளைவாக அவர்கள் வெளியேறினார்களா? அல்லது வேறு தேவையின் நிமித்தம் சென்றார்களா? என்பது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அதேவேளை இக்கட்டடம் உறுதியற்ற நிலத்தில் அமைக்கப்பட்டிருந்தால் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழை காரணமாக நிலம் தாழிறங்கி, கட்டடம் சரிந்து விழுந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்ற அதேநேரம், 'கடந்த மாதம் கண்டி பிரதேசத்தில் இரண்டொரு தடவை பதிவாகிய நில அதிர்வு இதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம்' என்று பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் அத்துல சேனாரத்ன தெரிவித்திருக்கிறார்.

'இந்த நிலஅதிர்வுகள் காரணமாக இப்பகுதியில் மண் அடுக்கு பலவீனப்பட்டுள்ளதோடு, சமீபத்திய தொடர்மழை காரணமாக மண் அடுக்கில் நீரும் சேர்ந்துள்ளது. இதன் விளைவாக நிலம் ஸ்திரமிழந்திருக்கலாம்' எனவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனாலும் இக்கட்டட சரிவுக்கு மண்சரிவோ நில அதிர்வோ காரணமல்ல என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனமும் அனர்த்த முகாமைத்துவ நிலையமும் தெரிவித்திருக்கின்றன.

இந்த அனர்த்தம் காரணமாக மூன்று அப்பாவிகளின் உயிர்கள் இழக்கப்பட்டிருப்பதோடு, சேதங்களும் ஏற்பட்டிருக்கின்றன.அதன் காரணத்தினால் இக்கட்டட சரிவு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுவது அவசியம். குறிப்பாக பல மாடிகளைக் கொண்ட கட்டடமொன்றை அமைக்கக் கூடிய நிலப் பிரதேசத்திலா இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது, அவ்வாறான கட்டடத்தை அமைப்பதற்குத் தேவையான கம்பி உள்ளிட்ட மூலப்பொருட்கள் இக்கட்டடத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளனவா மற்றும் அத்திவாரத்தின் நிலைமை உள்ளிட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பொதுவாக மலை சார்ந்த பிரதேசங்களில் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் அனுமதி பெறப்படுவது அவசியம். அதனால், இவ்வாறான ஒரு இடத்தில் கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கு இந்த நிறுவனம் அனுமதி வழங்கி இருக்குமா என்ற கேள்வியும் எழவே செய்கிறது. அத்தோடு கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கு உள்ளூராட்சி மன்றத்தின் அனுமதியும் பெறப்பட வேண்டும். இக்கட்டடத்திற்கு தண்ணீர் மற்றும் மின்சார வசதிகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதன் காரணத்தினால் இக்கட்டடம் தொடர்பில் விரிவாக ஆராயப்படும் போது அதில் இடம்பெற்றுள்ள தவறுகள், பிழைகள் தெரியவரும். அதனூடாக இடம்பெற்றுள்ள தவறுகளையும் குறைகளையும் எதிர்காலத்தில் திருத்திக் கொள்வதற்கு வழியேற்படும்.

அதேநேரம் இவ்வாறான சம்பவமொன்று 2017 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி கொழும்பு, வெள்ளத்தையில் இடம்பெற்றமையும் இங்கு நினைவு கூரத்தக்கது. அந்த ஏழு மாடிக் கட்டடம் சரிந்து விழுந்ததில் மூவர் உயிரிழந்ததோடு 23 பேர் இடிபாடுகளுக்குள் சிக்குண்டு காயமடைந்தமை தெரிந்ததே.

ஆகவே, கண்டி பூவெலிகட மற்றும் வெள்ளவத்தையில் மாடிக் கட்டடங்கள் சரிந்து விழுந்து ஏற்பட்ட அனர்த்தம் போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நாட்டின் எந்தப் பகுதியிலும் பதிவாகாமல் இருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இது தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறான பரந்த பார்வையே எல்லோரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. அவற்றின் ஊடாக இவ்வாறான துரதிஷ்டகரமான அனர்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# மலையக தொழிற்சங்க வரலாற்றில் சாதனையாளர் அமரர் அருள்சாமி



மலையக தொழிற்சங்க வரலாற்றில் புகழோடும் பெருமையோடும் வாழ்ந்த வரலாற்று சாதனையாளர் அமரர் அருள்சாமியின் 61வது பிறந்த தினம் நேற்று (21.09.2020) அனுஷ்டிக்கப்பட்டது.

1959ம் ஆண்டு தலவாக்கலையில் பிறந்த அவர், ஆரம்பக் கல்வியையும் உயர் கல்வியையும் தலவாக்கலை புனித பெற்றிக் கல்லூரியில் பயின்றார். நீண்ட காலம் தொழிற்சங்க அனுபவமும் நிர்வாகத்திறனும் வாய்ந்தவர் அமரர் எஸ். அருள்சாமி.

மலையக தொழிற்சங்க வரலாறு பற்றி பேசும் போது அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானுடன் தோளோடு தோள் நின்று செயற்பட்டவர்களில் அமரர் அருள்சாமி முக்கியமானவர். அவர் இ.தொ.காவில் உதவி மாவட்ட பிரதிநிதியாக, மாவட்ட பிரதிநிதியாக, தொழிலுறவு அதிகாரியாக, பிராந்திய இயக்குனராக, உபதலைவராக பல வருடங்கள் பணியாற்றியவர். அக்காலத்தில் தொழிற்சங்க பிணக்குகளையும் பிரச்சினைகளையும் அவர் கையாண்ட விதம் இ.தொ.காவுக்கு பெருமை சேர்த்ததாகவே விளங்கியது.

தனது 16வது வயதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இணைந்து கொண்ட அவர், இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளி மக்களின் தொழிற்சங்க பிதாமகன் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் தொழிற்சங்கப் பயணத்தை ஆரம்பித்தார். அரசியல், தொழிற்சங்கம் ஆகிய இரண்டு துறைகளிலும் பிரகாசித்த அமரர் அருள்சாமி 80களில் சர்வதேச மகாநாடுகளிலும் கலந்து கொண்டு பல்வேறு விடயங்களை சாதித்துக் காட்டினார்.

மிகவும் நிதானமிக்கவர் அவர். அமைதியான தோற்றமும் ஆழமான சிந்தனை உணர்வும் கொண்டவர். அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் கருத்துணர்ந்து எதனையுமே ஆக்கபூர்வமாகக் கையாள்வதில் சமர்த்தராகக் காணப்பட்டார்.

**மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சராக பதவி வகித்த பொழுது மலையக கல்வித்துறையில் பல்வேறுபட்ட அணுகுமுறைகளை கையாண்டு மலையகத்தில் கல்விப் புரட்சியை ஏற்படுத்தியவர் அருள்சாமி**

தொழிலாளர்களுக்கும் பெருந்தோட்ட சேவையாளர்களுக்கும் இடையே நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டு அவர்களின் நம்பிக்கைக்குரியவராக இயங்கியவர் அருள்சாமி.

தேசிய அரசியலில் பிரகாசித்த தலைவராக இருந்த அவர் பேச்சாளர், செயல்வீரர் என போற்றப்பட்டவர். மத்திய மாகாண சபை உறுப்பினராகவும், அதன் பின்னர் மாகாண தமிழ்க் கல்வி அமைச்சராகவும் இருந்ததுடன் பல்வேறு சமூக அமைப்புகளோடும் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

### 61வது பிறந்த தினம் நேற்று: மலையகத்தில் வழிபாடுகள்

தமிழ்க் கல்வி அமைச்சராக மத்திய மாகாணத்தில் இருந்த பொழுது மலையக கல்வித்துறையில் பல்வேறுபட்ட அணுகுமுறைகளை கையாண்டு மலையகத்தில் கல்விப் புரட்சியை ஏற்படுத்தினார்.

அமரர் ஆறுமுகன் தொண்டமானோடு இணைந்து 3179 ஆசிரியர் நியமனங்களை பெற்றுக் கொடுப்பதற்கு வழியமைத்தார். மலையக இலக்கியவாதிகளை கௌரவிக்கும் முகமாக இரு தடவை மத்திய மாகாண தமிழ் சாஹித்திய விழாக்களை நடத்தி கலைஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் பெருமை சேர்க்கும் வண்ணம் களம் அமைத்துக் கொடுத்த பெருந்தகை அருள்சாமி.

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர் சபை தலைவராகவும் பணியாற்றிய அவர், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஜனாதிபதியின் கூட்டிணைப்பு பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

மலையகத்தில் கலை கலாசாரம் மற்றும் விளையாட்டுத் துறைகளை மேம்படுத்த பல்வேறு ஆக்கபூர்மான வேலைத் திட்டங்களையும் ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இ.தொ.கா. நடத்திய தொழிற்சங்க போராட்டங்களில் அவரது பங்களிப்பு பாரிய அளவில் பரிணமித்தது. அவரே பல போராட்டங்களை நெறிப்படுத்தியிருந்தார். அவரது பேச்சு தொழிலாளர்களை உற்சாகப்படுத்துவதோடு ஊக்கப்படுத்துவதாகவும் அமைந்தது. சுமார் 50 ஆண்டு காலம் அமரர் தொண்டமானோடு பயணித்த அவர் இ.தொ.காவில் இருந்தவரை நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் பாத்திரமாக செயற்பட்டார். சாதுரியமாகவும் சாந்தமாகவும் எப்பொழுதும் காணப்பட்ட அவர், 59வது வயது வரை அனைவரினதும் கவனத்தை ஈர்த்தவராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மலையக மக்களின் சமூக அரசியல் துறைகளில் மாற்றம் ஏற்பட்டு வரும் இக்காலகட்டத்தில் அவரது வெற்றிடம் மலையக சமூகத்திற்கு மட்டுமின்றி, கிராமப்புற மக்களுக்கும் ஈடு செய்ய முடியாததாகும்.

அன்னாரின் பிறந்த தினத்தை முன்னிட்டு மலையகத்தின் பல இடங்களில் நேற்று வழிபாடுகள் நடைபெற்றன.

தேவதாஸ் சவரிமுத்து,
ஊடக இணைப்பாளர்,
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

# மட்டக்களப்பில் மணல் அகழ்வினால் அழிக்கப்படும் விவசாயக் காணிகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்காலத்தில் முப்பத்தையாயிரத்திற்கு மேற்பட்ட விவசாயக் காணிகளில் எந்தவித விவசாய பயிர் செய்கைகளிலும் ஈடுபட முடியாதளவிற்கு மணல் அகழ்வு இடம் பெற்று வருவதாக கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் இரா.துரைரெத்தினம் தெரிவித்தார்.

வாய்க்கால்களிலும், வயல் நிலங்களிலும், மேட்டுநிலங்களிலும். ஏனைய பகுதிகளிலும் ஒருசில விவசாய அமைப்பின் அனுமதிக் கடிதத்துடனும், வனவள திணைக்களத்தின் அனுமதியுடனும், அனுமதியில்லாமலும் மணல் அகழ்வது தொடர்கின்றது.

அனுமதி எடுப்பது ஒரு இடம். மணல் அகழ்வது வேறு ஒரு இடம். இப்படி பல முறைகளில் மணல் அகழ்விற்கான அனுமதி உள்ளதால் பாரிய சுற்றுச்சூழல் பாதிப்பை இம்மாவட்டம் எதிர்கொள்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.



தவறான முறையில் மணலை எடுப்பவர்கள் ஒரு சிலருக்கு இலஞ்சத்தை வழங்கி விட்டு ஒருசில பொலிசாரின் உதவியுடனும், அரசியல் பலத்துடனும் மணல் அகழ்வதற்கான செயற்பாடுகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. மாவட்டத்திலுள்ள அரச நிருவாகத்தின் ஆளுமையை மீறிச் செல்கின்றளவிற்கு மணல் அகழ்விற்கான வேலைகள் அதிகரித்துச் செல்கின்றன.

ஏனைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்களால் இங்குள்ள ஒருசிலரின் உதவியுடன் மணல் எங்கு இருக்கின்றதோ அதை அடையாளப்படுத்தி அகழ்கின்றனர்.

அப்பிரதேசங்களைச் சேர்ந்த தொழில் இல்லாத இளைஞர்கள் தங்களுடைய வறுமை காரணமாக இத்தொழிலில் ஈடுபடுத்தப் படுகின்றனர்.

மணலை அகழ்வதற்கு வேலைக்கு அமர்த்தப்படுபவர்கள் அப்பாவிகள், எதுவும் அறியாதவர்கள்.

காகிதத் தலைப்பையும், இறப்பர் முத்திரையையும் வைத்துக் கொண்டு தனிநபராக ஒருசிலர் கடிதங்களை வழங்குவதாக தெரிகின்றது என்று இரா. துரைரத்தினம் மேலும் தெரிவித்தார்.

எஸ். பேரின்பராஜா
(துறைநீலாவணை நிருபர்)

# அனைவர் அன்புக்கும் பாத்திரமான வெலிகம இஸ்மாயில் ஆசிரியர்


தான் கற்பித்த பாடசாலைகளின் மாணவச் சமுதாயமாக இருக்கட்டும், ஊர்ப் பிள்ளைகள், மதரஸா மாணவர், உற்றார், உறவினர்களின் சிறார்கள் போன்ற எல்லாச் சிறார்களுடனும் மிக அன்பாகப் பழகி வந்தவர்தான் இஸ்மாயில் ஆசிரியர். தற்போது வயோதிபர்களாக இருக்கக் கூடிய அவரது மாணவர்கள் கூட இன்றும் நன்றியுடன் ஞாபகப்படுத்துமளவுக்கு மாணவர்களுடன் மிக அன்பாக நடந்து கொண்ட ஓர் ஆசிரியராக, அதிபராக அவர் பணிபுரிந்தார்.

அவ்வாறே பெரியார்களுடன் மிக மரியாதையாக, பணிவாக நடக்கக் கூடிய பண்பு அவரிடம் நாம் கற்க வேண்டிய ஒரு சிறப்பம்சமாகக் காணப்பட்டது. சிறார்கள் உள்ள இடங்களுக்கெல்லாம் இனிப்புப் பண்டங்கள் எடுத்துச் செல்லும் பழக்கமுடையவராக அவர் காணப்பட்டார். பல்லாண்டு காலம் ஆசிரியத் தொண்டு புரிந்த அவர், ஓய்வு பெற்ற பின்னர் வெலிகம புதிய தெரு ஹிழ்ரிய்யா மத்ரஸாவில் தமிழ்ப் பாட ஆசிரியராகவும் அலுவல உத்தியோகத்தராகவும் கடமை புரிந்தார்.

சன்மார்க்க விடயங்களில் ஓர் எடுத்துக் காட்டாக விளங்கிய அவர், வெலிகம புதியதெரு முஹ்யித்தீன் பள்ளியிலும், வெலிகம கல்பொக்கக புஹாரிப் பள்ளியிலும் மிக நீண்ட காலம் அதான் கூறுபவராக இருந்தார். அதன் மூலம் முன் வரிசையிலே இமாமுக்கு மிக அண்மையிலேயே நீண்ட காலம் ஜமாஅத்துடன் தொழக் கூடிய பாக்கியத்தையும் பெற்றிருந்தார். 1937.11.18ம் திகதி வெலிகம கல்பொக்கையைச் சேர்ந்த முஹ்ஸின்_ உம்மு ஸபிய்யா தம்பதியரின் புதல்வராக இவர் பிறந்தார். முஹம்மது ஆலிம் பாத்திமா அத்யபா என்பவரை மணமுடித்த இவருக்கு மூன்று ஆண் பிள்ளைகளும், இரு பெண் பிள்ளைகளும் உள்ளனர்.

பயிற்றப்பட்ட ஆசிரியர் தரம் 1 ஐச் சேர்ந்த இவர், தங்காலை கிந்தோட்டை ஸாஹிரா கல்லூரி, மாத்தறை தாருல் உலூம் ம.வி, கப்புவத்தை அந்நூர் ம.வி, வெலிகம அறபா தேசிய பாடசாலை ஆகியவற்றில் ஆசிரியராக 14 வருடங்களும், அதிபராக 14 வருடங்களும் சேவை செய்துள்ளார்.

ஆசிரியராக, அதிபராக இவர் கடமையாற்றிய சகல பாடசாலைகளிலும் கல்வித்துறை மாத்திரமன்றி ஏனைய சகல துறைகளிலும் ஒரு மாபெரும் வழிகாட்டியாக, செயற்பாட்டாளராக பணியாற்றினார். குறிப்பாக இல்ல விளையாட்டுப் போட்டிகள், மாணவர் மன்றங்கள், கல்விச் சுற்றுலாக்கள் போன்ற சகல பிரத்தியேக செயற் திட்டங்களையும் முன்னின்று நடத்தினார்.



இவர் வெலிகம கப்புவத்தை முஸ்லிம் வித்தியாலயத்தில் அதிபராக இருந்த காலத்திலேயே, அப்பாடசாலை 'அந்நூர் மகாவித்தியாலயம்' என்ற பெயரில் தரமுயர்த்தப்பட்டது. அத்துடன் 125 ஆம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டதுடன், பாடசாலைக்கு பல்வேறு வளங்களும் இவரது காலத்திலேயே பெற்றுக் கொடுக்கப்பட்டன.

வெலிகம அறபா மகாவித்தியாலயத்தில் இவர் அதிபராக இருந்த காலத்திலேயே, இப்பாடசாலை 'அறபா தேசிய பாடசாலை' என தரமுயர்த்தப்பட்டது.

அத்துடன் 'தேசிய மீலாத் விழா' அறபாவில் கொண்டாடப்பட்டது. மூன்று மாடிக் கட்டடம், உயர்தர விஞ்ஞான ஆய்வுகூடம், நிர்வாக அலகு, மைதான மேடை பூரணமாக்கல், தொலைபேசி வசதி போன்ற பல வளங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

சிறிது காலமாக நோயுற்றிருந்த இவர் அண்மையில் காலமானார். ஊருக்கு ஒரு முன்மாதிரியான ஆசானாகத் திகழ்ந்த அன்னாரை இங்குள்ள அன்பர்கள் என்றும் அன்புடன் நினைவு கூருகின்றனர்.

கலாபூஷணம்
எம்.ஏ.ஹபீபுர் ரஹ்மான்
வெலிகம

# மக்களின் ஆணைக்கேற்ப ஜனாதிபதிக்கு அதிகாரத்தை வழங்குதல் வேண்டும்

## டிலான் பெரேரா எம்.பி. பேட்டி

**‘ நாட்டை மீளக்கட்டியெழுப்ப கிடைத்துள்ள சந்தர்ப்பம் வீணாகி விடலாகாது. எதிர்க் கட்சியினருக்கு தேவை நாட்டை மேம்படுத்துவது அல்ல. நாட்டை நிலையற்ற தன்மைக்கு உள்ளாக்கி அழிப்பதாகும். அதற்கு 19வது திருத்தம் தேவையான சந்தர்ப்பத்தை வழங்குகிறது ’**

**‘ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நம்பித்தான் மக்கள் தேர்தலில் வாக்குகளை அளித்தார்கள். மக்கள் அளித்த ஆணைக்கு ஏற்ப நாம் அவருக்கு அதற்கான அதிகாரத்தை வழங்க வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் நாட்டை மீளக் கட்டியெழுப்ப கிடைத்துள்ள சந்தர்ப்பம் வீணாகி விடும் ’.**



இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா எமக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

**கேள்வி: பத்தொன்பதாவது திருத்தத்துக்கு நீங்கள் உள்ளிட்ட கடந்த கால பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்த பலர் ஆதரவு வழங்கியுள்ளீர்கள். நான்கு வருடங்களுக்கு முன்னர் அதற்கு ஆதரவு வழங்கிய நீங்களே இருபதாவது திருத்தத்துக்கு நிபந்தனையின்றி ஆதரவு வழங்குகின்றீர்கள். இது பற்றிய உங்களது கருத்தென்ன?**

**பதில்:** 19 ஆவது திருத்தத்தை ஏற்படுத்தியதன் முக்கிய நோக்கம் நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக நீக்கி அல்லது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை பெயரளவில் நியமித்து பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறக் கூடிய அரசியலமைப்பை உருவாக்குவதாகும். ஆனால் 19 ஆவது திருத்தத்தின் சில பிரிவுகளுக்கு நீதிமன்றத்தின் அனுமதி கிடைக்கவில்லை. அதனால் 19 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற அன்றிருந்த அரசாங்கத்தால் இயலவில்லை. அதனால் அன்றிலிருந்தே 19 ஆவது திருத்தம் குறைபாடுகளுடனேயே காணப்பட்டது. அன்றில் இருந்து ஜனாதிபதிக்கு மேற்சட்டை கிடைத்தது . பிரதமருக்கு காற்சட்டை வழங்கப்பட்டது. இந்நிலைமை காரணமாக முழு நாடுமே கேலிக்குரியதாக மாறியது. நாட்டின் அதிகாரம் இரண்டு மையப் புள்ளிகளை சுற்றிவந்தது. அது உண்மையில் ஒரு நாட்டிற்கு நல்ல நிலைமை அல்ல. ஜனாதிபதி, பிரதமரின் மோதலால் நாடு பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. சஹ்ரான் போன்ற பயங்கரவாதிகள் இந்நிலைமை காரணமாகவே சுதந்திரமாகச் செயற்பட்டார்கள். இவை எல்லாவற்றின் மூலம் தெரியவருவது என்னவென்றால் 19வது திருத்தம் வெற்றி பெறவில்லை என்பது ஆகும். அனைத்தையும் நியாயமாக ஆராய்ந்தே 20ஆவது திருத்தத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என எண்ணினோம்.

**கேள்வி: நீங்கள் 20ஆவது திருத்தம் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்கும் என்று எண்ணுகிறீர்களா?**

**பதில்:** நான் அப்படிச் சொல்ல அவசரப்பட மாட்டேன். ஆனால் மக்கள் ஜனாதிபதிக்கு 14 இலட்சம் மேலதிக வாக்குகளை வழங்கியது 19 ஆவது திருத்தத்தை நீக்குவதற்காகத்தான். அதன் பின்னர் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் அதற்காகவே வழங்கினார்கள். அதனால் 19 ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு நாட்டு மக்களின் பெரும் ஆதரவு கிடைத்துள்ளது. நாம் அந்த கருத்துக்கு மதிப்பளித்து 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்குவது என தீர்மானித்தோம். ஜனாதிபதியை நம்பித்தான் மக்கள் தேர்தலில் வாக்குகளை அளித்தார்கள். நாம் அவருக்கு அதற்கான அதிகாரத்தை வழங்க வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் நாட்டை மீளக் கட்டியெழுப்ப கிடைத்துள்ள சந்தர்ப்பம் வீணாகி விடும்.

**கேள்வி: ஆனால் எதிர்க் கட்சிகள் இந்தத் திருத்தத்தின் மூலம் நாட்டில் சர்வாதிகார நிலைமை உருவாகும் என்று கூறுகின்றனவே...**

**பதில்:** எதிர்க் கட்சியினருக்கு தேவை நாட்டை மேம்படுத்துவது அல்ல. நாட்டை நிலையற்ற தன்மைக்கு உள்ளாக்கி அழிப்பதாகும். அதற்கு 19வது திருத்தம் தேவையான சந்தர்ப்பத்தை வழங்குகிறது. இன்று எதிர்க் கட்சியினர் பலவீனமடைந்து உள்ளதால் இந்நிலைமை அவர்களுக்கு சாதகமாக உள்ளது. அரசாங்கம் 19 ஆவது திருத்தத்திடன் நாட்டை நடத்திச் சென்று நாடு பாதிப்படைந்து மக்களின் அதிருப்தியை சம்பாதிக்க வேண்டும் என எண்ணுகின்றார்கள். அப்படி இல்லாமல் ஜனநாயகம் மீறப்படும் எனக் கூறுவது பொய்யாகும்? ஜனாதிபதி புதிய கருத்துக்களை உடைய நாட்டிற்கு ஏதேனும் நனமை செய்ய வேண்டும் என்ற எண்ணம் உடைய தலைவராவார். பொதுமக்கள் அவருக்கு இரண்டு முறைவாக்குகளை அளித்துள்ளார்கள். நாம் பெரும்பான்மையான மக்களின் கருத்தின்படியே செயலாற்றுகின்றோம் சர்வாதிகளாகவல்ல.

**கேள்வி: புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்க வேண்டும் என்ற கருத்தும் அரசாங்க தரப்பில் ஏற்பட்டுள்ளதா?**

**பதில்:** 78 அரசியலமைப்பு 19 தடவை திருத்தப்பட்டுள்ளது. தற்போது 19வது தடவையாகத் திருத்தப்பட்டுள்ளது. 20 வது தடவையாகவும் திருத்தப்படவுள்ளது. இதற்கு மேலும் இந்த அரசியலமைப்புக்கு ஒட்டுப் போட முடியாது. அதனால் நிச்சயமாக நாட்டுக்கு புதிய அரசியல் அமைப்பு ஒன்று தேவையாகும். அதனை விரைவாக உருவாக்க முடியாது. எதிர்க் கட்சியினரின் கருத்துகள் மற்றும் பொதுமக்களின் கருத்துகளையும் அறிய வேண்டும். 17 ,18, 19 ஆகிய எல்லாவற்றிற்குமே முன்னேற்றகரமான யோசனைகளை முன்வைக்க வேண்டும்.

எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கி நாட்டுக்கும் மக்களுக்கும் நல்ல ஆரம்பத்தை வழங்க வேண்டும். எதிர்க்கட்சியினர் உட்பட மற்றைய கட்சியினர் அனைவரின் ஆதரவும் அதற்குக் கிடைக்கும் என நம்புகிறேன்.

**கேள்வி: 20ஆவது திருத்தத்துக்கு முக்கியமாகக் கூறப்படும் விடயம் இரட்டைக் குடியுரிமை உள்ளவர்களுக்கு தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்ற திருத்தம் ஆகும். இது ஒரு நபரை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள பிரிவு என குற்றஞ்சாட்டப்படுகின்றது அல்லவா?**

**பதில்:** அக்குற்றச்சாட்டு முற்றிலும் தவறானதாகும். 78 அரசியலமைப்பின் 26, 2 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: " இலங்கையரான ஒருவருக்கு தனது குடியுரிமை பரம்பரை மூலம் கிடைக்கப் பெற்றதாக இருந்தாலும் சட்டத்துக்கு அமைய பதிவின் மூலமும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இலங்கைப் பிரஜை என விபரிக்கப்படலாம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரட்டைக் குடியுரிமை உள்ளவர்களுக்கு நாட்டில் வாக்குகளை அளிக்க முடியும் என்றால் அவரால் ஏன் தேர்தலில் போட்டியிட முடியாது? யுத்த காலத்தில் பாதுகாப்புச் செயலாளராக கோட்டாபய ராஜபக்ஷ பெரும் பணியாற்றினார்.

(06 பக்கம் பார்க்க)

உதித்த குணவர்தன ...
தமிழில்: வீ.ஆர்.வயலட்

# பறவைகளின் வாழ்க்கை கோலத்தில் வியப்புகள், அற்புதங்கள் ஏராளம்

உலகில் பல்வேறு விதமான உயிரினங்கள் உள்ளன. அவற்றில் பறவைகளும் ஒரு வகை. இவை பார்ப்பதற்கு மிக சாதாரண உயிரினமாக விளங்கினாலும் அவற்றில் பல்வேறு வகைகளும் விதங்களும் உள்ளன. கைவிரல் அளவு முதல் பெரிய விலங்குகளின் அளவு வரையான உடலமைப்பைக் கொண்ட பறவைகள் இருக்கின்றன.

இவை பறவை என்பதற்காக எப்போதும் பறந்து கொண்டிருப்பவை அல்ல. அதே போன்று அவை எல்லாம் மரக்கிளைகளிலும் மரப் பொந்துகளிலும் மாத்திரம் கூடுகட்டி வாழ்பவையுமல்ல. மாறாக நிலத்தில் மாத்திரம் கூட வாழக் கூடியவையும் உள்ளன.

இந்த உயிரினத்தை நன்கு அவதானித்தால் அவற்றின் நடத்தைகளும் செயற்பாடுகளும் இயங்கு நிலையும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவையாகவும் மனிதனை பிரமிக்கச் செய்யக் கூடியனவாகவும் இருப்பதைக் காண முடியும்.

பொதுவாகப் பறவைகள் தம் உடலிலுள்ள இறகுகளை அடிக்கடி சரி செய்து கொண்டிருக்கும். ஏனெனில் அவை சக பறவைகளுடன் சண்டையிட்டு, விளையாடும் போதும் இரை தேடும் போதும் அச்சிறகுகள் இடம் மாறும். அதனால் அவற்றின் இறகுகள் ஒழுங்கற்ற அமைப்பைப் பெறும். அவற்றை சீரமைத்துக் கொள்ளத் தவறினால் அப்பறவைகளின் பறக்கும் திறனில் வீழ்ச்சி நிலை ஏற்படும். அதனைத் தவிர்த்துக் கொள்வதற்காகவே அவை இறகுகளை அடிக்கடி ஒழுங்குபடுத்தி சீரமைத்துக் கொள்கின்றன.

அதேநேரம் நாரை, கொக்கு போன்ற சில பறவைகள் தவம் நிற்பது போன்று ஒற்றைக்காலில் நிற்பதை அவதானிக்கலாம். இன்னும் சில பறவைகள் ஒற்றைக்காலிலேயே துள்ளி துள்ளி பயணிக்கும். அடுத்த காலை அவை இறகுகளுக்குள் மறைத்து வைத்துக் கொண்டிருக்கும். இதற்கான காரணம் என்னவெனில் பறவைகளின் கால்களில் இறகுகள் இருப்பதில்லை. அதனால் அவற்றின் உடலின் வெப்பநிலை கால்களின் ஊடாக இழக்கப்படும். அதனைத் தவிர்ப்பதற்காகவே இவ்வகைப் பறவைகள் இவ்வாறு செயற்படுகின்றன. ஏனெனில் உலகிலுள்ள உயிரினங்களில் பறவைகள் தான் அதிக உடல் உஷ்ணத்தைக் கொண்டவையாக விளங்குகின்றன. உஷ்ணம் பறவைகளுக்கு இன்றியமையாதது. அவற்றின் சமிபாட்டுக்கும் பறத்தல் உள்ளிட்ட இதர செயற்பாடுகளுக்கும் வெப்பநிலை பெரிதும் உதவக் கூடியது. அதனால் அந்த உஷ்ணம் இழக்கப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளவே அவை இவ்வாறு நடந்து கொள்கின்றன.

பறவைகள் தொடர்பில் தமிழ்நாடு 'பறவைக் கூடு' அமைப்பினர் ஒழுங்கு செய்திருந்த இருநாள் (2020 செப்டம்பர் மாதம்) இணையவழி செயலமர்வில் பறவையியல் நிபுணர்களான செழியன் ஜா, சந்துரு வெங்கட்ராமன், விஷ்ணு சங்கர், ஆர். அரவிந்த் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டதோடு ஏ.அனந்த், நிர்மல்குமார், எஸ்.பாலாஜி ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாகவும் செயற்பட்டனர். இச்செயலமர்வில் திரட்டப்பட்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள கட்டுரை

மேலும் பறவைகளின் உடலில் பேன் (bird lice), மைட்ஸ் (bird mites), டிப்ஸ் ஆகிய மூன்று வகையான ஒட்டுண்ணிகள் காணப்படும். இவற்றில் பேன் பறவைகளின் உடலில் இரத்தை உறிஞ்சி குடித்தபடியே உயிர் வாழும். ஏனைய இரு ஒட்டுண்ணிகளும் பறவைகளின் இறகுகளை சேதப்படுத்தும். ஆனால் இவ்வாறான ஒட்டுண்ணிகள் மனிதனுக்கு தொற்றினால் அவன் அவற்றை கைகளால் சொறிந்தோ மருந்து பொருட்களைப் பாவித்தோ கட்டுப்படுத்தி அப்புறப்படுத்தி விடுவான்.

ஆனால் பறவைகளால் அவ்வாறு செய்ய முடியாது. அவற்றின் அலகினால் உடலின் குறிப்பிட்டளவு தூரம் தான் சொறிய முடியும். ஆனால் முழு உடலையும் அவ்வாறு சொறிய முடியாது. அதனால் இவ்வகை ஒட்டுண்ணிகளை அப்புறப்படுத்தவென பறவைகள் பலவித செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. அவற்றில் இறகுகளை அடிக்கடி சரிப்படுத்துவதும் ஒன்றாகும்.

அதேநேரம் குளிப்பதில் அதிக ஈடுபாடு காட்டும் பண்பை பறவைகள் கொண்டிருக்கின்றன. இதற்கான பிரதான காரணம் அவற்றின் உடல் உஷ்ணத்தை சமநிலைப்படுத்துவதும், உடலில் காணப்படும் ஒட்டுண்ணிகளை வெளியேற்றி அப்புறப்படுத்துவதுமாகும். குறிப்பாக பறவைகளின் உடலில் வியர்வைச் சுரப்பிகள் கிடையாது. அதனால் அவை குளிப்பதன் ஊடாக அவற்றின் உடல் உஷ்ணம் சமநிலையில் பேணப்பட பெரிதும் உதவுகின்றது. அதேதேரம் சில பறவைகள் குளித்த பின்னர் மணலில் புரண்டு மணல் குளிப்பிலும் ஈடுபடும். தம் உடலில் காணப்படும் டிப்ஸ், மைட்ஸ் நுண்ணுயிரிகளை வெளியேற்றவென இவ்வாறான உத்தியை அவை கையாள்வதாக பறவையியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

சில பறவைகள் தமது இரு சிறகுகளையும் நன்கு அகல விரித்து சூரிய ஒளி நன்குபடக் கூடிய வகையில் மணலில் படுத்திருக்கும் அல்லது சூரிய வெளிச்சம் நேரே படக் கூடிய வகையில் இருக்கும். இதன் விளைவாக பறவைகளின் இறகுகளுக்குள் காணப்படும் மைட்ஸ், டிப்ஸ் நுண்ணுயிரிகள் வெளியே வரும். அப்போது அவற்றை பறவைகள் அகற்றிக் கொள்ளும்.

அதேவேளை வேறு சில பறவைகள் சில எறும்புப் புற்றுகள் காணப்படும் இடங்களுக்குச் சென்று அங்கு இறக்கையை விரித்து அமர்ந்து கொள்ளும். அதாவது போமிக் அமிலத்தைச் சுரக்கக் கூடிய எறும்புகள் காணப்படும் புற்றுகளிலேயே இப்பறவைகள் இருக்கும். இச்சமயம் பறவையின் உடலில் எறும்புகள் ஏறி விடும். அங்கு மைட்ஸ், டிப்ஸ் நுண்ணுயிரிகளை சந்திக்கும் போது அவை போமிக் அமிலத்தைச் சுரக்கும். அந்த அமிலம் இந்நுண்ணுயிரிகளுக்கு ஒவ்வாததாகும். அதன் காரணத்தினால் அந்நுண்ணுயிரிகள் பறவைகளின் உடலின் இறகுகளுக்கு வெளிப்பகுதிக்கு வரும். அப்போது அவற்றை பறவைகள் அப்புறப்படுத்தி விடும். குறிப்பாக ஜெ (jay) இனப் பறவைகள் இவ்வகை எறும்புகளை தம் உடலிலேயே வைத்துக் கொண்டிருப்பது ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இவை இவ்வாறிருக்க, பறவைகள் உடல் உஷ்ணத்தை பேணிக் கொள்ளவும் இரை தேடவும் இனப்பெருக்கத்திற்காகவுமென புலம்பெயர்ந்து செல்லும் பண்பைக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக குளிர்காலத்தில் அவை இவ்வாறு புலம் பெயருகின்றன. இதன் நிமித்தம் கண்டம் விட்டு கண்டம், வட துருவத்திலிருந்து தென் துருவம் என்றபடி புலம்பெயர்வு இடம்பெறுகின்றது. இதன் நிமித்தம் ஆயிரக்கணக்கான மைல்கள் தூரம் பறந்து அவை புலம்பெயர்கின்றன. ஏனெனில் குளிர்காலத்தில் அவற்றின் இரைகள் பனியில் உறைந்து விடுவதும், அவற்றின் உடல் வெப்பநிலைக்கு குளிர்காலம் சவாலாக அமைவதும் அவற்றின் புலம்பெயர்வுக்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன. என்றாலும் தம் பூர்வீக பிரதேசத்தில் குளிர்காலம் முடிவடைந்ததும் அவை இருப்பிடத்திற்குத் திரும்பி விடும்.

அந்த வகையில் ஆர்ஜென்டீனா நாட்டில் காணப்படும் பார்ன் சுவாலா என்ற பறவையானது ஒவ்வொரு வருடமும் இனப்பெருக்கத்திற்காக பெப்ரவரி மாதம் புறப்பட்டு மார்ச் மாதம் சுமார் 8,300 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அமெரிக்க கலிபோர்னியா பகுதிக்குச் செல்கின்றது. அப்பறவை இனப்பெருக்கம் நிறைவுற்றதும் தம் குஞ்சுகளுடன் ஒக்டோபரில் புறப்பட்டு தம் பூர்வீக இடத்தை வந்தடைகின்றது.

இப்பறவையானது தனது பயணத்தை ஆரம்பிக்கும் போது தன் அலகில் ஒரு சிறுகுச்சி துண்டொன்டொன்றை கவ்வியபடியே புறப்படும். இப்பறவை கடற்பரப்பிலேயே பயணப் பாதையை அமைத்துக் கொண்டிருக்கின்றது. இப்பயணத்தின் போது அதற்கு பசி ஏற்படும் போதும், ஓய்வு தேவைப்படும் போதும் கடற்பரப்புக்கு தாழ்வாகப் பறந்து தனது அலகிலுள்ள குச்சித் துண்டை கடற்பரப்பின் மேல் போட்டு அதன் மேல் நின்று ஓய்வு எடுக்கும். அப்போது தனக்கான இரையையும் தேடிக் கொள்ளும். அதன் பின்னர் பயணத்தை ஆரம்பிக்கும் போது மீண்டும் குச்சித் துண்டை அப்பறவை தன்னுடன் எடுத்துச் செல்லும்.

இனப்பெருக்கத்திற்காகப் புலம்பெயரும் இப்பறவை ஓய்வு எடுக்கவும் இரை தேடவும் பயன்படுத்தும் உத்தி அற்புதமானது. அதேபோன்று தனது உடலிலுள்ள ஒட்டுண்ணிகளை அப்புறப்படுத்தவென போமிக் அமிலம் சுரக்கும் எறும்புகளைத் தேடி உடலில் ஏற்றி மேற்கொள்ளும் நடவடிக்கை அதிசயம் மிக்கது. புலம்பெயரும் பறவைகள் தம் பூர்வீக இடங்களை விட்டு ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள இடங்களுக்குச் சென்று பல மாதங்கள் தங்கி இருந்து விட்டு மீண்டும் பூர்வீக வாழிடங்களுக்கு சரியாக திரும்பி சென்றடைகின்றன. அத்தோடு இப்புலம்பெயர்வின் போது பல ஆயிரக்கணக்கான மைல்கள், பல நாட்கள் என்றபடி பயணிக்க நேருகின்ற போதிலும் அவை வருடாவருடம் அதனைத் தவற விடுவதில்லை.

இவ்வாறு பல்வேறு விதமான நுணுக்கமான வாழ்க்கைக் கோலம், நடத்தைகள், செயற்பாடுகளை பறவைகள் கொண்டிருக்கின்றன. அவற்றை அவை எவ்வாறு கற்றுக் கொள்கின்றன என்பதுதான் ஆச்சரியத்தின் உச்சம்.

## பறவை ஆர்வலர்கள்



செழியன் ஜா



சந்த்ரு




விஷ்ணு சங்கர்



ஆர்.அரவிந்த்



குச்சி சகிதம் சமுத்திரம் தாண்டும் பறவை





ஒற்றைக்காலில் நாரைகள்





ஒற்றைக்காலில் தாவி ஓடும் பறவை



பறவைப் பேன்



மைற்ஸ் என்ற ஒட்டுண்ணி

**நாரைகள் ஒற்றைக் காலில் தவமிருப்பது ஒரு மர்மம்; சில பறவைகள் எறும்புப் புற்றைத் தேடிச் செல்வது புத்திசாலித்தனமான உத்தி; கண்டம் விட்டு கண்டம் செல்லும் பறவைகள் உணவுக்கும், ஓய்வுக்கும் கையாளும் தந்திரம் மற்றொரு அதிசயம்!**



மர்லின் மரிக்கார் ...

## கொழும்புக்கு நேற்று...

இன்று நடைபெறவுள்ள பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்காகவே நேற்று (திங்கட்கிழமை) சந்திரகாந்தன் இவ்வாறு அழைத்து வரப்பட்டுள்ளார். ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் 2015ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்திரகாந்தன் விசேட அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்புடன் இவ்வாறு அழைத்து வரப்பட்டுள்ளார்.இவர் அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்கினைப்பெற்று பாராளுமன்ற தெரிவுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெள்ளிக்கிழமைகளில்...

அணியப்பட வேண்டிய ஆடை தொடர்பான விதிமுறைகள் எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இது சட்டம் இல்லை எனவும் தேசிய கைத்தொழிலை ஊக்குவிக்க தேசிய ஆக்கங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். பத்திக் ஆடைகளை அரச ஊழியர்கள் முதல் பாராளுமன்ற உறுப்பினர்கள் வரை அனைவர் மத்தியில் பிரபலப்படுத்தவும் அமைச்சு திட்டமிட்டுள்ளது.பத்திக் ஆடை இறக்குமதியை நிறுத்தி உள்ளூர் பத்திக் உற்பத்திகளை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

## 20ஆவது திருத்தச்...

20ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் இரண்டாவது வாசிப்பிற்காக விவதாத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என நாடாளுமன்ற செயலாளர் நாயக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இரண்டாவது வாசிப்பு நிறைவடைந்த பின்னர் வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளதுடன், அதில் நாடாளுமன்றத்தில் மூன்றின் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் செயற்குழு கூட்டத்தின் போது 20ஆவது திருத்தத்தின் அனைத்து பிரிவுகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து திருத்தங்கள் இருப்பின் அதனை தெரிவிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படும் எனவும் நாடாளுமன்ற செயலாளர் நாயக அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து, மூன்றாவது வாசிப்பின்போது வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளதுடன், அதில் நாடாளுமன்றத்தில் மூன்றின் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

இறுதியாக சபாநாயகர் அரசியலமைப்பிற்கு கையொப்பமிட்டதை அடுத்து அது சட்டமாக மாறும் என பாராளுமன்ற செயலாளர் நாயக அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## கிளிநொச்சியில் நேற்று...

பகுதியில் சென்றபோது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கிளிநொச்சி மலயாளபுரம் பகுதியை சேர்ந்த 21 வயதுடைய யோகேந்திரன் அயந்தன் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர். உயிரிழந்தவரின் சடலத்தை புகையிரத ஊழியர்கள் கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

## வெளிநாடுகளிலிருந்து...

தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவுஸ்திரேலியாவில் இருந்து 288 பேரும், டுபாயில் இருந்து 420 பேரும், சென்னையில் 6 பேரும் மற்றும் ஜப்பானில் இருந்து 10 பேரும் நாடு திரும்பியுள்ளனர்.

இவ்வாறு வருகை தந்த அனைவரும் மத்தள மற்றும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.இவர்கள் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் ஹோட்டல்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் மேலும் 12 பேர் கொரோனா வைரஸில் இருந்து பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு நேற்று (21) சென்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதுவரையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 3,100 ஆக அதிகரித்துள்ளது. இலங்கையில் இதுவரை 3287 பேர் கொரோனா வைரஸ் (கொவிட் 19) தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் 13 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா காரணமாக...

வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த 28 பேரில் இரண்டு வீட்டுப் பணிப்பெண்களும் அடங்குகின்றனர். அதேநேரம், உயிரிழந்தவர்களின் சடலங்கள் அந்நாட்டினதும் சர்வதேச சட்டத்தின்படியும் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, நாட்டில் நேற்றைய தினம் 4 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இறுதியாக தொற்று உறுதியான மூவரும் சவுதி அரேபியாவில் இருந்து நாடு திரும்பியவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இத்தாலியில் இருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 287 ஆக அதிகரித்துள்ளது.

இதேநேரம், நாட்டில் இதுவரை கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 88 ஆக பதிவாகியுள்ளது.

## புலம்பெயர் அமைப்புகள்...

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், நாட்டில் பிரதான இரு கட்சிகளும் ஆட்சியமைக்கும்போது தங்களுக்குத் தேவையான விதத்தில் அரசியமைப்பினை திருத்தம் செய்கிறார்கள் .இதனால் அரசாங்கத்துக்கு நன்மை ஏற்பட்டதே தவிர நாட்டுக்குஎவ்விதஅபிவிருத்திகளோ மாற்றங்களோ ஏற்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியமைப்பின் 17ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கிய அரசியல்வாதிகள் 18ஆவது திருத்திற்கும், 19ஆவது திருத்திற்கும் ஆதரவு வழங்கினார்கள் எனவும் அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் கடந்த காலங்களில் அரச மற்றும் சமூக மட்டத்தில் பிரதான பேசுபொருளாக காணப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

எனினும், 19ஆவது திருத்தத்தை ஆதரித்த அரசியல்வாதிகள் அரசியல் தேவைகளுக்காக அதனை எதிர்க்கவும் ஆரம்பித்தார்கள்.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை இரத்துச்செய்து புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதாக ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கிய நிலையில் தற்போது 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தத்தில் இரட்டைக் குடியுரிமையினைக் கொண்டவர்கள் தேர்தலில் போட்டியிட முடியும் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் நாட்டில் இல்லாதொழிக்கப்பட்டாலும் அவர்களின் பிரிவினைவாதக் கொள்கையானது உலகம் முழுவதும் வியாபித்துள்ளது .இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் அரசியலில் பங்குப்பற்ற முடியும் என்பதை புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் நிச்சயம் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும்.சீனர்கள், இந்தியர்களும் எதிர்காலத்தில் இலங்கை பாராளுமன்றில் உறுப்பினராக செயற்படுவார்கள் என்பதில் எவ்வித ஆச்சரியமும் கிடையாது என்ற நிலையில் அரசாங்கம் இரட்டைக் குடியுரிமை விவகாரத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என அவர் கூறினார்.

## கஜேந்திரகுமார், கஜேந்திரன்...

விசாரணைக்கு ஒத்துழைப்பேன் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச்செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, அவர்கள் மீதும் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று சட்டத்தரணி வி.மணிவண்ணன் கேட்டுள்ளார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அடிப்படை உறுப்பினர் தகுதி நிலையிலிருந்து சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை இடைநிறுத்துவதாக கடந்த 5ஆம் திகதி அறிவித்த அந்தக் கட்சியின் தலைவர், அதுதொடர்பில் மணிவண்ணனுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும்,கடிதத்தில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு பதிலளிக்க மணிவண்ணனுக்கு 14 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதற்குள் அவர் தனது பக்க நியாயங்களை கட்சிக்கு அறிவிக்க வேண்டும். அதன்பின்னர் கட்சியால் அவர் மீது முன்வைக்கப்படும் 6 குற்றச்சாட்டுத் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் கட்சியினால் அனுப்பப்பட்ட கடிதத்துக்கு சட்டத்தரணி வி.மணிவண்ணன் தனது பதில் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார். கட்சியினால் முன்னெடுக்கப்படும் ஒழுக்காற்று விசாரணைக்கு ஒத்துழைப்பேன். ஆனால் ஓய்வு பெற்ற நீதிபதி அல்லது ஒழுக்காற்று விசாரணையை நடத்தும் முன் அனுபவமும் கட்சிசாராத சுயாதீன அதிகாரியாக உள்ள குறைந்தது மூவர் கொண்ட குழு முன்னிலையில் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கேட்டுள்ளார்.

அத்தோடு தன் மீதான ஒழுக்காற்று விசாரணை பொது மக்கள், ஊடகங்கள் முன்னிலையில் பகிரங்கமாக இடம்பெறவேண்டும் என்றும் சட்டத்தரணி வி. மணிவண்ணன் வலியுறுத்தியுள்ளார்.

## பதினோராவது நாளாகவும்...

அறிவித்துள்ளனர்.

கெலனிவெளி பிளான்டேசன் நிர்வாகத்துக்குட்பட்ட நானுஓயா உடரதல்ல தோட்டத்தில் சுமார் 275 தோட்ட தொழிலாளர்கள் தொழில் புரிந்து வருகின்றனர்.

எனினும், இவர்களுக்கான தொழில்சார் உரிமைகளையும், சலுகைகளையும் தோட்டத்துரை (முகாமையாளர்) திட்டமிட்ட அடிப்படையில் தடுத்து வருகிறார். ஓராண்டு காலமாக அவரின் அடக்குமுறை தொடர்வதாகவும், அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், நீதி கோரியுமே கடந்த 12 ஆம் திகதி முதல் போராட்டத்தில் ஈடுபட்டுவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறியதாவது,

" பாடசாலை பிள்ளைகளை பாதுகாப்பாக அழைத்து செல்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த 'கங்காணி'மாருக்கு பெயர் போடப்பட்டு நாட் சம்பளம் வழங்கப்பட்டது.

இவ்வாறு நியமிக்கப்பட்டிருந்த இரு கங்காணிகளை தோட்டதுரை நீக்கிவிட்டு, குறைந்த சம்பளத்துக்கு இருவரை நியமித்துள்ளார்.

இதனை ஏற்கமுடியாது. முன்னர் இருந்த நடைமுறை தொடரவேண்டும்.

8 மணிநேரம் வேலைசெய்தாலும் அரைநாள் பெயரே போடப்படுகின்றது. கடும் மழையிலும் 18 கிலோ பறிக்குமாறு அழுத்தம். ஒரு கிலோ குறைந்தாலும் அரை நாள் பெயர். கொழுந்து அளவிடும் கருவியும் தொழில்நுட்பத்தில் இயங்குவது. இதனால் எமது உழைப்பு களவாடப்படுகின்றது.

அதாவது குறைந்த அளவீடு போடப்படுகின்றது. இவற்றையும் நாம் எதிர்க்கின்றோம்.

தேர்தல் தினத்தில் வாக்களிக்க சென்றிருந்தோம். அன்றைய தினமும் அரை நாள் பெயரே போடப்பட்டுள்ளது. கேட்டால், அரசாங்கத்திடம் கேட்குமாறு துரை எச்சரிக்கின்றார். எமக்கு அன்றைய நாளுக்கான முழு சம்பளம் வேண்டும். இவ்வாறு சட்டரீதியாக, தொழில் ரீதியாக எமக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

தோட்டதுரையின் செயற்பாடே இதற்கு காரணம். தொழிற்சாலையும் மூடப்பட்டுள்ளது. இதனால் வெளி தோட்டத்துக்கே கொழுந்து அனுப்படுகின்றது. ஓய்வூதியம் பெற்றவர்களை அழைத்து, கொழுந்து உள்ள மலைகளில் கொழுந்து கொய்து அவர்களுக்கு குறைந்த ஊதியம் வழங்கப்படுகின்றது.

தோட்டத்தில் வேலைசெய்யும் எம்மை, கொழுந்து இல்லாத மலைகளுக்கு சென்று பறிக்குமாறு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது." எனவும் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## திலீபன் நினைவேந்தல்...

பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட், மாநகர சபை உறுப்பினர் வரதராசா பார்த்திபன், முன்னாள் மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சட்டத்தரணிகள் வி.மணிவண்ணன், க.சுகாஷ், அரசியல் செயற்பாட்டாளர் க.விஷ்ணுகாந்த் உள்ளிட்ட 20 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

திலீபன் நினைவேந்தல் நடத்துவதன் ஊடாக இலங்கை குற்றவியல் நடைமுறை சட்டக்கோவை 106ஆம் பிரிவின் கீழ் பொதுக் குழப்பம் ஏற்படும் என்று பொலிஸாரால் ஏற்கனவே பி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு அழைக்கப்பட்டது. பொலிஸாரின் விண்ணப்பம் மன்றினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு திலீபன் நினைவேந்தலுக்கு தடைவிதித்து உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கில் பிரதிவாதிகள் 20 பேரையும் நீதிமன்றில் நேற்று முன்னிலையாவதற்கு அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்குமாறு உத்தரவிட்டு நீதிமன்றம் வழக்கை ஒத்திவைத்திருந்தது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் இ.ஆனோல்ட் சார்பில் சட்டத்தரணி கணதீபன் முன்னிலையாகினார். யாழ்ப்பாணம் மாநகர சபை சார்பில் வழக்கின் சான்றுப்படுத்தப்பட்ட ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன. அவை கிடைக்காத நிலையில் மறு தவணை ஒன்றை வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு சட்டத்தரணி கோரினார்.

அத்துடன், மூத்த சட்டத்தரணிகள் என்.சிறிகாந்தா, வி.திருக்குமரன் மற்றும் சட்டத்தரணி சுகாஷ் ஆகியோர் இலங்கை குற்றவியல் நடைபடி சட்டக்கோவையின் 106 பிரிவின் 4ஆம் உப பிரிவின் கீழ் இந்த வழக்கை பொலிஸார் தாக்கல் செய்தமை தவறு என்று சட்ட ஏற்பாடுகள், முற்தீர்ப்புகளை வைத்து நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தனர். திலீபன், விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர் என்பதை நிரூபிக்கும் வகையில் அவரது வாழ்க்கை வரலாற்றை யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமர்ப்பணம் செய்தார்.

இரு தரப்பு சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிமன்றம் இது தொடர்பான தீர்ப்பு நாளை வியாழக்கிழமை வழங்கப்படும் என்று அறிவித்தது.

## ஐந்து மாடிக் கட்டட...

சமர்ப்பிக்க இருப்பதாக கண்டி மாநகர ஆணையாளர்சந்தன தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இதே வேளை கண்டி, பூவெலிகட பகுதியில் இடிந்து விழுந்த கட்டிடத்தின் இடிபாடுகளை அகற்றும் நடவடிக்கை நேற்று (21) தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

பூவெலிகட பகுதியில் நேற்று முன்தினம் (20) காலை 5 மாடி கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்திருந்தது. குறித்த கட்டிடம் உடைந்து அருகில் இருந்து வீட்டின் மீது விழுந்ததில் குறித்த வீட்டில் இருந்த தாய், தந்தை மற்றும் கைக்குழந்தை ஒன்று உயிரிழந்திருந்தனர்.

இதேவேளை இடிபாடுகளை அகற்றும் நடவடிக்கை சீரற்ற காலநிலை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று காலை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இதே வேளை கட்டிட ஆய்வு நிறுவனமும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

கட்டிட உரிமையாளர் அனுமதித்த திட்டத்திற்கு அப்பால் நிர்மாணத்தை மேற்கொண்டாரா என்பது குறித்தும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் இருந்த அறிக்கை பெற உள்ளதாக கண்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்க நேற்று தெரிவித்தார்.

கண்டி மாநகர சபையின் அனுமதியுடன் தான் இந்த ஐந்து மாடிக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டதா என்பது குறித்து விசாரணை ஆரம்பித்துள்ளதாக கண்டி மாநகர ஆணையாளர் சந்தன தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொறியியல் பிரிவு,நகர அபிவிருத்தி அதிகார சபை,கட்டட ஆய்வு நிறுவனம், இணைந்து விசாணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

2007 இல் இந்த கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதிக்கமைய கட்டப்பட்டதா என விசாரணை நடைபெறுகிறது.

இது தொடர்பில் நாளை தெளிவாக கூற முடியும். நகர சபை வழங்கி அனுமதி பின்னர் பல தடவை திருத்தப்பட்டுள்ளது. 2015 இல் கட்டிட ஆய்வு நிறுவன அனுமதி பெறப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

இதே வேளை உரிய அனுமதிகளுடனே கட்டிடத்தை கட்டியதாகவும் தாங்களும் இறுதி நேரத்திலே உயிர் பிழைத்ததாகவும் கட்டிட உரிமையாளர் கூறியுள்ளார். முன்கூட்டி அறிந்து உண்மையை மறைத்ததாக கூறும் குற்றச்சாட்டை அவர் நிராகரித்தார். (பா)

## இனவாத அரசியல் செய்தாராம்;

# ஹக்கீம் மீது குற்றம் சுமத்தும் கிரியெல்ல



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கடந்த பொதுத்தேர்தலில் கண்டி மாவட்டத்தில் இனவாத அடிப்படையில் அரசியலில் ஈடுபட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம் சுமத்தியுள்ளார்.

ரவூப் ஹக்கீம், ஹலீம் மற்றும் வேலுகுமார் ஆகிய சிறுபான்மை இன வேட்பாளர்கள் இருவரை இணைத்துக் கொண்டு ஒன்றாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார் எனவும் அவர் கூறியுள்ளார். மேலும் கூறுகையில்,

இதனடிப்படையில் கண்டி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்திக்கான நான்கு பாராளுமன்ற ஆசனங்களில் மூன்று ஆசனங்கள் அவர்களுக்கு கிடைத்தது. கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும் போது சஜித் பிரேமதாசவுக்கு கிடைத்த வாக்குகளில் ஒரு லட்சத்து 83 ஆயிரம் வாக்குகள் இம்முறை பொதுத் தேர்தலில் கிடைக்கவில்லை.

இந்த வாக்குகளில் பெரும்பான்மையான வாக்குகள் சிங்களவர்களின் வாக்குகள் எனவும் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார்.

# மேல்மாகாண சுற்றிவளைப்பு தேடுதலில் 1,113 பேர் கைது

மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்பில் 1,113 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் 685 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய 424 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனின் பணிப்பில் இந்த சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 19 திருத்தத்திலுள்ள...

"தகவல் உரிமைக்கு உத்தரவாதமளிக்கும் விதிகள், ஜனாதிபதிக்கான 5 ஆண்டு வரையறை, ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடக்கூடிய எண்ணிக்கையை இரண்டாக வரையறுத்தல், இரட்டைக் குடியுரிமை கொண்டோரை தேர்தலில் போட்டியிடாது தடுத்தல் போன்ற 19ஆம் திருத்தத்தில் காணப்பட்ட நல்ல பல அம்சங்களைத் தக்க வைக்க வேண்டும்" என அவர் மேலும் கூறினார்.

இலங்கைக்கான கியூபத் தூதுவருடனான சந்திப்பின் பின்னர் அமைச்சர் நாணயக்கார ஊடகங்களுக்கு இதைத் தெரிவித்தார். 20ஆம் திருத்தத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நீதிமன்றம் செல்லவுள்ளமை பற்றிக் கேட்ட போது, நீதிமன்றின் கருத்தை தேடுவதும் ஒரு நல்ல முடிவு என்பதால் இது ஒரு சிறந்த நகர்வாகும் என்றார்.

## ஜனாதிபதி கோட்டாபய... (03ஆம் பக்கத் தொடர்)

இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன. ஆனால் நேபாளத்துடன் மட்டும் இன்னும் முழுமையான உறவு சீரடையவில்லை. சமீபத்தில் பிரதமர் மோடி பிறந்த தினத்தன்று இலங்கை நேபாள பிரதமர்கள் வாழ்த்து தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து 2 ரயில்களை நேபாளத்துக்கு இந்தியா பரிசாக வழங்கியது.

இதன் மூலம் நேபாளத்தையும் மீண்டும் நட்பு நாடாக மாற்ற இந்தியா தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக அறிய வருகிறது.

## மலசலகூட வசதியில்லாத... (03ஆம் பக்கத் தொடர்)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நோக்கங்களுக்கும் இடையேயான தொடர்புபற்றியே கலந்துரையாடவுள்ளோம்.

விசேடமாக பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் இலக்குகள் நோக்கங்களை வெற்றிகொள்வதில் உலக பூராவும் பரந்து செயற்படுத்தப்படும் திட்டங்களில் இலங்கை மிக நல்ல இடத்தில் இருந்தாலும் இலங்கைக்கு இன்னும் செல்லவேண்டிய தூரம் அதிகமுள்ளது.

எமது நாட்டில் மலசலவூட வசதியில்லாத மக்கள் அதிகமாக உள்ளார்கள். அவர்கள் ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் லே பொதுவெளிகளில் மலங்கழிக்க விரும்புவதில்லை. அவர்களுக்கு மலசலகூடங்கள் தேவையாகும். ஆனால் அவர்களுக்கு அதனை அமைக்க வசதிகளில்லை. விசேடமாக தோட்டப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் இந்நிலையுள்ளது. அவர்கள் சுகாதாரமற்ற முறையில் மலங்கழிப்பதால் மலம் நீரில் கலந்து ஓடைகள் ஆறுகளை சென்றடைவதால் நீர் அசுத்தமாகிறது. அது பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மலசலகூடம் இல்டலாதது அவர்களின் பிரச்சினை மாத்திரமல்டல முழு நாட்டுக்குமே பாதிப்பை ஏற்படுத்துகிறது.

நாம் நீரை சேமிக்கும் மரங்களை பாதுகாக்க வேண்டும். நம் நீரை பாதுகாக்கவேண்டும், உருவாக்கவும் வேண்டும். இவை இரண்டும் இல்லாமல் நீர் விநியோகத்தைப்பற்றி பேச முடியாது. ஒரு சிலர் ஆறு ஓடைகளுக்கு மிக அருகில் பயிர் செய்துள்ளார்கள். அவை இருக்கும்தே காடுகளில் மரம் நட வேண்டும். மரங்கள் பெரிதாக வளரும் போது அவர்கள் தமது பயிர்களை நீக்க வேண்டும். எல்லா காடுகளையும் எம் வசத்தில் கொண்டுவர போராட க்ஷேண்டும். ஆயுதத்தால் அல்ல கருத்துக்களால் நாம் காடுகளில் மரம் நடும் திட்டத்தை விரைவில் செயல்படுத்துவோம் என்றார்.

## ஐ.நா.வுக்கான நிரந்தர... (03ஆம் பக்கத் தொடர்)

சிபாரிசு செய்யப்பட்டுள்ளார்.

அப்பதவியை வகித்து வந்த ஷேனுகா செனவிரத்ன ஓய்வுபெற்றதையடுத்து அந்தப் பதவி வெற்றிடமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மொஹான் பீரிஸின் பெயர் உயர் பதவிகளுக்கான சிபார்சு மற்றும் அங்கீகாரம் வழங்கும் பாராளுமன்ற குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை வெளிநாட்டு அமைச்சு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன.

கொழும்பு சென். ஜோசப் கல்லூரி மற்றும் ரோயல் கல்லூரியின் பழைய மாணவரான மொஹான் பீரிஸ், 1975 இல் சட்டத்துறையில் நுழைந்தார். அதன்பின் அரச சட்டத்தரணியாக 1981இல் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்தார். 2008 முதல் 2011 வரை சட்ட மா அதிபராக சேவையாற்றிய இவர், 2013 முதல் 2015 வரை பிரதம நீதியரசராக பணிபுரிந்தார்.

## மக்களின் ஆணைக்கேற்ப... (05ஆம் பக்கத் தொடர்)

இரட்டைக் குடியுரிமையற்ற ரணில் விக்கிரமசிங்க, மங்கள சமரவீர போன்றவர்களை விட அதிகளவு நாட்டுக்காக அவர் பணி புரிந்துள்ளார். அவ்வாறானவர்களுக்கு நாட்டுக்கு சேவையாற்ற சந்தர்ப்பம் வழங்குவதில் தவறில்லை அல்லவா? 19 ஆவது திருத்தம் ஒரு நபரை,

ஒரு குடும்பத்தைஇலக்காகக் கொண்டு திருத்தப்பட்டது. உண்மையில் அன்றைய நல்லாட்சி அரசாங்கத்திற்கு ராஜபக்ஷ குடும்பம் பற்றிய பீதி காணப்பட்டது.

**கேள்வி: மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரேமலால் ஜயசேகர பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்ததனால் இந்நாட்டு சட்டமும் சர்வதேச சட்டமும் மீறப்பட்டதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர். அந்தக் குற்றச்சாட்டு பற்றிய உங்களது கருத்து என்ன?**

**பதில்:** பிரேமலால் ஜயசேகர குற்றவாளி என நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்ட பின்னர் அவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். தனது மனுவை விசாரித்து நீதியை வழங்கும்படி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு சமர்ப்பித்தால் அவர் குற்றவாளியாகக் கருதப்பட மாட்டார். மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பின் முடிவிலேயே அவர் குற்றவாளியா இல்லையா எனத் தீர்மானிக்கப்படும். அந்நிலையில் அவருக்கு சத்தியப் பிரமாணம் வழங்க அனுமதி அளித்தது சட்டத்தின்படி தவறில்லை.

**கேள்வி: நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக அரசாங்கம் பல திட்டங்களை முன்வைத்துள்ளது. அந்த முயற்சி எவ்வளவு தூரம் வெற்றி பெறும்?**

**பதில்:** கொழும்பிலிருந்து பார்ப்பவர்கள் இந்த அமைச்சர்களின் விடயங்களை பிரித்தது தொடர்பாக கேலியாக நோக்குகின்றார்கள்.

ஆனால் ஜனாதிபதி மிகமிகச் சரியாக விடயங்களைப் பிரித்து பரந்த ரீதியாக அமைச்சரவையை அமைத்துள்ளார். இதற்கு முன்னர் சம்பிரதாயபூர்வமாக அமைச்சர்கள் நியமிக்கப்பட்டாலும் இம்முறை புதிய நோக்குடன் அமைச்சுகளை பிரித்துள்ளார். இந்தப் புதிய அமைப்பு எதிர்கால நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் சக்தியாகும்.




யாழ்ப்பாணம் – நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) தேர்த் திருவிழா நேற்று காலை பக்திபூர்வமாக நடைபெற்ற போது... (படப்பிடிப்பு: ஐ.சிவசாந்தன்)

# விசேட தேவையுடையவர்களில் வடக்கில் 6 ஆயிரம் பேர் காத்திருப்போர் பட்டியலில்

கந்தர்மடம் நிருபர்

வடக்கு மாகாணத்தில் 20 ஆயிரத்து 8 பேர் விசேட தேவையுடையவர்களாக உள்ள நிலையில் அவர்களில் 13 ஆயிரத்து 91 பேருக்கு மட்டுமே அரச உதவிகள் கிடைப்பதாகவும் 6 ஆயிரத்து 178 பேர் கொடுப்பனவைப் பெறுவதற்கு தகுதியிருந்தும் காத்திருப்போர் பட்டியலில் உள்ளதாகவும் மாவட்ட செயலகங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 683 விசேட தேவை உடையவர்களாகவும் 2 ஆயிரத்து 97 பேருக்கு மட்டுமே அரச உதவி கிடைப்பதோடு 586 பேர் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 9 ஆயிரத்து 412 விசேட தேவை உடையவர்கள் உள்ளனர். இதில் 6 ஆயிரத்து 461 பேருக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

2 ஆயிரத்து 951 பேர் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2901 விசேட தேவை உடையவர்கள் உள்ளனர்.

இவர்களில் 2,228 பேருக்கு மாவட்டச் செயலகத்தினால் கொடுப்பனவு வழங்கப்படுவதோடு 673 பேர் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 3359 விசேட தேவையுடையோர் உள்ளபோதும் இவர்களில் ஆயிரத்து 395 பேருக்கே மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

ஆயிரத்து 296 பேர் உறவுகளில் தங்கி வாழ்கின்றனர்.

மன்னார் மாவட்டத்திலும் ஆயிரத்து 653 விசேட தேவையுடையோர் உள்ளபோதும் இதில் 910 பேருக்கு மட்டுமே அரச உதவி கிடைக்கின்றது.

தகுதி இருந்தும் 672 பேர் உதவி கிடைக்காது காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர்.

# வன்னி பிரதி பொலிஸ் மாஅதிபருக்கு இடமாற்றம்

வவுனியா விசேட நிருபர்

வன்னிப் பிராந்திய பிரதி பொலிஸ் மாஅதிபருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. 27 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட உடனடி இடமாற்றத்திலேயே இவருக்கும் இவ் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் பொறுப்பாக உப பொலிஸ் மாஅதிபர் உட்பட 11 உப பொலிஸ் மாஅதிபர்கள், 11 பொலிஸ் அத்தியட்சகர்கள், இரு பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் உப பொலிஸ் அத்தியேட்சகர் ஒருவருமே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் வன்னி பிராந்திய பிரதி பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றிய தம்மிக்க பிரியந்த அவர்களுக்கும் நேற்று முன்தினம் களுத்துறை மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபராக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் 2020 ஜனவரி மாதம் 3ம் திகதி வன்னி பிராந்திய பிரதி பொலிஸ் மாஅதிபராக கடமையினை பொறுப்பேற்ற தம்மிக்க பிரியந்த வவுனியா, மன்னார் மக்களின் நலனை கருத்தில் கொண்டும், குற்றச் செயல்களை கட்டுப்படுத்தவும் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இ.போ.ச - தனியார் இணைந்து சேவையாற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வவுனியா அரச அதிபருக்கு ஆளுநர் பணிப்பு

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியாவில் இணைந்த நேர அட்டவணையில் போக்குவரத்து சபையினரும், தனியாரும் சேவையாற்றுவதற்கு தேவையான நடவடிக்கையை மாவட்ட அரச அதிபர் மேற்கொள்ள வேண்டும் என்றும் இதற்கு பொலிசார் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் வடமாகாண ஆளுநர் சார்ள்ஸ் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் வடமாகாண ஆளுநர் சார்ள்ஸ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் இணைத்தலைமையில் நேற்று நடைபெற்றது. இக் கூட்டத்தின் போது வவுனியாவில் இணைந்த நேர அட்டவணையில் பொதுமக்களுக்கான போக்குவரத்து சேவையினை மேற்கொள்வதற்கு இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலையினர் ஒத்துழைக்கவில்லை என வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் குற்றம் சாட்டினார். இதற்கு பதிலளிக்கும் போதே ஆளுநர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் மேலும் அவர் கூறுகையில்,

வடக்கின் நான்கு மாவட்டங்களிலும் நடைமுறையில் உள்ள இணைந்த நேர அட்டவணை செயற்பாடு வவுனியாவில் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் பேருந்துகளிற்கிடையில் போட்டித்தன்மை ஏற்பட்டு மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கான சரியான சேவையினை வழங்க முடியாதுள்ளது.

200 மில்லியன் ரூபா செலவழித்து அனைத்து வசதிகளுடனும், அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் இருக்கும் போது அதன் வாசலில் தரித்து நின்று பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன. இது தொடர்பில் சரியான தீர்மானம் ஒன்றினை பெறுவதற்கு போக்குவரத்து சபையினர் ஒத்துழைக்கவில்லை. உடனே வேலை நிறுத்தம் செய்கின்றனர். இவ்விடயம் தொடர்பாக பல தரப்புகளுடன் கூட்டங்கள் நடத்தப்பட்டும் உரிய தீர்வினை பெறமுடியாதுள்ளது என்றார்.

இது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் கூறுகையில், வடக்கில் நான்கு மாவட்டங்களிலும் நடைமுறையில் உள்ள இணைந்த நேர அட்டவணை வவுனியாவில் மாத்திரம் நடைமுறைப்படுத்த முடியாமல் இருப்பது தவறான விடயமாகும்.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அரச அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதற்கு தேவையான ஒத்துழைப்பை பொலிசார் வழங்க வேண்டும் என்றார்.

இதேவேளை குறித்த விடயம் தொடர்பாக பதிலளிப்பதற்கு இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலையின் எந்த ஒரு அதிகாரிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கவில்லை. இது தொடர்பிலும் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களால் விசனம் தெரிவிக்கப்பட்டது.

# மக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக நேரடியாக என்னிடம் பேசி தீர்வு காணலாம்

## நல்லூர் பிரதேச சபை தவிசாளர் தியாகமூர்த்தி தெரிவிப்பு

கோப்பாய் நிருபர்

விவசாயிகள் உட்பட எந்த தரப்பினரானாலும் தமது பிரச்சினைகள் தொடர்பாக நேரடியாக தன்னிடம் வந்து பேசி பிரச்சினைகளுக்கான தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும் என்று நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் த.தியாகமூர்த்தி தெரிவித்தார்.

மேலும் யாழ். திருநெல்வேலி பொது சந்தையில் விவசாயிகளிடம் அறவிடப்படும் 10 வீத கழிவை இல்லாமல் செய்வது என்பது உடனடியாக முடிவுக்கு கொண்டுவரும் செயற்பாடாக அமையாது என்றும் குறிப்பிட்டார்.

அண்மையில் யாழ் வந்த விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே யாழ். சந்தைகளில் விவசாயிகளிடம் அறவிடப்படும் 10 வீத கழிவினை உடனடியாக நிறுத்துமாறு வடக்கு மாகாண அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இது சம்பந்தமாக நல்லூர் பிரதேச சபை தவிசாளரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

யாழ்.சந்தைகளில் நடைமுறையில் இருந்து வரும் விவசாயிகளிடம் இருந்து அறவிடப்படும் 10 வீத கழிவினை இல்லாமல் செய்வது என்பது உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவரும் செயற்பாடாக அமையாது. இதனால் வியாபாரிகளும் பாதிக்கப்படுவர். விவசாயிகளை மட்டுமல்ல வியாபாரிகளையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து சந்தைகளும் ஒரு முடிவுக்கு வருவார்களானால் சந்தைக் கழிவை இல்லாமல் செய்வது தொடர்பில் பரிசீலிக்க முடியும். விவசாயிகள் வெளியில் இருந்து விமர்சனம் செய்யாமல் இது சம்பந்தமாக நேரில் வந்து என்னுடன் பேச முடியும்.

இந்தப் பிரச்சினை மட்டுமல்ல திருநெல்வேலிச் சந்தையில் எதிர்நோக்கும் எந்தப் பிரச்சினை என்றாலும் நேரில் அலுவலகம் வந்து என்னுடன் பேச முடியும். 10 வீத கழிவை இல்லாமல் செய்வது தொடர்பில் முயற்சி எடுப்போம். எந்தளவுக்கு சாத்தியப்படும், முடிவுக்கு வரும் என்று இப்பொழுது கூற முடியாது என்றார்.

# பாக்கு சீவல் விலை அதிகரிப்பால் வெற்றிலை வியாபாரிகள் பாதிப்பு

கந்தர்மடம் நிருபர்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கொரோனாவிற்கு முன்பு 450 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட பாக்கு சீவல் தற்போது ஆயிரத்து 100 ரூபாவினையும் தாண்டியதால் வெற்றிலை வியாபாரிகள் பெரும் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாடு மற்றும் வன்னியின் விசுவமடு, முழங்காவில் பகுதிகளில் அதிகரித்த வெற்றிலைத் தோட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு நாட்டப்பட்டுள்ள வெற்றிலைகளிற்கு போட்டியாக தெற்கு வெற்றிலைகளும் சந்தையில் உள்ளன.

இவ்வாறான போட்டிச் சந்தையில் வெற்றிலை விற்பனை வீழ்ச்சியடைந்து செல்லும் நிலமை காணப்பட்டுள்ளது.

அதற்கான காரணம் கொரோனா தாக்கம் காரணமாக இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தடையின் காரணமாக பாக்கு எடுத்து வரப்படாதமையினால் பாக்கின் விலை அதிகரித்துச் செல்கின்றது. இதனால் கடந்த ஏப்ரல் மாதம் 400 ரூபா முதல் 500 ரூபா வரை பாக்கு சீவல் விற்பனை செய்யப்பட்டது.

400 முதல் 500 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட பாக்கு சீவல் தற்போது ஆயிரம் ரூபா முதல் ஆயிரத்து 200 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

# வவுனியாவில் உளுந்து செய்கையை அதிகரிப்பது தொடர்பாக ஆராய்வு

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியாவில் உளுந்து பயிர்ச் செய்கையை அதிகரிப்பது தொடர்பாக வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் ஆளுநர் சார்ள்ஸ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் இணைத்தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது வவுனியா மாவட்டத்தில் உளுந்துச் செய்கையின் வீழ்ச்சி தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், அதனை அதிகரிப்பதற்கு செய்யவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. அதிகளவான ஏக்கர்களில் உளுந்து உற்பத்தி இடம்பெற்றுவந்த வவுனியாவில் தற்போது உளுந்து உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கான காரணம் தொடர்பாக ஆளுநரால் கோரப்பட்டது

ஒவ்வொரு வருடமும் காலநிலை மாற்றத்தால் 3000 தொடக்கம் 3500 ஏக்கர் வரையிலான உளுந்து பயிர்ச் செய்கை அழிவடைகிறது, இதனால் விவசாயிகள் உளுந்து செய்கையில் ஈடுபடுவதற்கான ஆர்வம் குறைவடைவதாகவும், உற்பத்தி குறைவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் இவ்வருடம் வவுனியா மாவட்டத்தில் 13,500 ஏக்கர் அளவில் உளுந்து செய்கை பண்ணப்படும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அந்தவகையில் ஒரு கிலோ விதை உளுந்து 830 ரூபாவிற்கு கொள்வனவு செய்து, 850 ரூபாவிற்கு விவசாயிகளிற்கு வழங்குவதாக விவசாய திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

உளுந்து பயிர்செய்கைக்கு காப்புறுதி திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்துவதாக தொடர்புடைய அமைச்சரால் உறுதியாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் உற்பத்தி செய்யும் உளுந்திற்கான விலையினை சரியான முறையில் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநரால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

# காற்று காரணமாக தூரோடு சரிந்து வீழ்ந்த மரம்

மன்னார் குறூப் நிருபர்



தலைமன்னார் மரியாள் வீதியில் அமைந்துள்ள கன்னியர் மடத்தின் வளாகத்திலுள்ள பாரிய புளிய மரம் ஒன்று நேற்று காலை வீசிய பலத்த காற்று காரணமாக தூரோடு சரிந்து வீழ்ந்துள்ளது.

குறித்த மரம் அருகில் நின்ற தென்னை மரத்தையும் முறித்து வீதியின் எதிர் பக்கமுள்ள வீட்டின் கூரை மீது விழுந்துள்ளது. இதன் காரணமாக வீட்டிற்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளதுடன் குறித்த பகுதிக்கான மின்சாரம், தொலைத் தொடர்பு இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட கிராம மக்கள் கிராம அலுவலகர் மற்றும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

மேலும் குறித்த பகுதிக்கு வந்த மின்சார சபை அதிகாரிகள் மின்சாரத்தை துண்டித்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

# முல்லையில் 35 ஆயிரம் ஹெக்டேயர் நிலத்தில் மாத்திரமே விவசாயம்

## மத்திய அரசின் கீழ் 71 வீதமான நிலம்

கந்தர்மடம் நிருபர்

2 இலட்சத்து 69 ஆயிரத்து 300 ஹெக்டேயர் நிலப்பரப்புக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் 35 ஆயிரத்து 403 ஹெக்டேயர் நிலத்தில் மட்டுமே விவசாயம் இடம்பெறுவதாகவும் இது 13 வீதமான நிலம் எனவும் மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாவட்டத்தில் குடியிருப்புக்கள், நிர்வாக அலுவலகங்கள் உள்ளிட்ட பாவனை நிலங்களாக 19 ஆயிரத்து 271 ஹெக்டேயர் நிலம் மட்டுமே உள்ளது. இது மாவட்டத்தின் 7 வீதமான நிலமாகும். அதே நேரம் மாவட்டத்தின் ஒரு இலட்சத்து 78 ஆயிரத்து 721 ஹெக்டேயர் நிலம் வனப் பகுதிகளாகும். இது மொத்த அளவின் 66 வீத நிலம் என்பது மிக முக்கியமான விடயமாகும். நீர்ப்பாசணத் திணைக்களம் , கமநல சேவைத் திணைக்களங்களின் கீழ் 20 ஆயிரத்து 338 ஏக்கர் நிலமுள்ளது. இவ்வாறே விவசாயம் இல்லாத நிலம் 2 ஆயிரத்து 717 ஹெக்ரேயரும், ஈரப்பதமான நிலமாக 5 ஆயிரத்து 868 ஹெக்டேயரும் உள்ளதோடு ஏனைய வகை நிலத்தில் 6 ஆயிரத்து 978 ஹெக்டேயரும் உள்ளன.

# வீதியோரத்திலுள்ள உருளையால் தொடர் வீதி விபத்துக்கள்: சபையில் சுட்டிக்காட்டு

சாவகச்சேரி விசேட நிருபர்



சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட மீசாலை கிழக்கு மத்திய வீதியில் பொதுநோக்கு மண்டபத்தினை அண்மித்து வருடக்கணக்கில் உரிமை கோரப்படாத நிலையில் காணப்படும் உருளையால் தொடர் விபத்துக்கள் ஏற்படுவதாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் பிரகாஷ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

வீதிப் புனரமைப்பிற்கு பயன்படுத்தும் குறித்த உருளை 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து வீதி ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் இரவு வேளைகளில் அவ்விடத்தில் விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

போக்குவரத்திற்கு இடையூறாக காணப்படும் உருளையை அகற்றுமாறு கடந்த 2018 ஆம் ஆண்டில் இருந்து சாவகச்சேரி நகரசபையில் வலியுறுத்தி வருகிறேன். ஆனால் நகரசபையினர் உருளையை அவ்விடத்தில் இருந்து அகற்ற இன்றுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றார்.

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க உதவி ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை

## கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத்



றொட்டவெவ குறூப் நிருபர்

கிழக்கு மாகாணத்தில் உதவி ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பில் கலந்துரையாடல்களை நடாத்தி வருவதாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் தெரிவித்தார்.

கிழக்கில் சில பிரதேசங்களில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவி வருவதாகவும், அதனை நிவர்த்திக்கும் முகமாக எதிர்காலத்தில் உதவி ஆசிரியர்களை நியமிக்க உள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

அதிக கஷ்ட பிரதேசங்களில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் கடமையாற்றி வருகின்றனர்.

5 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வருபவர்களுக்கு அவர்களின் குடும்ப நிலவரங்களை கருத்தில் கொண்டு இடமாற்றம் வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக கிழக்கு மாகாண ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

திருகோணமலை வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பகுதியில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கு நேற்று (21) கோமரங்கடவல மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 220 மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர். கிழக்கு மாகாண ஆளுநரின் விசேட ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெற்றமை விசேட அம்சமாகும்.

இவ்வலயத்திலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர்களுக்கு இதன்போது கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கில் இந்த செயற்பாடு கிழக்கு மாகாண கல்வி அமைச்சுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஐ. கே. ஜி. முத்துபண்டா, ஆளுநரின் செயலாளர் எல். பீ. மதநாயக்க, கோமரங்கடவல பிரதேச சபை தலைவர் சந்தன விஜிதகுமார, கோமரங்கடவல பிரதேச செயலாளர் எஸ். எம். சீ. சமரக்கோன் அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனையில் 'திரிய பியச' திட்டத்தின் கீழ் வீடுகள் கையளிப்பு



(பெரியநீலாவணை விசேட நிருபர்)

'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' எனும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் சமுர்த்தி திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட 'திரிய பியச' வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மருதமுனை மற்றும் நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்ட நான்கு வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வுகள் நேற்று (21) நடைபெற்றன.

மருதமுனை மற்றும் நற்பிட்டிமுனை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் எம்.எம்.எம். முபீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சமுர்த்தி திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீடுகளை திறந்துவைத்தார்.

இந் நிகழ்வில் கல்முனை பிரதேச செயலகத்தின் சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.சி.ஏ.நஜீம், திட்ட முகாமையாளர் ஏ.எம்.எஸ். நயீமா உட்பட திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். 'திரிய பியச' வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருடமும் பிரதேச செயலகத்தின் சமுர்த்தி திணைக்களத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இவ்வாறு வீடுகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் பல்கலைக்கழகம் அமைக்குமாறு கோரிக்கை

திருமலை மாவட்ட விசேட நிருபர்

திருகோணமலை மாவட்டத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கிண்ணியா சூறா சபையினர் ஜனாதிபதி மற்றும் கல்வி உயர் கல்வி அமைச்சர் ஆகியோருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

இக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக பத்து பல்கலைக் கழகங்களை அமைக்க உள்ளதாக தெரிய வருகின்றது.

அதன் அடிப்படையில் கிழக்கு பல்கலைக் கழகத்தின் வளாகமாக செயல்படும் திருகோணமலை வளாகம் முழுமையான பல்கலைக் கழகமாக மாற்றப்பட வேண்டும்.

இதன் வளாகங்கள் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அமைக்கப்பட வேண்டும். சமுத்திரவளம் தொடர்பான வளாகம் கிண்ணியா பிரதேசத்தில் அமைக்கப்பட வேண்டும் எனவும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பில் திருடப்பட்ட கார் வாழைச்சேனையில் மீட்பு

கல்குடா தினகரன் நிருபர்



கொழும்பு கடவத்தை பகுதியில் திருடப்பட்டு விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்ட கார் ஒன்றை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வாழைச்சேனை பொலிஸார் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து போதை தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜே.எம்.துசிதகுமார தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது குறித்த கார் ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள வியாபார நிலையம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவரை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருவதுடன், குறித்த சந்தேக நபருடன் இன்னும் பலர் இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். குறித்த சந்தேக நபர் பல வாகனங்களை திருடி விற்பனை செய்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# மூதூர் வேதத்தீவுக்கு பாலம் அமைக்குமாறு கோரிக்கை

(தோப்பூர் தினகரன் நிருபர்)



மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மூதூர் ஷாபி நகருக்கும் வேதத்தீவுக்குமிடையில் ஆற்றுக்குக் குறுக்கே பாலம் ஒன்றை அமைத்துத் தருமாறு பொதுமக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரதேச மக்கள் ஆற்றைக்கடந்து இப்பகுதிக்கு பிரயாணம் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இழுவைப் பாதையொன்றின் மூலம் நாளாந்தம் இம்மக்கள் பயணம் செய்கின்றனர். இவ் இழுவை பாதையில் வாகனங்களை ஏற்றிச்செல்லமுடியாது. இதனால் வயல் விதைப்பு அறுவடை காலம் பொருட்களை கொண்டுசெல்வதில் மக்கள் சிரமப்படுவதாக கூறுகின்றனர்.

பாலம் இன்மையால் நாளாந்தம் இப்பாதையை கடந்து பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் பயணம் செய்வதில் சிரமப்படுவதாக கூறுகின்றனர். பாலம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டியும் பாலம் அமைக்கவில்லையென பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாலம் இன்மையால் நோயாளர்களை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதிலும் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக கூறுகின்றனர். இதனை கருத்திற்கொண்டு வேதத்தீவு ஆற்றுக்கு குறுக்கே பாலம் அமைத்துத்தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஆரையம்பதியில் இன்று கொடியேற்றம்

ஆரையம்பதி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு ஆரையம்பதி அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து இடம் பெறும் உற்சவகால நிகழ்வுகளில் 26 ஆம் திகதி சனிக்கிழமை பூம்பந்தல் திருவிழாவும், 27 ஆம் திகதி திங்கட்கிழமை மாம்பழத் திருவிழாவும் 28 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்புறத் திருவிழாவும் 30 ஆம் திகதி புதன் கிழமை தேர்த் திருவிழாவும் இடம்பெற்று, 01 10 2020 ஆம் திகதி வியாழக்கிழமை திர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. கிரியாகால நிகழ்வுகள் அனைத்தும் ஆலய பிரதம குரு தற்புருஷ சிவாச்சாரியார் பிரம்ம ஸ்ரீ கணேச சோதிநாதக் குருக்கள் தலைமையிலும் மற்றும் கிரியாகலாநிதி கணேச லோகநாதக்குருக்கள் பங்குபற்றுதலுடன் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

# ஆலிம்நகர் கிராமத்தில் செய்கை பண்ணப்பட்ட வீட்டுத் தோட்டம்

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)



ஜனாதிபதியின் எண்ணக்கருவிற்கமைய ஆரம்பிக்கப்பட்டுள்ள பத்து இலட்சம் வீட்டுத் தோட்டத்தினை உருவாக்கும் 'சௌபாக்கியா' வீட்டுத் தோட்டம் அமைக்கும் பணிகள் நாடளாவிய ரீதியில் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக ஆலிம்நகர் கிராமத்தில் ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் எம்.ஐ.உதுமாலெப்பை தனது முயற்சியினால் செய்கை பண்ணப்பட்ட "சௌபாக்கியா வீட்டுத்தோட்டத்தினை" அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் கே.எல்.சுபையிர் தலைமையில் சென்ற குழுவினர் ஞாயிற்றுக்கிழமை (20) பார்வையிட்டனர்.

இதன்போது மனித எழுச்சி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.நிஹால் அஹமட் பிரதம வளவாளராக கலந்து கொண்டு வீட்டுத்தோட்டத்தினை எவ்வாறு அமைப்பது, சேதனைப் பசளையினை எவ்வாறு உற்பத்தி செய்வது, நஞ்சற்ற உணவுப் பொருட்களின் முக்கியத்துவங்கள் தொடர்பாக இங்கு பல்வேறு விளக்கங்களை இக் குழுவினரிடம் முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில், ஓய்வு பெற்ற அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வீதி விபத்தில் ஒருவர் பலி; மூவர் படுகாயம்



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு – கொழும்பு நெடுஞ்சாலையின் மாவடிவேம்பு பகுதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் பலியானதோடு மேலும் இருவர் காயமடைந்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் சித்தாண்டியைச் சேர்ந்த நாகராசா சதீஸ் (வயது 22) என்பவரே பலியாகியுள்ளார்.

அதேவேளை மாவடிவேம்பு கிராமத்தைச் சேர்ந்த எஸ்.சுபேந்திரன் (வயது 32), மகேஸ்வரன் தவசீலன் (வயது 18), கருணாகரன் தனுசன் (வயது 26) ஆகியோர் காயமடைந்த நிலையில் மாவடிவேம்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம்பற்றி தெரியவருவதாவது, இரு மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.



பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் கல்வி அமைச்சின் விசேட அறிவுறுத்தலின் பிரகாரம் அம்பாறை மாவட்ட பாடசாலைகளில் உடற் பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன.கல்முனை வலயத்திலுள்ள நற்பிட்டிமுனை அல்அக்ஸா மத்திய கல்லூரி மாணவர்கள் உடற் பயிற்சியில் ஈடுபடுவதைக் காணலாம்.

(படம்: நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

# பாலமுனை விவசாயக் கல்லூரியில் நாற்பெரும் விழா

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பாலமுனை பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள விவசாயக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட நாற்பெரும் விழா கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

இக்கல்லூரியில் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்து, தேசிய தொழில் தகைமைகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, ஜனாதிபதியின் சௌபாக்யா வீட்டுத் தோட்டச் செய்கையினை ஊக்குவிக்கும் வேலைத் திட்டம், 'பசுமைச் சிறகு' எனும் நான்காவது ஆண்டிதழ் வெளியீடு மற்றும் மாணவர்களின் உடற் பயிற்சியினை கட்டியெழுப்பும் பூப்பந்து ஆடுகளத்தினை திறந்து வைக்கும் நிகழ்வு போன்றன இதன்போது இடம்பெற்றன.

கல்லூரியின் அதிபர் பிரதி விவசாயப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.ஹரீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின்போது இக்கல்லூரியில் கடந்த 2018/2019 ஆம் கல்வி ஆண்டில் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்து கொண்ட 21 மாணவர்களுக்கு தேசிய தொழில் தகைமை ஐந்தாம் மட்டச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், இம்மாணவர்களின் விடுகை விழாவினையொட்டிய 'பசுமைச்சிறகு' எனும் ஆண்டிதழும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது துறைசார் உயர் அதிகாரிகள், சமூக மட்ட முக்கியஸ்தர்கள், பயிற்சி நெறியினைத் தொடரும் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



மாணவர்கள், மக்களின் பாதுகாப்பு கருதி

# ஆபத்தான வர்த்தக கட்டடத்தை மூடுமாறு பொலிஸ் உத்தரவு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பாடசாலை மாணவர்கள் பொது மக்களின் நலன் கருதி ஹெம்மாதகம நகரத்திலுள்ள மூன்று மாடிக் கட்டடமொன்று நேற்று (21) பொலிஸ் உத்தரவின் பேரில் மூடப்பட்டது.

ஹெம்மாதகம நகரில் அரனாயக்க வீதியில் அமைந்துள்ள இக்கட்டடம் பாதுகாப்பில்லாத ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய அவதானமான நிலையில் உள்ளதாக அடையாளப்படுத்தப் பட்டிருக்கிறது. இதனாலேயே இத்தீர்மானத்தை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இம் மூன்று மாடிக்கட்டடத்தின் முதலாம், இரண்டாம் மாடிகள் வியாபார நிலையங்களுடன் அமைந்துள்ளன. மூன்றாவது மாடியில் நீண்ட காலமாக பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் இக்கட்டடத்தின் பல பிரதான தூண்கள் மற்றும் சுவர்கள் வெடித்து இடைவெளிகள் காணப்படுகின்றன. இக்கட்டடத்தின் முன்னால் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் கணிசமான அளவில் நடமாடுகின்றனர்.

இவ்விடத்தில் பாரிய விபத்தொன்று இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்காகவும் இவ்விடத்தில் விசேட பொலிஸ் நடமாடும் பாதுகாப்பு நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கம்பம் உடைந்து வீழ்ந்தமையால் நோட்டனில் மின் விநியோகத் தடை

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

நோட்டன் பிரிட்ஜ் பகுதியில் மின்கம்பமொன்று உடைந்து வீழ்ந்தமையினால் அப்பகுதியின் மின் விநியோகம் தடைப்பட்டுள்ளதுடன் குடியிருப்பு ஒன்றும் சேதமாகியுள்ளதாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிக காற்றுடன் கூடிய மழை வானிலையால் நேற்று காலை 05 மணியளவில் நோட்டன் தியகல வீதியில் அப்கட் பிரஜாசாலைக்கு அருகிலுள்ள மின் கம்பம் மீது பாரிய மரம் ஒன்று முறிந்து வீழ்ந்தமையினால் மின் கம்பம் உடைந்து குடியிருப்பொன்றின் மீது வீழ்ந்துள்ளது.



இதனால் குறித்த குடியிருப்பின் கூரை சேதமாகியுள்ளதுடன் நோட்டன் பிரிட்ஜ் பிரதேசத்தின் மின் விநியோகம் காலை 05 மணி முதல் தடைப்பட்டுள்ளதாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.



அம்பகமுவ பிரதேசத்திற்குட்பட்ட கினிகத்தேன ஹாக்ரா பௌத்த விகாரைக்கு விஜயத்தை மேற்கொண்ட தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் குமாரவேல் தொண்டமான், குறித்த விகாரை நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கமைய அங்கு தூபி ஒன்றை அமைக்க அடிக்கல்லும் நாட்டிவைத்தார். கினிகத்தேன ஹாக்ரா விகாராதிபதி பொல்பிட்டிய தம்மதிஸ்ஸ தேரர் தலைமையில் இடம்பெற்ற தூபி அமைப்பதற்கான இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துக்கொண்ட இராஜாங்க அமைச்சர் அங்கு சமய வழிபாடுகளிலும் ஈடுபட்டதுடன் பௌத்த குருவின் ஆசியும் பெற்றுக்கொண்டதுடன் விகாரையில் இடம்பெற்ற சமய நிகழ்வுகளிலும் கலந்துகொண்டார்.

(படங்கள்: தலவாக்கலை குறூப் நிருபர்)

# கண்டி கட்டடம் இடிந்து வீழ்ந்த விபத்து குறித்து விசாரணை

எம்.ஏ அமீனுல்லா

கண்டியில் உள்ள பூவெலிக்கட சங்கமித்த மாவத்தையிலுள்ள ஐந்து மாடி கட்டடம் இடிந்து விழுந்தது குறித்து மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஐந்து மாடி கட்டடம் இடிந்து வீழ்ந்த போது இடிபாடுகள் காரணமாக அதற்கு அருகிலே இருந்த ஹோட்டலில் வசித்து வந்த திருமணமான தம்பதியினரும் அவர்களின் குழந்தையும் நேற்று முன்தினம் (20) இடிபாடுக்குள் சிக்குண்டு கொல்லப்பட்டனர். பிரேத பரிசோதனைகள் நேற்று கண்டி பெரியாஸ்பத்திரியில் நடைபெற்றன.

பிரேத பரிசோதனை செய்த பின்னர் அவர்களின் உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

மேலும் இடிந்து விழுந்த கட்டடத்தின் உரிமையாளர்கள் நேற்று சம்பவ இடத்திற்கு வந்து சேர்ந்தனர் எனவும் குறித்த 5 மாடிக்கட்டடம் முறையான வகையில் கட்டப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளதாக அறியவருகிறது.

இருப்பினும், கட்டட ஆராய்ச்சி அமைப்பின் அதிகாரிகள் உள்ளிட்ட பல தொடர்புடைய பிரிவுகள் இது தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன எனவும் தெரிவருகிறது.

# ஹற்றன் முச்சக்கர வண்டி– பஸ் விபத்தில் இருவர் காயம்

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் சிறுகாயங்களுக்குள்ளானதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் குயில்வத்தை பகுதியில் ஹட்டனிலிருந்து கினிகத்தேனை நோக்கிச்சென்ற முச்சக்கரவண்டி வளைவு ஒன்றில் செல்கையில் சாரதியின் கட்டுப்பட்டை மீறி கண்டியிலிருந்து ஹட்டன் வந்த இ.போ.ச பஸ்ஸில் மோதுண்டுள்ளது,

நேற்று முன்தினம் மாலை 05 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் முச்சக்கரவண்டியை செலுத்திய சாரதியும் அதில் பயணித்த ஒருவரும் சிறு காயங்களுக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பில் மேலதிக விசாரணை தொடர்வதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.



# மது பாவனையில் நான்காவது இடத்தில் இரத்தினபுரி மாவட்டம்

சப்ரகமுவ அதிகாரி திருமதி சானிகா

( பலாங்கொடை தினகரன் நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள 11 லட்சம் மக்களில் 2 லட்சத்திற்கும் அதிகமானோர் மது பாவனைக்கு அடிமையாகி உள்ளதாக 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையின் பிரகாரம் தெரிய வந்துள்ளதாக மருந்தக கட்டுப்பாட்டு நிறுவனத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய மதுபாவனையில் இரத்தினபுரி மாவட்டம் நான்காவது இடத்தில் உள்ளதாக இந்த நிறுவனத்தின் சப்ரகமுவ மாகாண வெளி சேவை அதிகாரி திருமதி சானிகா அபேசிங்க தெரிவித்தார்.

இந்த ஆய்வு அறிக்கையின் பிரகாரம் இரத்தினபுரி மாவட்டத்தில் மதுபாவனையில் 1,97,623 நபர்கள் உள்ளதுடன் இரத்தினபுரி மாவட்டத்தில் சிகரெட் பாவனை செய்யும் நபர்களையும் ஒப்பிட்டு பார்க்கும்போது ஆறாவது இடத்தில் அவர்கள் உள்ளதாக தெரிவித்தார்.

மேற்படி தகவல்களை அண்மையில் இடம்பெற்ற இரத்தினபுரி மாவட்ட இணைப்பு கமிட்டி கூட்டத்தில் அவர் வெளியிட்டார். சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மற்றும் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகில சாலிய எல்லாவல ஆகியோரின் தலைமையில் இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலினி லொகுபோதாகம தலைமையில் இந்த கமிட்டி கூட்டம் மாதந்தோறும் நடைபெற்று வருகின்றது.

அதேசமயம் சப்ரகமுவ மாகாண கல்வி திணைக்களத்தின் கீழ் உள்ள தற்பொழுது மூடப்பட்டுள்ள நிவித்திகல நொரகொல்ல வித்தியாலயத்திற்கு உரிய கட்டடங்களும் காணியும் இவ்வாறு போதைப்பொருளுக்கு அடிமையாகி உள்ளவர்களுக்கு சிகிச்சையளிக்கும் மத்திய நிலையமாக இனம் காணப்பட்டுள்ளதாக சானிகா அபேசிங்க இணைப்பு கமிட்டி கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

பலாங்கொடை நகர சபை

# குப்பைகள் சேகரிக்க விலை மனு விண்ணப்பம் மீண்டும் கோர தீர்மானம்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பலாங்கொடை நகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் குப்பைகளை சேகரிக்கும் விலை மனுக்களை (ரென் டர்) மீண்டும் கோர நகர சபையின் விலை மனுக்குழு மீண்டும் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் வருடத்துக்கான விலை மனுக்கள் கோரப்பட்டு அதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ள போதிலும் கிடைத்துள்ள விண்ணப்பங்கள், விலைமனு நியதிகள் சட்ட திட்டங்களை மீறுவதாக உள்ளபடியால் கிடைக்க பெற்றுள்ள அனைத்து விண்ணப்பங்களையும் நிராகரித்து புதிதாக விண்ணப்பங்களை கோருவது என விலை மனுக்குழு தீர்மானித்துள்ளதாக நகர சபை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதற்கிணங்க புதிய விலை மனு விண்ணப்பங்கள் மீண்டும் எதிர்வரும் தினங்களில் கோரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பசறையில் கசிப்பு விற்பனை செய்த இருவர் கைது

பசறை நிருபர்

பசறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எல்டெப் தோட்ட மேற்பிரிவில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி செய்து விற்பனையில் ஈடுபட்ட இருவரை பசறை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். பசறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றினை அடுத்து இப்பகுதியில் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த இவ்விருவரையும் பெருந்தொகையான கசிப்பையும் கைப்பற்றியுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரையும் பதுளை மஜிஸ்திரேட் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உதவி பொலிஸ் அதிகாரி இஷார குமார தலைமையிலான குழுவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். எல்டெப் தோட்ட மேற்பிரிவில் நீண்ட காலமாக இடம்பெறும் கள்ளச்சாராயப் பாவனையால் பலர் மதுவிற்கு அடிமையாகியுள்ளதுடன், குடும்ப சமூக ரீதியான பிரச்சினைகளால் குடும்பங்கள் பல்வேறு சமூக சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலையும், விசனமும் வெளியிடுகின்றனர். இப்பகுதியில் சட்டவிரோத மது விற்பனையை தடை செய்ய கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பலாங்கொடையில் மழை; மரக்கறி உற்பத்தி பாதிப்பு

பலாங்கொடை தினகரன் நிருபர்

பலாங்கொடை பகுதியிலும் மற்றும் அண்மித்த பகுதிகளிலும் இத்தினங்களில் பெய்துவரும் கடும் மழையின் காரணமாக இப்பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மரக்கறி உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தினங்களில் இப்பகுதியில் பெய்து வரும் கடும் மழையின் காரணமாக பயிரிடப்பட்டுள்ள மரக்கறி வகைகள் அனைத்தும் அழிந்து விடுவதாக உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

லீக்ஸ், வட்டக்காய், தக்காளி, போஞ்சி, வெண்டிக்காய், ராபு, கோவா போன்ற மரக்கறி வகைகளுக்கு இந்த மழையினால் அதிக அளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்து மழை பெய்ததால் இப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள மரக்கறி வகைகள் அனைத்தும் அழிந்துவிடும் அவதானம் உள்ளதாக மேலும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இதன் காரணமாக எதிர்வரும் காலங்களில் மரக்கறி வகைகளின் விலை உயர்வடையும் எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

# நிவித்திகல பிரதேச சபையின் பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர் ராஜினாமா

பலாங்கொடை தினகரன் நிருபர்

நிவித்திகல பிரதேச சபையின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினரான எம். எம். ரத்ன திலக தனது உறுப்பினர் பதவியிலிருந்து ராஜினாமா செய்யும் கடிதத்தை சபை தலைவர் குலதுங்க லியனகே இடம் கையளித்துள்ளார்.

தனிப்பட்ட மற்றும் அரசியல் சார்பில் இடம்பெற்றுள்ள பிரச்சினைகள் பல சம்பந்தமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உயர் அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் பின்னர் இந்த தீர்மானத்துக்கு வந்ததாக சபை உறுப்பினர் ரத்னதிலக தெரிவித்தார்.

இந்த பதவி விலகல் சம்பந்தமாக இரத்தினபுரி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி மற்றும் பிரதி தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். 2011 ஆம் ஆண்டில் நிவித்திகல பிரதேச சபையின் உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்ட ரத்ன திலக 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தெல்வல 14ஆம் ஆம் இலக்க பிரிவில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த உறுப்பினர் வெற்றிடத்துக்காக அந்தப் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்திய அக்கட்சியின் மேலதிக வேட்பாளராக போட்டியிட்ட திருமதி இனோகா பிரியதர்ஷினியை நியமனம் செய்ய தீர்மானம் எடுத்துள்ளதாக அறியப்படுகிறது.



ஹேலீஸ் பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை கிரேட்வெஸ்டன் தோட்ட நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெண் தொழிலாளர்களுக்கான சிறந்த கொழுந்து பறிப்பாளர் போட்டியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை பெற்ற பெண் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்தால் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதன்போது தோட்ட முகாமையாளர் சரத் ரணவீர, உதவி முகாமையாளர்கள் டீஹன் குலன்கமுவ, ரவிஸ்க லக்சான், தலைமை வெளிக்கள உத்தியோகத்தர்கள் வெள்ளைச்சாமி, விஜயன், கருப்பையா, தோட்ட உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (படங்கள்: தலவாக்கலை குறூப் நிருபர்)

# நாட்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடி நீர்

இதுவே என் இலட்சியம்
- அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

நான் மரணிக்க முன் இந்நாட்டிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீரைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே எனது இலட்சியம் என நீர் வளத்துறை அமைச்சரும் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். இரத்தினபுரியில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்நாட்டில் குடிநீர் இல்லாத வீடுகள் எதுவும் இருக்கக்கூடாது. குடி நீர், மலசலகூடம் இல்லாத வீடுகளில் வசிப்பவர்கள் வசதி குறைந்தவர்களாவர். இதுவே எனது இலட்சியம் ஆகும்.

எனது இலட்சியம் நிறைவேற முன் மரணிக்கலாம். ஆனால் நான் மீண்டும் பிறந்தால் இந்த இலட்சியத்துக்காகவே போராடுவேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# கடவுளின் எண்ணங்களும் வழிமுறைகளும் உயர்ந்தவை

மனிதர்களாகிய நாம் ஒன்றை எண்ணியிருப்போம் ஆனால் நாம் எண்ணியதற்கு மாறாக கடவுள் வேறொன்றைச் செய்து முடித்திருப்பார்.

அதுபோன்று நமக்கென்று ஒருசில வழிமுறைகளை வைத்திருப்போம். அந்த வழிமுறைகள்தான் சரியானவை.மற்றவை எல்லாம் தவறானவை என்று நினைத்திருப்போம். ஆனால் ஆண்டவர் நாம் நினைத்ததற்கும் மாறாக வேறொன்றைச் செய்திருப்பார்.



இதைத்தான் கடந்த ஞாயிறு முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா, ஆண்டவர் சொல்வதாக, “என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல; உங்கள் வழிமுறைகள் என் வழிமுறைகள் அல்ல” என்கின்றார்.

இறைவனின் எண்ணங்களும் வழிமுறைகளும் மனிதனின் எண்ணங்களையும் வழிமுறைகளையும்விட முற்றிலும் வேறானவை. அவை மனித எண்ணங்களையும் வழிமுறைகளையும்விடப் பன்மடங்கு உயர்ந்தவை. என்பதற்கு மிகப்பெரிய சான்றாக இருப்பதுதான் நற்செய்தியில் இயேசு சொல்லக்கூடிய ‘திராட்சைத் தோட்ட உரிமையாளர் உவமை’.

இவ்வுவமையின் வாயிலாக இயேசு நமக்குச் சொல்லும் செய்தியானது.

**இறைநீதி, அநீதி அல்ல**

வழக்கமாக மனிதர்களாகிய நாம் வேலைக்கேற்ற கூலியைக் கொடுப்போம். ஒருவர் நம்மிடம் எட்டு மணிநேரம் வேலை செய்தால் முழுச் சம்பளமும் அதைவிடக் குறைவான நேரம் வேலை செய்தால் சம்பளத்தைப் பாதியாகவோ அல்லது கொஞ்சம் பிடித்துக்கொண்டோ கொடுப்போம். ஆனால், நற்செய்தியில் இயேசு கூறும் உவமையில் வருகின்ற திராட்சைத் தோட்ட உரிமையாளர் காலையில் வந்தவருக்கும் மாலை ஐந்து மணிக்கு வந்தவருக்கும் ஒரு தெனாரியம் வீதம் ஒரே கூலியைக் கொடுக்கின்றார். திராட்சைத் தோட்ட உரிமையாளர் இவ்வாறு செய்ததைப் பார்த்துவிட்டு முதலில் வேலைக்கு வந்தவர்கள் “பகல் முழுவதும் வேலைப் பளுவையும் கடும் வெயிலையும் தாங்கிய எங்களோடு இவர்களையும் இணையாக்கிவிட்டீரே” என்று முணுமுணுக்கின்றார்கள்.

இவர்கள் இவ்வாறு முணுமுணுப்பதால் திராட்சைத் தோட்ட உரிமையாளர் இவர்களுக்கு அநீதி இழைத்துவிட்டாரோ என்று நமக்கு எண்ணத் தோன்றலாம்.

உண்மையில் திராட்சைத் தோட்ட உரிமையாளர் முதலில் வந்தவர்களுக்கு அநீதி இழக்கவில்லை; மாறாக அவர் அவர்களிடம் பேசியது போன்று ஒரு தெனாரியம் கூலியாகக் கொடுக்கின்றார். அதனால் அது நீதிதான்.

அதேவேளை, அவர் கடைசியில் வந்தவர்களுக்கும் ஒரு தெனாரியம் கூலி கொடுக்கின்றார் எனில் அது அவர்கள்மீது அவர் கொண்ட இரக்கம், கரிசனையாகும்.

ஒருவேளை திராட்சைத் தோட்ட உரிமையாளர் கடைசியில் வந்தவர்களுக்கு ஒரு தெனாரியத்திற்கும் குறைவாகக் கூலி கொடுத்தால் அந்த வேலையாளின் கூலியை நம்பி இருக்கும் குடும்பம் பட்டினியில் வாடும். இதன்பொருட்டே திராட்சைத் தோட்ட உரிமையாளர் கடைசியில் வந்தவருக்கும் ஒரு தெனாரியம் கொடுக்கின்றார். இவ்வாறு திராட்சைத் தோட்ட உரிமையாளர் அல்லது கடவுள் வறியவர்கள், ஏழைகள் மீதான தன்னுடைய தனிப்பட்ட இரக்கத்தையும் கரிசனையையும் காட்டுகின்றார்.

**ஒப்பிட்டு வாழ்வதை உதறித் தள்ளுவோம்**

திராட்சைத் தோட்ட உரிமையாளர் கடைசியில் வந்தவர்களுக்கும் ஒரு தெனாரியம் கொடுத்ததை அல்லது அவர் அவர்கள்மீது இரக்கம் காட்டியதைப் பார்த்து, முணுமுணுக்கும் முதலில் வந்த பணியாளர்களிடம் அவர், “நான் நல்லவனாய் இருப்பதால் உனக்குப் பொறாமையா?” என்பார். இதை நம்முடைய சிந்தனைக்கு எடுத்துக்கொள்வோம்.

கடவுள் ஒருவருக்கு அருள்பாலித்து அவரை நல்ல நிலையில் வைத்திருந்தால் அதைக்கண்டு நாம் மகிழ்ச்சியுவேண்டுமே ஒழிய பொறாமை கொள்ளக்கூடாது.

இன்றைக்கும் பலர் அடுத்தவருடைய வளர்ச்சியைக் கண்டு அல்லது ஒருவர் கடவுளின் இரக்கத்தையும் அருளையும் பெற்றுக்கொண்டதைக் கண்டு அவர்மீது பொறாமை கொள்கின்றார்கள். அவரைப் பாராட்டவோ அல்லது அவரும் தானும் தனித்தன்மையானவர்கள் என்று ஏற்றுக் கொள்ளக்கூடிய பக்குவம் இல்லாமல் இருக்கின்றார்கள்.

இதனாலேயே பல்வேறு தீமைகள் ஏற்படுகின்றன. தாவீதின் வளர்ச்சியைக் கண்டு சவுல் மகிழ்ச்சியடையாமல பொறாமை கொண்டான். இதனாலேயே சவுல் தாவீதைக் கொல்லத் துணிந்தான். கடைசியில் சவுல் தன் பொறாமையாலேயே வீழ்ந்தான். பிறரைப் பொறாமைக் கண்ணோடு பார்ப்பவர்... வறியவராகப் போவதை அவர் அறியார்” (நீமொ 28: 22) என்கின்றது நீதிமொழிகள்.

ஆகையால் நாம் நம்மிடம் இருக்கின்ற பொறாமையை ஒப்பிட்டுப் பார்க்கும் மனப்பான்மையை விட்டொழித்து வறியோர், எளியோர் ஆகியோரிடம் ஆண்டவரைப் போன்று அன்பும் இரக்கமும் கொண்டு வாழ்வோம்.

‘ஆண்டவரின் நீதி நெறிகள் உண்மையானவை; அவை முற்றிலும் நீதியானவை’ (திபா 19:9) என்பார் திருப்பாடல் ஆசிரியர். ஆகையால், நாம் ஆண்டவரின் நீதி நெறிகளுக்கு ஏற்ப வாழ்ந்து எளியோரிடம் அன்பும் இரக்கமும் கொண்டு வாழ்வோம். அதன் வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

அருட்பணி
மரிய அந்தோனிராஜ்...

## 200 ஆவது ஆண்டை நிறைவு செய்யும் புனித வியாகுல மாதா ஆலயம்







கொழும்பு புதுச் செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலயத்தின் 200 ஆவது வருட ஜூபிலி பெருவிழா நிகழ்வுகள் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. பேராயரின் தலைமையில் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்படுவதையும் திருவிழா திருப்பலி நிகழ்வுகளில் கலந்துகொண்ட விசுவாசிகளையும் படங்களில் காணலாம். (பட உதவி; அருட்பணி சுனில் டி சில்வா)

## நற்செய்தியாளர் மத்தேயு

இவ்வார புனிதர்

மத்தேயு ஆண்டவரின் பன்னிரு சீடர்களில் ஒருவராவார். மேலும் அவர் ஒரு நற்செய்தியாளரும் கூட. அவரை லேவி என்றும் அழைப்பர்.

நற்செய்தியில் நூலாசிரியர்கள் அவரை அல்பெயுவின் மகன் எனக் குறிப்பிடுகின்றனர். கலிலேயா மாகாணத்தின் கபர்நகூம் நகரில் வரி சேகரிக்கும் நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த அவரை ஆண்டவர் தன் பின் செல்ல அழைத்தார்.



அவரும் உடனே தன் பணியை விட்டு விலகி திருத்தூதராக மாறினார். (மாற். 3:18, லூக் 6:16, தி. ப. 1:13, மாற், 2:14, லூக் 5:17) இன்னும் பல இடங்களில் அவரைப் பறறி நாம் அறிய முடிகிறது. (மத். 9( மற்றும் 10:3)

வரி சேகரிப்பவர் என்பதால் கிரேக்கம் மற்றும் அரமாயிக்கு மொழிகளில் எழுத்தறிவும் கணித அறிவும் கொண்டிருப்பார் என்பது பலரது அனுமானம். திருவிவிலியத்தின் பழைய ஏற்பாடு முற்றிலும் எபிரேய மொழியிலும் புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டுள்ளன என்பதை நாம் அறிவோம்.

புதிய ஏற்பாட்டின் ஒரே ஒரு புத்தகம் மட்டும் ஆண்டவர் இயேசுவின் சொந்த மொழியாகிய அரமாயிக்கு மொழியில் எழுதப்பட்டுள்ளது. அது மத்தேயு எழுதிய நற்செய்தி நூலே.

ஆண்டவர் அவரது இல்லத்தில் விருந்துண்ண சென்றிருந்தமை பரிசேயர் மற்றும் மறைநூல் அறிஞர்களின் விமர்சனத்துக்கு உள்ளாகியது. அதற்குப் பதிலாக நோயாளர்களுக்கே மருத்துவர்களது பணி அவசியப்படுகின்றது என இயேசு நியாயப்படுத்தினார்.

பின்னாட்களில் அவர் யூதேயாவில் உள்ள யூதர்கள் மத்தியில் நற்செய்தி அறிவித்த பின் பிறநாடுகளுக்கும் சென்றார். என புனித எரேணியுஸ் மற்றும் அலெக்சாந்திரியா நகர் கிளமன்ட் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

நீண்ட நாள் பணியின் பின் கஸ்பியன் கடலுக்கு தெற்கே உள்ள எதியோப்பியா நாட்டில் அவர் மறைசாட்சியாக மரித்தார் என்பது வரலாறு.

(ஸ)

## அமெரிக்காவில் கத்தோலிக்க மக்கள்;

# ஆலயங்களை திறக்க வலியுறுத்தி திறந்தவெளி திருநற்கருணை பவனி

அமெரிக்காவில் ஆலயங்கள் வழிபாடுகளுக்கு திறந்துவிடப்படவேண்டும் என்ற வேண்டுகோளை வலியுறுத்தி சென். பிரான்ஸிஸ்கோ உயர் மறைமாவட்டத்தின் மக்கள் கடந்த 20ம்திகதி ஞாயிறன்று திருநற்கருணை பவனி நடத்தினர்.



"இறைவனுக்கு முதலிடம் வழங்கவும் அவர் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தவும் நாம் இணைந்து நடப்போம்" என்ற அழைப்பை அமெரிக்க சென். பிரான்ஸிஸ்கோ உயர் மறைமாவட்டத்தின் பேராயர் சல்வடோர் கொர்டிலேயோனே ஆண்டகை மறைமாவட்ட மக்களுக்கு விடுத்துள்ளார்.

மறைமாவட்டத்தின் திருநற்கருணை பவனியில் கலந்துகொள்ளவேண்டுமென பேராயர் அவர்கள் அழைப்பு விடுத்திருந்தார். சென். பிரான்ஸிஸ்கோ பெருநகரில் செப்டம்பர் 20ஆம் திகதி திருநற்கருணை பவனிகள் தொடங்கி அம்மறை மாவட்டத்தின் பேராலயம் நோக்கிச் சென்று பேராலயத்திற்கருகே அமைந்துள்ள திறந்தவெளியில் திருப்பலிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நமது நாட்டை குறித்து அச்சங்கள் எழுந்துள்ளன. ஆயினும், அச்சங்கள் நம் வாழ்வை ஆள்வதற்கு விடக் கூடாது; நம்பிக்கை கொண்ட மக்கள் என்பதை பறைசாற்ற நாம் கூடிவருவோம் என்று பேராயர் கொர்திலேயோனே அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்பானிய மொழி பேசுவோரை அதிகமாகக் கொண்டிருக்கும் மேற்குக் கடற்கரையில் வாழ்வோர் இந்த ஸ்பானிய கலாச்சார மாதத்தையும், நாம் அனைவரும் பல்வேறு கலாச்சாரங்களைச் சார்ந்திருந்தாலும் ஒற்றுமையாக வாழமுடியும் என்பதை உணர்த்துவதற்கும் இந்த முயற்சியை மேற்கொள்வோம் என்று பேராயர் கொர்திலேயோனே மக்களிடம் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வரலாற்றில் பலமுறை திருஅவையின் செயல்பாடுகளை தடைசெய்வதற்கு பல அரசுகள் முயன்றுள்ளன எனினும் இறுதியில் அத்தடைகளை வென்று நம்பிக்கை கொண்ட மக்கள் முன்னேறியுள்ளனர் என்றும் பேராயர் கொர்திலேயோனே அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஜெரோம் லூயிஸ்...



நீதிச் சேவை மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி அண்மையில் சிறைச்சாலை தலைமையக மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் மேன்முறையீட்டு அணியை தோற்கடித்து நீதி அமைச்சு அணி வெற்றியீட்டியது. வெற்றி பெற்ற அணி கிண்ணத்தை பெறுவதையும் வீரர்களையும் படங்களில் காணலாம்.

# ஊடக ,இலக்கியத்துறையில் நாற்பது வருடங்கள் சாதனை

## கலாபூஷணம் எம்.ஏ.எம்.நிலாமுக்கு அகவை 75

மூத்த பத்திரிகையாளரும் கவிஞரும் எழுத்தாளருமான கலாபூஷணம் எம்.ஏ.எம் நிலாம் இன்று 75 ஆவது அகவையில் கால்பதிக்கிறார்.சுமார் 40 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் அதிசிறந்த பணிகளை மேற்கொண்டகலாபூஷணம்நிலாம்,ஊடகப் பணியிலிருந்து கடந்த மாதம் ஓய்வு பெற்றார். இவர் இலக்கியத்துறையில் 50 ஆண்டுகால பணியையும் நிறைவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இலக்கிய, ஊடகத்துறையிலிருந்து ஓய்வு பெற்றாலும் தொடர்ந்து எழுதிவரும் நிலாம் கவிதைத் துறையில் முன்னணி கவிஞர்களுடன் ஒப்பிட்டுப் பேசக் கூடியவர்.

1946 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 திகதி கல்லொழுவை மண்ணில் பிறந்த

எம்.ஏ.எம் நிலாம் 1963 ஆம் ஆண்டு முதல் எழுத்துப் பணியில் ஈடுபட்டு, பிரதேசத்தில் வாழும் மூத்த இலக்கியவாதியான மூ.பஷீரின் வழிகாட்டலில் எழுத்துப் பணியை தொடர்ந்தார். 1977 ஆம் ஆண்டில் தினகரன் பத்திரிகையின் கொழும்பு நிருபராக இணைந்து கொண்ட நிலாம், பின்னர் வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் செய்தியாளராக, உதவி ஆசிரியராக, பிரதான உதவி ஆசிரியராகவும் பணி புரிந்தார். பின்னர் 2015 ஆம் ஆண்டில் மீண்டும் லேக் ஹவுஸ் நிறுவனத்தில் இணைந்து, தினகரன் உட்பட தமிழ் வெளியீடுகளுக்கான ஆலோசகராக சுமார் 5 ஆண்டு காலம் பணிபுரிந்துவிட்டு ஓய்வு பெற்றுள்ளார். இலங்கையில் இருந்து வெள்ளை மாளிகைக்கு சென்ற முதலாவது தமிழ் பத்திரிகையாளர் நிலாம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்தியா, பாகிஸ்தான் நேபாளம், மலேஷியா உள்ளிட்ட பல நாடுகளிலும் இடம்பெற்ற ஊடகத்துறை மற்றும் இலக்கிய மாநாடுகளில் பங்குபற்றி ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்த ஆளுமை கொண்டவர்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் பொதுச் செயலாளராகவும் வேறு பல பதவிகளையும் வகித்த இவர், இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தினால் 2015 ஆம் ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்ட விருது வழங்கும் வைபவத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

75 வயதை பூர்த்தி செய்துள்ள நிலாம் தற்போதும் துடிப்புடன் எழுத்துப் பணியை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றார். பவள விழா கொண்டாடும் ஈழத்து நூன் என்ற புனைப்பெயரில் எழுதி வரும் கலாபூஷணம் நிலாம் எழுதிய தட்டு "தாவாரம்" எனும் புது கவிதை தொகுதி எதிர்வரும் அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்பட இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.



கிராமிய பாதைகளை "காப்பட்" வீதியாக அபிவிருத்தி செய்யும் ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ்,கலாவெவ தேர்தல் தொகுதியிலுள்ள கிராமிய பாதை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.இத்திட்டத்தை அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன அண்மையில் ஆரம்பித்து வைத்த போது எடுத்த படம். சுமார் ஒரு இலட்சம் கிலோமீற்றர் கிராமிய பாதைகள், இத்திட்டத்தின் கீழ் காப்பட் வீதியாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. (படம் :அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

**அரசாங்க அறிவித்தல்**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் கணிக்கப்படும் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (அடிப்படை: 2013=100)**

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் கணிக்கப்பட்ட 2020 ஆகஸட் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் **137.8 (நூற்றி முப்பத்து ஏழு தசம் எட்டு)** என பொது அறிவித்தலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கலாநிதி ஐ.ஆர். பண்டார**
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம்

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**
**த.பெ.இல.: 121,**
**பத்தரமுல்ல.**
21.09.2020

# பட்டதாரி ஆசிரியர்களுக்கு சித்திரம் வரைதல் பயிற்சி

(புத்தளம் தினகரன் நிருபர்)

பட்டதாரி ஆசிரியர்களாக அண்மையில் நியமனம் பெற்றவர்களுக்கு சித்திரப்பாடம் தொடர்பான முழு நாள் செயலமர்வு ஒன்று அண்மையில் வாரியபொலவில் உள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.



இப்பயிற்சி செயலமர்வில் பிரதான வளவாளராக வடமேல் மாகாண பயிற்றுவிப்பாளரும், அகில இலங்கை வளவாளருமான கலாநிதி எம். எம்.முஹம்மது கலந்து கொண்டார். வடமேல் மாகாண கல்விப் பணிமனையின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான ஜெயந்திலா,வட மேல் மாகாண பிரதிக் கல்விப்பணிப்பாளர் (தமிழ் பிரிவு) முஹம்மது ரியாஸ் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.சுமார் 80 க்கும் மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

தொழில்நுட்பங்கள், இலக்கங்கள், பறவைகள், எழுத்துக்களை கொண்டு சித்திரம் வரைந்து ஆரம்ப வகுப்பு மாணவர்களை இலகுவாக கவர்தல், கற்பித்தல் அணுகுமுறைகள், பாட நுழைவுகள் எவ்வாறு அமைய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு விளக்கங்கள் வளவாளரினால் தெளிவுபடுத்தப்பட்டன.





பிரமிட் திட்டங்களில் உங்களுடைய பெறுமதியான பணத்தினை இழக்க வேண்டாம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

20.09.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 588,743
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 24,164,390.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசுகள் 02 ரூ. 100,000.00 பரிசுகள் 21
NLB

தன நிதானய
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி - 2020/09/20
சீட்டிழுப்பு இலக்கம் - 318
Z 05 13 29 69

| | கட்டமைப்பு | பரிசுகள் | [illegible] |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | [illegible] | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | [illegible] | 100,000.00 | 02 |
| 3 ஆம் பரிசு | [illegible] | 3,000.00 | 54 |
| 4 ஆம் பரிசு | [illegible] | 1,000.00 | 114 |
| 5 ஆம் பரிசு | [illegible] | 100.00 | 2,972 |
| 6 ஆம் பரிசு | [illegible] | 60.00 | 1,954 |
| 7 ஆம் பரிசு | [illegible] | 20.00 | 50,319 |
| 8 ஆம் பரிசு | [illegible] | 20.00 | 9,441 |

2,085,640.00
64,856
117,089,200.64

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 2546 சீட்டிழுப்பு திகதி 20.09.2020
Y 06 40 42 57

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | [illegible] |
|---|---|---|---|
| 1 பரிசு | [illegible] | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | [illegible] | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | [illegible] | ரூ. 2,000.00 | 152 |
| 4 பரிசு | [illegible] | ரூ. 1,000.00 | 307 |
| 5 பரிசு | [illegible] | ரூ. 100.00 | 8272 |
| 6 பரிசு | [illegible] | ரூ. 40.00 | 5390 |
| 7 பரிசு | [illegible] | ரூ. 20.00 | 134081 |
| 8 பரிசு | [illegible] | ரூ. 20.00 | 24599 |

172,805
ரூ. 6,127,400.00
ரூ. 62,829,093.60

சீட்டிழுப்பு இலக்கம் : 4251 உத்தியோகபூர்வ முடிவுகள்
மஹஜன சம்பத
திகதி: 20-09-2020
L 3 6 3 4 2 2

| | | | |
|---|---|---|---|
| [illegible] | 3 6 3 4 2 2 | 2,000,000/- | 01 |
| [illegible] | 6 3 4 2 2 | 100,000/- | 07 |
| [illegible] | 3 4 2 2 | 10,000/- | 89 |
| [illegible] | 4 2 2 | 1,000/- | 908 |
| [illegible] | 2 2 | 100/- | 9,146 |
| [illegible] | 2 | 20/- | 90,435 |
| [illegible] | 3 6 3 4 2 | 10,000/- | 08 |
| [illegible] | 3 6 3 4 | 1,000/- | 93 |
| [illegible] | 3 6 3 | 100/- | 915 |
| [illegible] | 3 6 | 50/- | 8,986 |
| [illegible] | L | 20/- | 36,159 |

ரூ. 8,658,280.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,644,409.00
தேசிய லொத்தர் சபை
www.nlb.lk

செவண
திகதி 2020/09/20
சீட்டிழுப்பு இலக்கம் 297
E 31 39 46 56

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுகள் | [illegible] |
|---|---|---|---|
| 1ம் பரிசு | [illegible] | 1,000,000/- | - |
| 2ம் பரிசு | [illegible] | 100,000/- | 03 |
| 3ம் பரிசு | [illegible] | 1,000/- | 68 |
| 4ம் பரிசு | [illegible] | 200/- | 131 |
| 5ம் பரிசு | [illegible] | 100/- | 3,101 |
| 6ம் பரிசு | [illegible] | 50/- | 1,823 |
| 7ம் பரிசு | [illegible] | 20/- | 45,138 |
| 8ம் பரிசு | [illegible] | 20/- | 6,836 |

14,000,000/- 1,842,930/-

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 618
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 20/09/2020
L 06 08 11 45 51

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | [illegible] |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | [illegible] | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | [illegible] | 100,000.00 | 06 |
| 3 ஆம் பரிசு | [illegible] | 1,000.00 | 129 |
| 4 ஆம் பரிசு | [illegible] | 500.00 | 268 |
| 5 ஆம் பரிசு | [illegible] | 100.00 | 7,011 |
| 6 ஆம் பரிசு | [illegible] | 40.00 | 4,562 |
| 7 ஆம் பரிசு | [illegible] | 20.00 | 114,352 |
| 8 ஆம் பரிசு | [illegible] | 20.00 | 20,786 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.235,816,234.75
ரூ.10,581,282.00
ரூ.16,042,680.80
ரூ. 5,450,140.00




# சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் நாட்டின் பொருளாதாரத்துக்கு பாரிய பங்களிப்பு

(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)





சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் நாட்டின் பொருளாதாரத் துக்கு முதுகெலும்பாகு மென பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ தெரிவித்தார்.

சிறிய மற்றும் நடுத் தர தொழில் முயற்சியா ளர்களுக்கான தொழில் அபிவிருத்தி மாநாடு (20) ஹம்பாந்தோட்டை மாகம் ருஹூனு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது முகாமைத்துவ கணக்கியல் நிறுவனத்தின் தலைவ ரும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்திக் குழுவின் இணைப்பாளருமான பேராசிரியர் லக்ஷ்மன் ஆர் வடவல, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் கொவிட் 19 ஆலோசனைகளையும் பிரதமரிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, விமல் வீரவன்ஸ மற்றும் மஹிந்த அமரவீர,பிரதி அமைச்சர்களான அஜித் நிவாட் கப்ரால் மற்றும் டி.வி. சானக ஆகி யோருடன் பெரும் திரளானோர் கலந்து கொண்டனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது: சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர் கள் பிரிவில் சகலதும் உள்ளடக் கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக் கின்றது. எமது நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 52 வீதமான வற்றுக்கு இப் பிரிவு பங்களிப்புச் செய்கிறது. மொத்த தொழில்களில் 45 வீதமும் இதில் அடங்குகின் றன. இது போன்றே இந்தப் பிரிவு நாட்டின் மொத்த தொழில் முயற் சியாளர்களில் 75 வீதத்தை கொண் டுள்ளது.கொவிட் 19 பாதிப்பிற்கு உள்ளான தொழில் முயற்சியாளர் களை கட்டியெழுப்ப மத்திய வங் கியின் ஒத்துழைப்புடன் 100 பில்லி யன் ரூபாவை வழங்கக் கூடியதாய் இருந்தமை மகிழ்ச்சியே. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற் சியாளர்களால் மேற்கொள்ளப் படும் ஏற்றுமதிகள் உலகளாவிய ரீதியல் 30 வீதமாக இருந்தாலும் இலங்கையில் இது 5 வீதமாகவே காணப்படுகிறது. இதனைஅதிகரிக்க அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

இந்த தொழில் முயற்சியாளர்கள் முன்னேறுகிறார்கள் என்பதற்கு வங்கிகள் சாட்சியாக உள்ளன. வங் கிகளினூடாகப் பெறும் கடன்க ளுக்கான அறவீடுகளை, இவர்கள் ஒழுங்காக செலுத்துவதால் வங்கித் துறையின் கடன் பாதிப்பு குறைவ டைகிறது.

இதனூடாக வங்கிகளினூ டாக கொடுக்கல் வாங்கல் மேற் கொள்ளும் சகல தரப்பினருக்கும் மேலும் கடனைப் பெறமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## சுகாதார மேம்பாடுகளில் பொது மக்கள் அதிருப்தி

(ஊவா சுழற்சி நிருபர்)

பண்டாரவளை மாநகர சபை யினரால் மேற்கொள்ளப்படும் சுகாதார மேம்பாடு திருப்திகரமான தாக இல்லை என மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். இலங்கையில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உல் லாசப் பயணிகளை கவர்ந்த மிகவும் சீதோசன கால நிலை கொண்ட பண் டாரவளை மாநகரில், அண்மைக் காலமாக மேற்கொள்ளப்படும் சுகாதார மேம்பாடுகள் திருப்திகர மானதாக இல்லையென நகரிலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்கள், பொது மக்கள், பஸ் பிரயாணிகள் பலரும் அதிருப்தி தெரிவிக்கின்ற னர்.

இம் மாநகரில் பஸ் நிலையம். வேன் தரிப்பிடம்,ஐக்கிய வர்த்தக தொகுதி மற்றும் பிரதான வர்த்தக தொகுதி போன்வற்றில் அமைந்துள்ள மலசல கூடங்களில் கொமட், சிங் நீர் தாங்கிகள் மற்றும் உள்ளக கட்டமைப் புக்கள் ஆங்காங்கு உடைந்தும் சிதைந் தும் காணப்படுகின்றன. இதனால் பலர் சிரமங்களை மேற்கொள்வதாக தெரிவிக்கின்றனர். இது தவிர நகரின் மத்தியில் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடம், மற்றும் பஸ் நிலைய மலசல கூடங்களில் வடியும் கழிவு நீர், பிரதான வீதியின் வடிகானுக்குத் திருப் பியுள்ளதால் வடிகான் நிரம்பி வழிந்து நகரெங்கும் துர்நாற்றம் வீசுகிறது. மாநகர சபை இதுவிடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் மக்கள் கோருகின்றனர்.

களுத்துறை மாவட்டத்தில்

## காற்றுடன் கூடிய கடும் மழை தொழிலாளர்கள் பாதிப்பு

(பேருவளை விசேட நிருபர்)

களுத்துறை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கடும் காற்றுடன் இடைக்கிடை பெய்து வரும் மழை காரணமாக, மாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளது.

காலை, மாலை மற்றும் இரவு வேளைக ளில் இவ்வாறு கடும் மழை பெய்து வருவத னால் இரவு, அதிகாலை நேரங்களில் கடும் குளிரான காலநிலை நிலவுகிறது.

இடைக்கிடை பெய்து வரும் மழையால் தோட்டங்களில் இறப்பர் பால் சேகரிக்கும் பணிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

சீவல், விவசாயம் மற்றும் கடற்றொழில் துறைகளும் தொடர் மழையால் பாதிக்கப்பட் டுள்ளன.

தென்னிலங்கைப் பகுதியில் கடல் கொந்த ளிப்புடன் காணப்படுவதால், மீனவர்கள் கட லுக்கு செல்வதை தவிர்த்து வருகின்றனர்.

கடும் மழை காரணமாக ஆறுகள், குளங் கள், ஓடைகள், கிணறுகளிலும் நீர்மட்டம் அதிகரித்துள்ளன.





அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.இஷாக் ரஹுமானின் வேண்டுகோளுக்கிணங்க, அல் ஹிமா சமூக சேவைகள் அமைப்பின் ஊடாக குவைத் நிதியுதவியில் ஹொரவப்பொத்தானை தெம்பிரியெத்தேவலவில் புதிதாக ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்மாணிக்கப்படது.இதன் திறப்பு விழாவில் கலந்து கொள்ள வந்த அதிதிகளை மத்ரசா மாணவர்கள் கலாசார நிகழ்வுடன் கோலாகலமாக அழைத்து வருவதையும் நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாலையும் படங்களில் காணலாம். (படங்கள்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)




இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

கேள்வி அழைப்பு

வனசீவராசிகள் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கான சுத்திகரிப்பு சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் – 2020– 2021

WL/02/20/CL.SER/2020/2021

வனசீவராசிகள் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கு 2020/2021ஆம் வருடங்களுக்கான சுத்திகரிப்புச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரலின் கீழ் தகுதி வாய்ந்த மற்றும் ஆற்றலுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. சுத்திகரிப்புச் சேவைகள் வழங்க வேண்டிய தகவல்கள் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதுடன் தேவையானால் அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்த்து கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம்.
02. சுத்திகரிப்புச் சேவைகளை மேற்கொள்வதற்கு இயைபுடைய ஒப்பந்த நிறுவனத்திற்கு சுத்திகரிப்பு சேவைகளை நடாத்திச் செல்வதற்கான வியாபாரப் பதிவு இருத்தல் வேண்டும் என்பதுடன் 2020-08-31ஆம் திகதியில் 10 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதுடன் கேள்வியைச் சமர்ப்பிக்கும் தினத்தில் ஆகக் குறைந்தது வேறு பத்து (10) நிறுவனங்களுக்காவது இதனையொத்த சேவைகளை வழங்கியிருத்தல் வேண்டும்.
03. கடந்த 03 வருடங்களினுள் மாதமொன்றிற்கு 300,000.00 ரூபாவிற்குக் குறையாததும் வருடத்திற்கு 3,600,000.00 ரூபாவுக்குக் குறையாத சேவை வழங்கியமையை ஆவணச் சாட்சி மூலம் உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன் நிதி ஸ்திரத்தன்மையுடைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் என்பதை உறுதி செய்வதற்கு கடந்த கிட்டிய மூன்று வருடங்களுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. நிறுவனம் வசம் தற்போது சேவையில் ஈடுபடுத்தியுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகக் குறைந்தது 25ஆக இருத்தல் வேண்டும். இதை ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆவணங்கள் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
05. தயாரிக்கப்பட்டுள்ள கேள்விப் படிவங்களை 2020-10-12ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நிதிப் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றுடன் மீளளிக்கப்படாத 1,500.00 ரூபா கட்டணத்தை திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்தியதன் பின் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. கேள்வி ஆவணங்களுடன் 50,000.00 ரூபா பெறுமதியான கேள்விப் பிணை அல்லது கேள்விப் பிணை முறியொன்றை பெறுகை ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது வனசீவராசிகள் திணைக்களத்தின் சிறாப்பருக்கு 2020-10-12ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணை முறியைச் சமர்ப்பிக்காத கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
07. கேள்விப் பிணை முறியானது கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் ஆகக் குறைந்தது 90 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
08. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறாக கடித உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2020-10-13ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
09. கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை 0112-871537 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் தொடர்பான தீர்மானம் எடுக்கும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் இந்த அறிவித்தலில் அல்லது மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்படாத இந்தப் பெறுகைச் செயற்பாட்டிற்குரித்தான ஏதேனும் விடயங்கள் தொடர்பான தீர்வொன்றை வழங்கும் அதிகாரத்தை வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.
10. கேள்விப் படிவங்களைத் தயாரிப்பதற்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்காகவும் தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**


## ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் எரிவாயு ஏற்றிக் கொண்டு கப்பல் வருகை

(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

ஏல்.பீ. எரிவாயுவை ஏற்றிக் கொண்டு நூறாவது கப்பல் ஹம்பாந்தோட்டை ராஜபக்ஷ சர்வதேச துறைமுகத்தை வந் தடைந்துள்ளது.

இதனை வரவேற்கும் விசேட நிகழ்வு ஹம்பாந்தோட்டை ராஜபக்ஷ சர்வதேச துறைமுகத்தின் லாப் எரிவாயு பிரதேசத் தில் இடம்பெற்றது.

ஹம்பாந்தோட்டை ராஜபக்ஷ சர்வ தேச துறைமுக வளாகத்தில் உள் நாட்டு கம்பனியினால் லாப் டேர்மினல்ஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட பின்பு வாயுவை தாங்கி வந்த நூறாவது கப்பல் இதுவாகும்.

லாப் வாயு நிறவனத்திற்கு சொந் தமான கரேஜ் எனும் கப்பலே 1800 மெட்றிக் தொன் எரிவாயுவுடன் ஹம் பாந்தோட்டை ராஜபக்ஸ சர்வதேச துறை முகத்தை வந்தடைந்துள்ளது.



## பாலியல் துஷ்பிரயோகம், பண மோசடி மறைந்திருந்தவர் பொலிஸாரால் கைது

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

வியாபார நிலையத்தினுள் பெண்ணொ ருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த தாக் கூறப்படும் சந்தேக நபரை,பொலிஸார் கைது செய்துள்ளனர். இவரிடம் மேற்ள்ள கொள்ளப்பட்ட விசாரணைகளில் பணமோ சடி,பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட ஏழு குற்றச்சாட்டுக் கள் இவர் மீது சுமத்தப்பட் டிருந்தமை தெரிய வந்துள்ளது. இதற்காக இந்நபருக்கு எதிராக நீதிமன்றம் ஏழு பிடியா ணையும் பிறப்பித்திருந்ததாக, ஹொரவப் பொத்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நபர் ஹொரவப்பொத்தானை நகரில் வியாபார நிலையமொன்றை வாடகைக்கு நடாத்திச் சென்றுள்ளதாகவும் தெரிய வந்துள் ளது. இவ்வியாபார நிலையத்தில் பணிபுரிந்து வந்த பெண்ணையே இவர் பாலியல் துஷ்பி ரயோகம் செய்துள்ளார். இக்குற்றச்சாட்டின் பேரில் அண்மையில் பொலிஸார் இவரைக் கைது செய்து நீதி மன்றில் ஆஜர்படுத்தினர். இன்று 22 ஆம் திகதி வரை இவரை விளக்கம றியலில் வைக்குமாறு கெப்பித்திகொல்லாவ நீதவான் ஹர்ஷன மாலிந்த அல்விஸ் உத்தர விட்டுள்ளார்.

சந்தேக நபர் தொடர்பில் பொலிஸ் பிரிவி னர் நீண்ட விசாரணைகளை மேற்கொண்ட னர்.

கினிகத்ஹேன, ஹொரண, ஹோமாகம, அவிசாவளை, ரத்னபுர மற்றும் கொழும்பு உள்ளிட்ட ஊழல் மோசடி பிரிவுகளிலும் கொட்டாவ பொலிஸ் நிலையத்திலும் சந்தேக நபருக்கு எதிராக முறைப்பாடுகள் பதி யப்பட்டு, இந்நபர் பொலிஸாரால் தேடப் பட்டு வந்துள்ளார்.நீண்ட காலம் தலைம றைவாக இருந்ததாலே இவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. நாட ளாவிய ரீதியில் சந்தேக நபர் பல பண மோச டிகளில் தொடர்பு பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கும் பொலிசார் அதற்காக மூன்று போலி அடையாள அட் டைகளை பயன்படுத்தி வந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தொடர்பில் நாட்டின் சகல பொலிஸ் நிலையங்களிலிருந்தும் தகவல் களை பெற்று கொள்ளவுள்ளதாகவும் அதனூடாக நீதிமன்றில் அறிக்கை சமர் பிக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். ஹொரவப்பொத் தானை பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோ தகர் லக்மால் விஜயரத்ன, சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் விஷாரத சில்வா உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர்.



நுகேகொடை அநுலா வித்தியாலய புதிய கட்டிடத் திறப்பு விழாவில், கலந்து கொண்ட மகளிர் விவகார, சிறுவர் பாதுகாப்பு மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சரும் களுத்துறை மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினருமான பியல் நிசாந்த, ஆசிரியர் ஒரு வருக்கு நினைவுச் சின்னம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த,பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதான ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)



புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியில் மாணவர் கெடட் படையணியை மீள் உருவாக்கும் நோக்குடன் அண்மையில் அக் கல்லூரிக்கு கெடட் அதிகாரி மேஜர் ஏ.டபில்யூ.எம். அலிசப்ரி உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். இதன் போது விளையாட்டுக் குழு சார்பாக ஆசிரியர் எம். றினோஸ், புத்தளம் ஸாஹிரா தேசிய பாடசாலையின் கெடட் பொறுப்பாசிரியராக நியமிக்கப்பட்டார். விளையாட்டு பொறுப்பாசிரியர்களான கலாநிதி எஸ்.ஆர்.எம்.ஆஷாத், எம்.எப்.எம்.ஹுமாயூன், எம்.எப்.எம்.துபைல் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

படம் : புத்தளம் தினகரன் நிருபர்)

## சின்னப்பாடு கடற்கரையில் போதைப்பொருள் மீட்பு

**(கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)**

'உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னப்பாடு கடற்கரைப் பகுதியிலிருந்து, ஹெரோயின் பொதியொன்று நேற்று திங்கட்கிழமை (21) காலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியிலுள்ள மீனவர் ஒருவர் வழங்கிய தகவலுக்கமைய, இந்த ஹெரோயின் போதைப் பொருள் பொதி மீட்கப்பட்டதாக உடப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் ஒரு கிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் பொதியே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இந்த ஹெரோயின் பொதி பழுதடைந்துள்ளதாகவும் இது, சில மாதங்கள் கடலில் இருந்திருக்கலாமெனவும் உடப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

## புத்தளம் மாவட்டத்தில் மாதிரி பாராளுமன்றம்

**புத்தளம் தினகரன் நிருபர்**

"புத்தளம் மாவட்ட மக்களின் பாராளுமன்றம்" எனும் மாதிரி பாராளுமன்றம் ஒன்றினை தோற்றுவிக்க புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் துரித ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்.

புத்தளம் மாவட்டத்தின் பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் அபிவிருத்திகளை கலந்துரையாடி, திட்டமிட்டு செயற்படுத்தும் நோக்கில், மாதிரி பாராளுமன்றத்தை அமைப்பதாக இவர், தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தார். இதற்கமையவே இந்த மாதிரி பாராளுமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பில் இணைந்து செயற்பட விரும்புகின்றவர்கள் தங்களது பெயர், பிரதேச செயலாளர் பிரிவு, கிராமம், பால், வயது, தொழில் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறுந் தகவல் மூலமாகவோ, வட்ஸ் அப் மூலமாகவோ 0767250050 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பி வைப்பதன் மூலம் பதிவு செய்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்டத்தை துரிதமாக அபிவிருத்தி செய்யும் இந்த செயற்திட்டத்திற்கு ஆண்கள் பெண்கள் என சகல துறை சார்ந்தவர்களும் பங்களிப்புக்களை வழங்கி ஒத்துழைக்குமாறு புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பழைய மாணவர் அமைப்பு சமூக நிறுவனமாக பதிவு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் ஸாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் அமைப்பான (க.பொ.த.சாதாரண தரம்1998, உயர் தரம் 2001) யூத் விஷன் அமைப்பு, அரச அங்கீகாரம் பெற்ற ஒரு சமூக சேவை நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான சான்றிதழை அமைப்பின் தலைவரும், புத்தளம் ஐ.சொப்ட் உயர் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளருமான ஏ.கே.எம்.அப்ராஸ், செயலாளர் எம்.ஜெ.எம்.ஜலீல், பொருளாளர் எம்.ஏ.சி. அப்துல் பத்தாஹ் உள்ளிட்ட நிர்வாக உறுப்பினர்கள் புத்தளம் பிரதேச செயலகத்தில் உத்தியோகபூர்வமாக பெற்றுக் கொண்டனர். இவ்வாறான அங்கீகாரங்களைப் பயன்படுத்தி சமூக நலன் திட்டங்கள் உள்ளிட்ட சமூக மட்டத்திலான பல்வேறு விதமான அடிப்படை தேவைகளை தீர்த்து வைக்க தமது அமைப்பினர் களம் இறங்க உள்ளதாக தலைவர் ஏ.கே. எம்.அப்ராஸ் தெரிவித்தார்.

# சுகாதார அமைச்சு

## வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்கு சுத்திகரிப்பு சேவையை வழங்குதல் 2020/2021

# கேள்வி அறிவித்தல்

2020/2021ம் வருடங்களில் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் கீழுள்ள பின்வரும் நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கும் பொருட்டு பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ள பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் அமைச்சுப் பெறுகை C1 குழுவின் தலைவரால் கேள்விகள் கோரப்படுகின்றன.

**1. பின்வரும் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நிறுவனங்கள் இதன்பொருட்டு விண்ணப்பிக்கலாம்.**

I. இலங்கையில் வியாபாரப் பெயர் பதிவுச் சட்டத்தின் கீழ் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றாக பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்படும் தினத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு முன் பதிவைப் பெற்ற நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

II. சுத்திகரிப்புச் சேவைகள் வழங்குதல் தொடர்பில் அரசாங்க/அரை அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கு குறைந்தபட்சம் 01 வருட அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதுடன் இதனை குறித்த நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்டதற்கான ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

III. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08ஆம் அத்தியாயத்தின் கீழான பதிவுச் சான்றிதழ் (அந்தந்த வைத்தியசாலைகள் நிறுவனங்களுக்கு வெவ்வேறாகப் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)

IV. வைத்தியசாலை மற்றும் சுகாதார நிறுவனங்கள் பின்வரும் பெறுமதிகளுக்கு 06 மாத காலத்திற்குள் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட பொது 170 மாதிரிப் பெறுமதிச் சான்றிதழின் (மூலப் பிரதி) (ஒப்பந்தக்காரரினால் பல வைத்தியசாலை/நிறுவனங்களுக்கு கேள்விகளைச் சமர்ப்பிப்பதானால் அந்த வைத்தியசாலைகள்/நிறுவனங்களின் பெறுமதி கூட்டுத் தொகைக்குச் சமமான அல்லது அதிக பெறுமதிக்குப் பெற்றுக்கொண்ட சான்றிதழாகவிருத்தல் வேண்டும்) மேலும் உங்களால் விண்ணப்பிக்கப்படும் வைத்தியசாலை/நிறுவனத்தின் வருடாந்தப் பெறுமதி பின்வருமாறாகவிருத்தல் வேண்டும்.

| | | வருடாந்தப் பெறுமதி |
|---|---|---|
| 1. | சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு/ போதனா வைத்தியசாலைகள் மற்றும் பொது வைத்தியசாலைகள் | ரூபா 1,000,000.00 |
| 2. | ஆதார வைத்தியசாலைகள் மற்றும் மாவட்ட வைத்தியசாலைகள் | ரூபா 500,000.00 |
| 3. | சுகாதார நிறுவனங்கள் | ரூபா 300,000.00 |

V. பின்வரும் ஒவ்வொரு வைத்தியசாலைகள்/நிறுவனங்களுக்காக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு வங்கி மேலதிகப்பற்று வசதிகள் வழங்கப்படுவதாக ஒப்பந்தக்காரர் கொடுக்கல் வாங்கல் செய்யு வங்கியினால் வழங்கப்பட்ட கடிதம் (மூலப் பிரதி) (ஒப்பந்தக்காரரால் ஒன்றுக்கு மேற்பட்ட வைத்தியசாலைகள் / நிறுவனங்களுக்கு விலைமனுக்கள் சமர்ப்பிப்பதானால் அந்தந்த வைத்தியசாலைகள்/ நிறுவனங்களின் பெறுமதி கூட்டுத் தொகைக்குச் சமமான அல்லது அதிக பெறுமதிக்குப் பெற்றுக்கொண்ட சான்றிதழாகவிருத்தல் வேண்டும்)

VI. முன்னைய வருடங்களில் வியாபாரப் பெயர் பதிவின் கீழ் சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்காக சேவையில் ஈடுபடுத்திய அனைத்து ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றுக்கு பங்களிப்பு நிதி செலுத்தியதற்காக இலங்கை மத்திய வங்கி / ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் ஊழியர்களின் பெயரில் அந்தந்த கணக்குக்கு வைப்புச் செய்யப்பட்டு பெற்றுக்கொண்ட சீ அறிக்கை அல்லது இலத்திரனியல் மாதாந்த கொடுப்பனவுகளை 2020.06.30ஆம் திகதி வரை உள்ளடக்கப்பட்ட கொடுப்பனவு ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். (2019/ 2020 வருடங்களுக்குரித்தான அண்மைய 12 மாதங்கள்)

VII. முன்னைய மதிப்பீட்டு வருடங்களில் சுத்திகரிப்புச் சேவை நிறுவனத்தின் பெயரில் வெட் வரி/ வருமான வரி என்பன செலுத்தப்பட்டமையை ஆவணச் சாட்சி மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். (வரையறுக்கப்பட்ட நிறுவனமானால் நிறுவனத்தின் பெயரிலும், தனிநபர்/பங்கு வியாபார நிறுவனமானால் சகல பங்காளர்களின் பெயரிலும் முன்னைய வருடங்களுக்கான வருமான வரி, வெட் வரி செலுத்தியதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். (2019/2020 வருடங்களுக்காக மட்டும்)

VIII. ரூ......................................பெறுமதியான வங்கிப் பிணை முறி அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம்/காப்புறுதி நிறுவனத்தினால் கொழும்பு-10, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, சுவசிரிபாய, 385ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் செயலாளரின் பெயருக்கு வழங்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த நாள் முதல் 119 நாட்களுக்குச் செல்லுபடியாகும் வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கிப் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும். (இணைப்பு 01 மாதிரியின் பிரகாரம்) (2020.10.13ஆம் திகதி முதல் 2021.02.08ஆம் திகதி வரை) செல்லுபடியாதல் வேண்டும்.

02. கேள்வி விண்ணப்பங்களை 2020.09.22ஆம் திகதி முதல் 2020.10.12 ஆம் திகதி வரையான காலத்தில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை கொழும்பு-10, டி. பி. ஜாயா மாவத்தை, 6வது மாடி, இல. 464 எனும் முகவரியில் அமைந்துள்ள சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் (புதிய கட்டிடம்) பெறுகைக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அந்தந்த வைத்தியசாலைகளுக்கான மீளளிக்கப்படாத கட்டணத்தை இந்த அமைச்சின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்சைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**நிறுவனங்கள்/வைத்தியசாலைகள்**

| தொடர் இல | வைத்தியசாலையின் பெயர் | கேள்வி இலக்கம் | பெறுமதி சான்றிதழ் (ரூ) | கடன் வசதிகளை பெறவேண்டிய பெறுமதி (ரூ) (அல்லது குறையாத) | கேள்விப்பிணை ரூ. | கேள்வி ஆவணக் கட்டணம் ரூ |
|---|---|---|---|---|---|---|
| 01 | இலங்கை தேசிய வைத்தியசாலை - பண்டாரநாயக்க கட்டிடம் மற்றும் சுற்றிவர உள்ளடக்கப்படும் பிரதேசம் | MH/PB/CL/01/2020 | 1,000,000.00 | 950,925.62 | 381,000.00 | 3,500.00 |
| 02 | போதனா வைத்தியசாலை, கண்டி (1ம் பிரிவு) | MH/PB/CL/02/2020 | 1,000,000.00 | 4,023,771.16 | 1,610,000.00 | 20,000.00 |
| 03 | போதனா வைத்தியசாலை, கண்டி (11ம் பிரிவு) (தாதியர் கல்லூரி) | MH/PB/CL/03/2020 | 1,000,000.00 | 271,223.13 | 109,000.00 | 3,500.00 |
| 04 | போதனா வைத்தியசாலை, கண்டி (111ம் பிரிவு) (வைத்தியசாலை வளாகம் மற்றும் சுற்றிவர கால்வாய் அமைப்பு | MH/PB/CL/04/2020 | 1,000,000.00 | 778,915.66 | 312,000.00 | 3,500.00 |
| 05 | பொது வைத்தியசாலை அம்பாந்தோட்டை | MH/PB/CL/05/2020 | 1,000,000.00 | 2,447,572.67 | 980,000.00 | 12,500.00 |
| 06 | போதனா வைத்தியசாலை, மஹமோதர மற்றும் தாதியர் கல்லூரி | MH/PB/CL/06/2020 | 1,000,000.00 | 454,881.87 | 182,000.00 | 3,500.00 |
| 07 | போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய | MH/PB/CL/07/2020 | 1,000,000.00 | 2,694,642.01 | 1,078,000.00 | 20,000.00 |
| 08 | மருத்துவ வழங்கல் பிரிவு | MH/PB/CL/08/2020 | 300,000.00 | 329,596.42 | 132,000.00 | 3,500.00 |
| 09 | அபேக்ஷா வைத்தியசாலை, கராபிட்டிய ரஸாவி மருத்துவ கட்டிடத்தொகுதி | MH/PB/CL/09/2020 | 1,000,000.00 | 1,009,421.58 | 404,000.00 | 3,500.00 |
| 10 | போதனா வைதியசாலை, யாழ்ப்பாணம் | MH/PB/CL/10/2020 | 1,000,000.00 | 1,959,831.74 | 784,000.00 | 12,500.00 |
| 11 | போதனா வைத்தியசாலை மற்றும் தாதியர் கல்லூரி குருநாகல் | MH/PB/CL/11/2020 | 1,000,000.00 | 2,494,097.63 | 998,000.00 | 12,500.00 |
| 12 | தேசிய கண் வைத்தியசாலை, கொழும்பு -10 | MH/PB/CL/12/2020 | 1,000,000.00 | 599,603.34 | 240,000.00 | 3,500.00 |
| 13 | நீதிமன்ற மருத்துவம் மற்றும் விஷமருத்துவ நிறுவனம், கொழும்பு -10 | MH/PB/CL/13/2020 | 300,000.00 | 72,384.10 | 29,000.00 | 3,500.00 |
| 14 | பொது வைத்தியசாலை, களுத்துறை | MH/PB/CL/14/2020 | 1,000,000.00 | 1,887,346.33 | 755,000.00 | 12,500.00 |
| 15 | சுவாசநோய் பற்றிய தேசிய வைத்தியசாலை வெலிசர | MH/PB/CL/15/2020 | 1,000,000.00 | 1,151,439.67 | 461,000.00 | 3,500.00 |
| 16 | தள வைத்தியசாலை, கந்தளாய் | MH/PB/CL/16/2020 | 300,000.00 | 694,147.50 | 278,000.00 | 3,500.00 |
| 17 | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை, ராகம | MH/PB/CL/17/2020 | 1,000,000.00 | 2,538,739.73 | 1,016,000.00 | 20,000.00 |
| 18 | லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை, கொழும்பு -08 | MH/PB/CL/18/2020 | 1,000,000.00 | 3,115,370.46 | 1,247,000.00 | 20,000.00 |
| 19 | தொழுநோய் வைத்தியசாலை, ஹெந்தளை | MH/PB/CL/19/2020 | 500,000.00 | 163,800.00 | 66,000.00 | 3,500.00 |
| 20 | மக்கள் சுகாதார கட்டிடத்தொகுதி (மலேரியா கட:டுப்பாட்டுத் திட்டம் உற்பட ஏனைய நிறுவனங்கள்) | MH/PB/CL/20/2020 | 300,000.00 | 190,309.09 | 77,000.00 | 3,500.00 |
| 21 | தேசிய இரத்தமாற்று சேவை, நாராஹேன்பிட்ட | MH/PB/CL/21/2020 | 300,000.00 | 295,819.51 | 119,000.00 | 3,500.00 |
| 22 | தேசிய தொற்றுநோய் நிறுவனம், அங்கொடை | MH/PB/CL/22/2020 | 500,000.00 | 1,189,464.04 | 476,000.00 | 3,500.00 |
| 23 | போதனா வைத்தியசாலை - அநுராதபுரம் | MH/PB/CL/23/2020 | 1,000,000.00 | 3,761,503.60 | 1,505,000.00 | 20,000.00 |
| 24 | பற்சிகிச்சை வைத்தியசாலை - பேராதனை | MH/PB/CL/24/2020 | 500,000.00 | 273,296.90 | 110,000.00 | 3,500.00 |
| 25 | போதனா வைத்தியசாலை - பேராதனை | MH/PB/CL/25/2020 | 1,000,000.00 | 1,040,040.00 | 417,000.00 | 3,500.00 |
| 26 | பொது வைத்தியசாலை - பொலன்னறுவை | MH/PB/CL/26/2020 | 1,000,000.00 | 3,169,048.77 | 1,268,000.00 | 20,000.00 |
| 27 | பொது வைத்தியசாலை - நுவரெலியா | MH/PB/CL/27/2020 | 1,000,000.00 | 2,375,000.00 | 950,000.00 | 12,500.00 |
| 28 | இரத்த ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்றுசிகிச்சை நிலையம், மாளிகாவத்தை, கொழும்பு -10 | MH/PB/CL/28/2020 | 300,000.00 | 458,216.53 | 184,000.00 | 3,500.00 |
| 29 | தேசிய பால்வினை நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் | MH/PB/CL/29/2020 | 300,000.00 | 103,994.30 | 42,000.00 | 3,500.00 |
| 30 | வாய் சுகாதார நிறுவனம் மஹரகம | MH/PB/CL/30/2020 | 300,000.00 | 221,506.10 | 89,000.00 | 3,500.00 |
| 31 | தள வைத்தியசாலை கல்முனை (வடக்கு) | MH/PB/CL/31/2020 | 500,000.00 | 2,025,005.63 | 811,000.00 | 12,500.00 |

03. பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்களை 2020.10.13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு "C1" சுகாதாரம், மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு, இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, மெடி ஹவுஸ் கட்டிடம், இரண்டாம் மாடி, கொழும்பு-10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் 2வது மாடியில் அமைந்துள்ள உதவிச் செயலாளர், (பெறுகைகள்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு கிடைக்கச் செய்யலாம். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2020/2021ஆம் வருடத்திற்கான ........................... நிறுவனம்/ வைத்தியசாலைக்கான சுத்திகரிப்புச் சேவைகள் வழங்குதல்'' எனக் குறிப்பிடல் வேண்டும். தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.

04. சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கான சுத்திகரிப்புச் சேவையை வழங்க சமர்ப்பிக்கும் கேள்விகள் ஒவ்வொரு நிறுவனங்களுக்காகவும் தனித்தனியாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் கேட்கப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதியை ஒரு கேள்வியுடனும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை ஒவ்வொரு கேள்வியுடனும் வெவ்வேறாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. கேள்வி ஆவணங்களை இரு பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனத் தயார் செய்து அவைகளை வெவ்வேறான உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. 2020.10.13ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, மெடி ஹவுஸ் கட்டிடத்தின் முதலாம் மாடியிலுள்ள மேலதிகச் செயலாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்றதும் அவை உடன் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கேள்விகள் திறக்கும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு மேலதிக செயலாளரை (பெறுகை) அழையுங்கள் - (தொ.பே.இல.0112112713, 0112112717)

07. குறித்த கேள்வியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.


**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு "C1",**
**பெறுகைப் பிரிவு,**
**சுகாதார அமைச்சு,**
**(புதிய கட்டிடம்) - இரண்டாம் மாடி,**
**இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு-10.**

# சிறு விளம்பரம்



மோட்டார் வாகனங்கள்

122



மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

SG BHQ-8911 TVS NTORQ, 2019, motor Cycle. கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210810. 055828

SG BIB-2102 Honda navi, 2017, motor cycle. கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே 0711210810. 055832

வேலைவாய்ப்பு

320



வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

தச்சன்மார்கள் தேவை. (Carpenters) உணவு, தங்குமிட வசதிகள் வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படலாம். தொடர்பு கொள்ளவும் 0713255329 056177

பொது

427



டியூஷன்

கதுறுவெல்ல, சுங்காவில மற்றும் தபால சமீபமாக, Spoken English வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. வீடு வந்து கற்பிக்கப்படும். 0764383050. 056982


OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk





Have Your Sunday Observer Marriage Proposal Advertisement in Silumina Paper too for just Rs. 200/-

Anusha - 011 2 429 342 / 077 7 278 948
Piumi - 011 2 429 383
classified@lakehouse.lk


## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2020ஆம் ஆண்டு யூலை மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**ஏ.விமலவீர**
**தொழில் ஆணையாளர் அதிபதி**

தொழில் திணைக்களம்
கொழும்பு - 05

2020ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி

| | |
|---|---|
| **கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தி தொழில்** | **வேலையாள் ஒரு நாளுக்கு ரூ.858.69** |

இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு - செலவு திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு - செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின்படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில்தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

## மொறட்டுவ பல்கலைக்கழகம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் "B" மற்றும் "C" ஆகிய பெண் பிள்ளைகளின் விடுதிகளுக்கான உள்ளக மற்றும் வெளியக மீண்டும் பெயிண்ட் பூசுதல் வேலை

**Contract /Bid No.: UM/CWS/MD/CIVIL/2019/41**

01. கீழே விபரிக்கப்பட்டவாறு மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் "B" மற்றும் "C" ஆகிய பெண் பிள்ளைகளின் விடுதிகளுக்கான உள்ளக மற்றும் வெளியக மீண்டும் பெயிண்ட் பூசுதல் வேலைக்காக மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இப்போது கோருகின்றார்.

    **செயற்றிட்ட அமைவிடம்:** மொறட்டுவ, கட்டுபெத்த, மொறட்டுவ பல்கலைக்கழக இடப்பரப்பில்.

    நிர்மாணக் காலப்பகுதியானது 150 நாட்களாகும். அண்ணளவான ஆகுசெலவு மதிப்பீடானது பெசேவ மற்றும் அவசர நேர்வுகள் நீங்கலாக 6.9 மில்லியன் இலங்கை ரூபாவாகும்.
02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். இருப்பினும், மேல் மாகாணத்தின் நிருவாக எல்லையினுள் பதிவு பெற்ற விலைமனுதாரர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.
03. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதியை பெறுவதற்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் 8 அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் கட்டிட நிர்மாண துறையில் சி-7 அல்லது மேற்பட்ட தரம் அல்லது தரை, சுவர் மற்றும் சீலிங் மெருகூட்டல் ஆகியவற்றில் விஷேடத்துவம் மற்றும் எஸ்பி-4 தரம் அல்லது மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்றிருத்தலும் வேண்டுமென்பதுடன் ஒப்பந்தத்தை வழங்கும் திகதி வரையும் இப்பதிவானது செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
04. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:
    - கடந்த மூன்று வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி பெறுமதி ஆகக் குறைந்தது 25,000,000 இலங்கை ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
    - கடந்த 3 வருடங்களில் அரசாங்க அல்லது தனியார் துறையில் ஒரு ஒப்பந்தத்தில் 7,000,000 இலங்கை ரூபா பெறுமதியான நிகரான தன்மை மற்றும் வேலைகளின் அளவில் அனுபவம்.
05. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 011 2 651594 என்ற தொலைபேசி எண்ணினூடாக பிரதான வேலைகள் மற்றும் சேவைகளின் SAR இடமிருந்தும் 011 2 650042 என்ற தொலைபேசி எண்ணினூடாக மொறட்டுவ பல்கலைக்கழக பராமரிப்பு பிரிவின் வேலைகள் பொறியியலாளரிடமிருந்து இப்பணியின் எந்தவொரு திட்டவட்டமாக குறிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகவலை பெற்று 2020.10.09 ஆம் திகதி வரையும் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மொறட்டுவ, கட்டுபெத்த, மொறட்டுவ பல்கலைக்கழக பிரதான வேலைகள் மற்றும் சேவைகள் பிரிவின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
06. 2020.09.23 ஆம் திகதியிலிருந்து 2020.10.09 ஆம் திகதி வரையும் 2,800 இலங்கை ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மொறட்டுவ, கட்டுபெத்த, மொறட்டுவ பல்கலைக்கழக பிரதான வேலைகள் மற்றும் சேவைகள் பிரிவின் சிரேஷ்ட உதவி பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப்பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
07. 2020.10.15 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் மொறட்டுவ, கட்டுபெத்த, மொறட்டுவ பல்கலைக்கழக பிரதான வேலைகள் மற்றும் சேவைகள் பிரிவின் சிரேஷ்ட உதவி பதிவாளரின் அலுவலகத்திலுள்ள பெட்டியில் விலைமனுக்கள் இரு பிரதிகளில் சேர்க்கப்படலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும். மாற்றுவழியான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
08. விலைமனுக்கள் 2021.01.13 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
09. 2021.02.10 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலும் 118,000 இலங்கை ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. 2020.10.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மொறட்டுவ பல்கலைக்கழக, பிரதான வேலைகள் மற்றும் சேவைகள் பிரிவில் விலைமனுக் கூட்டமொன்று நடைபெறும். விலைமனு முன்னோடிக் கூட்டத்தில் பங்குபெறுவதற்கு முன்னராக விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்தல் அவசியமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மொறட்டுவ பல்கலைக்கழகம், கட்டுபெத்த, மொறட்டுவ.**

## பெறுகை அறிவித்தல்

### போதனா வைத்தியசாலை, அநுராதபுரம்

### ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்து கொள்வதற்கான அழைப்பு

அநுராதபுரம் போதனா வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வகையில் இலங்கை நிர்மாணம் மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டுள்ள வடமத்திய மாகாண ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2021ஆம் வருடத்திற்கான பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்து கொள்வதற்காக 2020 ஒக்டோபர் 14ஆந் திகதி மு.ப. 10.00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதற்கமைய 2019-10-13ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 வரையான காலத்தினுள் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை வைத்தியசாலையின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இந்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தமது தகைமைகளை உறுதி செய்வதற்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்து உரிய கட்டணங்களைச் செலுத்தி வைத்தியசாலை சிறாப்பர் பிரிவில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| தொ. இல. | விடயம் | பிரேரணை | விண்ணப்பப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 01 | 2020ஆம் வருடத்தில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் | C9 அல்லது அதற்கு மேல் | ரூபா 1500.00 |

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து **025-2222261-107/113** எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அலுவலக நேரத்தினுள் இலவசமாக பதிவு செய்து கொள்வதற்கான ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். விண்ணப்பப் படிவத்தை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**அநுராதபுரம்.**

## மொறட்டுவ பல்கலைக்கழகம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### போக்குவரத்து மற்றும் லொஜிஸ்டிக்ஸ் முகாமைத்துவ திணைக்களத்திலுள்ள பாதிக்கப்பட்ட வகுப்பறைகளுக்கு மின்வழங்கலுடனான நிரந்தரமான வளிச்சீராக்கல் அலகுகளை வழங்கல் மற்றும் நிறுவுதல்

**Contract No.: UM/CWS/MD//ELECT/2019/09**

1. கீழே விபரிக்கப்பட்டவாறு போக்குவரத்து மற்றும் லொஜிஸ்டிக்ஸ் முகாமைத்துவ திணைக்களத்தின் பாதிக்கப்பட்ட வகுப்பறைகளுக்கு மின்வழங்கலுடனான நிரந்தரமான வளிச்சீராக்கல் அலகுகளை வழங்கல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மொறட்டுவ பல்கலைகழகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.

   **செயற்றிட்டத்தின் அமைவிடம்:**

   மொறட்டுவ, கட்டுபெத்த, மொறட்டுவ பல்கலைக்கழக நிலமனையிடம்.

   நிர்மாணக் காலப்பகுதியானது 90 நாட்களாகும்.

   The type of Air Conditioners is Split Inverter type. பெசேவ மற்றும் அவசர நிகழ்வுகள் நீங்கலாக அண்ணளவான ஆகுசெலவு மதிப்பீடு 5.6 மில்லியன் இலங்கை ரூபாவாகும்
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். இருப்பினும், மேல் மாகாண நிருவாக எல்லையினுள் பதிவு பெற்றுள்ள விலைமனுதாரர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.
3. ஒப்பந்தத்தின் வழங்கலுக்காக தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் ஈஎம்-4 அல்லது மேற்பட்ட தரத்தில் மின் நிறுவுதல்கள் விஷேடத்துவ துறையில் பதிவு பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் ஒப்பந்தத்தை வழங்கும் திகதி வரையிலும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகைமை தேவைப்பாடுகள் பின்வருமாறு:
   - கடந்த மூன்று வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரிப் பெறுமதியானது ஆகக் குறைந்தது 34,000,000 இலங்கை ரூபாவாகவிருத்தல்.
   - கடந்த 3 வருடங்களில் அரசாங்க துறையில் ஒரு ஒப்பந்தத்தில் 5,600,000 இலங்கை ரூபா பெறுமதியில் அல்லது மேற்பட்ட தொகையில் நிகரான தன்மை மற்றும் வேலைகளின் அளவில் நிறைவேற்றப்பட்ட அனுபவம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை **SAR** பிரதான வேலைகள் மற்றும் சேவைகள் (தொலைபேசி: 0112651594) மற்றும் பணியின் திட்டவட்டமாக குறிப்பிட்ட தொழில்நுட்ப தகவலை மொறட்டுவ பல்கலைக்கழக, பராமரிப்பு பிரிவு வேலைகள் பொறியியலாளரிடமிருந்து (தொலைபேசி: 0112 650042) பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை 2020.10.09 ஆம் திகதி வரையும் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மொறட்டுவ, கட்டுபெத்த, மொறட்டுவ பல்கலைக்கழக பிரதான வேலைகள் மற்றும் சேவைகள் பிரிவின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2020.09.23 ஆம் திகதியிலிருந்து 2020.10.09 ஆம் திகதி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 2,500 ரூபாவை இலங்கை ரூபாவில் செலுத்திய பின்னர், அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மொறட்டுவ, கட்டுபெத்த, மொறட்டுவ பல்கலைக்கழக, பிரதான வேலைகள் மற்றும் சேவைகள் பிரிவின் சிரேஷ்ட உதவி பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு 2020.10.15 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது மொறட்டுவ, கட்டுபெத்த, மொறட்டுவ பல்கலைக்கழக பிரதான வேலைகள் மற்றும் சேவைகள் பிரிவு, சிரேஷ்ட உதவி பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். மாற்றுவழியான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
8. விலைமனுக்கள் 2021.01.13 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் 2021.02.10 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் 96,000 இலங்கை ரூபாவிற்கான விலைமனுப்பிணையொன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. மொறட்டுவ பல்கலைக்கழக, பிரதான வேலைகள் மற்றும் சேவைகள் பிரிவில் 2020.10.09 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். விலைமனு முன்னோடிக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு முன்னராக விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்தல் அவசியமானது என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மொறட்டுவ பல்கலைக்கழகம், கட்டுபெத்த.**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## நீர் வழங்கல் அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை

### விலைமனுக்கோரல் (IFB) - துணைப்பதிப்பு 02

| | | |
|---|---|---|
| திகதி | : | **2020.09.22** |
| கடன் இலக்கம் மற்றும் செயற்றிட்டம் | : | **ADB கடன் இலக்கம் 3029 - SRI**<br>மாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவம் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சி - செயற்றிட்டம்- 02 |
| ஒப்பந்த இலக்கம் | : | **GCWWMIIP/ADB/VEHI/NRW/ICB/35** |
| ஒப்பந்த தலைப்பு | : | நீர்த்தாங்கிகளை வைக்கக்கூடிய பொருத்தமான தளமுடைய குரூம்கெப் (30) நீர் பவுசர்கள் (10) மற்றும் உபகரணங்களை வழங்கி விநியோகித்தல் |

இப்பின்னிணைப்பானது டெய்லி நியூஸ், தினமின, நவமணி செய்திப்பத்திரிக்கைகளிலும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் இணையத்தளத்திலும் 12.08.2020 இல் வெளியிடப்பட்ட நீர்த்தாங்கிகளை வைக்கக்கூடிய பொருத்தமான தளமுடைய குரூம்கெப் (30) நீர் பவுசர்கள் (10) மற்றும் உபகரணங்களை வழங்கி விநியோகித்தல் இதற்கான பொருட்களை வழங்குவதற்கான அசல்கேள்வி மனுவில் (IFB) மாற்றங்களைச் செய்கின்றது. பின்னிணைப்பு - 01 இன் அனைத்து தேவைப்பாடுகளும் மனு ஆவணத்திலும், விளைவாக வரும் எந்தவொரு ஒப்பந்த ஆவணத்தினதும் பகுதியாக ஆக்கப்பட்டுள்ளது. இங்கு பின்னிணைப்பு - 01 (கோரப்பட்ட விளக்கமளித்தலுக்கான பதில்களுடன் முன் மனு சந்திப்பு அறிக்கை) ஒப்பந்த இலக்கம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, காலி வீதி இரத்மலானை எனும் இடத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

மனுக்களை முன்வைக்கும் இறுதித்திகதி 2020 ஒக்டோபர் 07 ஆம் திகதி மு.ப 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதேபோல் மனு ஆவணங்களை வழங்கும் கால எல்லை சாதாரன வேலைநாட்களில் 2020 ஒக்டோபர் 06 ஆம் திகதி வரை 09.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தகுதிபெற, வெற்றிகரமான மனுதாரரிடமிருந்து மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

- ✓ கடந்த 05 ஆண்டுகளில் பிரதான வழங்குனராக, வழங்கல் மற்றும் விநியோகிப்பின் தன்மையை பொறுத்து கெப் வண்டி மற்றும் நீர்/ எண்ணெய் பவுசர்கள் குறைந்தது 165 மில்லியன் பெறுமதியான 6 ஆவது பிரிவில் விவரிக்கப்பட்ட பொருட்களின் நோக்கத்திற்கு நிகராக வெற்றிகரமாக வழங்குதல் வேலைகளை செய்திருத்தல்.
- ✓ மனுதாரரினால் முன்வைக்கவேண்டிய பொருட்கள்
  - கடந்த 10 ஆண்டுகளில் இலங்கையில் உதிரிப்பாகங்கள் மற்றும் அதற்கு நிகரான உபகரணங்களுக்கான சேவையை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல்.
  - கடந்த 10 ஆண்டுகளில் குறைந்தது 1000 வாகனங்களை (எந்தவொரு வகை) விற்பனை செய்திருத்தல்.
  - குறைந்தது 10 வருடங்களில் தெற்காசியாவில் ஒத்த வகையான மற்றும் ஒத்த மாதிரியான வாகனங்கள் உபயோகித்திருந்தல்.(தெற்காசியாவின் காலநிலைக்கு ஏற்றதாக நிரூபிக்கப்பட்ட பதிவு இருக்க வேண்டும்.)

முதற்பிரதியில் குறிப்பிடப்பட்ட மற்றைய அனைத்து விதிமுறைகள் மற்றும் ஒப்பந்தங்களில் எவ்வித மாற்றங்களும் இல்லை.

**தலைவர்**
**திணைக்களத்தின் வழங்கல் சபை**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை**


The Housewives' companion
Classifieds on
Daily News

# பெறுகை அறிவித்தல்

## அங்கவீனர்களுக்கான உபகரணங்கள் கொள்வனவு செய்தல் – 2020

### ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களம்

ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் அங்கவீனர்களுக்காக கீழ்க்காணும் உபகரணங்களை கொள்வனவு செய்யும் முகமாக உள்ளூர் உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள், இறக்குமதியாளர்களிடமிருந்து இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | வகை | கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கும் அளவு | மீளளிக்கப்படும் பிணைத்தொகை | | மீளளிக்கப்படாத மாதிரிப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| | | | காசாக (1%) | வங்கி (2%) | |
| 01 | சாதாரண சக்கர நாற்காளிகள் | 100 | 25,000.00 | 50,000.00 | 3,500.00 |
| 02 | கொமட் உடனான சக்கர நாற்காளிகள் | 75 | | | |
| 03 | ட்ரை சிக்கள் | 05 | | | |
| 04 | மூக்குக்கண்ணாடிகள் | 1350 | 50,000.00 | 100,000.00 | 3,500.00 |
| 05 | செவிப்புல உபகணங்கள் | 50 | | | |
| 06 | அக்குள் தாங்கி/ கைத்தாங்கி | 125 | 30,000.00 | 60,000.00 | 3,500.00 |
| 07 | நடத்தலுக்கான உதவும் சாதனங்கள்/ கைப்பிடி | 50 | | | |
| 08 | மடிக்கக்கூடிய ரொலீடர் | வேண்டுதலின் அடிப்டையில் | | | |
| 09 | செயற்கை கால் கை மற்றும் மின்சாரத்தில் செயற்படும் கை, கால் | வேண்டுதலின் அடிப்டையில் | | | |
| 10 | வளிமெத்தை/ நீர்மெத்தை | 50 | | | |

02. கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு தேவையான மாதிரிப் பத்திரங்கள், வாரத்தின் வேலை செய்யும் நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் கட்டணங்களை ஊவா மாகாண சமூக சேவைகள் பணிப்பாளருக்குச் செலுத்திப் (சகல கட்டணங்களும் இலங்கையில் செல்லுபடியாகும் காசாக மட்டுமே ஏற்கப்படும்) பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை சமர்ப்பித்ததன் பின்னர் பெற்றுக்கொள்ளலாம்.

**கேள்விகள் வழங்கப்படுதல், ஏற்றுக்கொள்ளல் திறத்தல் கீழ் காணுமாறு இடம்பெறும்.**

**கேள்விகள் விநியோகிக்கப்படல்** :- 2020.09.23 பி.ப. 3.00 வரை பதுளை, ஆர்.எம். குணவர்தன மாவத்தையில் அமைந்துள்ள ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தில்,

**கேள்விகள் ஏற்றுக்கொள்ளல்** :- 2020.10.14 பி.ப. 2.00 வரை ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தில்,

**கேள்விகள் திறக்கப்படல்** :- 22020.10.14 கேள்விகள் ஏற்றுக்கொண்டு முடிவடைந்தவுடன், ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தில்

மேலும் இது பற்றிய மேலதிக விபரங்களை ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்கு வருகை தந்து அல்லது தொலைபேசி இல: 055-2230787 மற்றும் 055-4934905 மூலம் விசாரித்துப் பெற்றுக்கொள்ளலாம். அங்கவீனர்களுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் பற்றிய பெறுகைக் குழுவின் தீர்மானம் கடைசித் தீர்மானமாகும்.

**2020.09.22**
**பதுளை ஆர்.எச். குணவர்தன மாவத்தையில்,**
**ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தில்.**

**ஆர்.எச்.சீ. பிரியந்தி**
**சமூக சேவைகள் மாகாணப் பணிப்பாளர் (பதில்)**
**பெறுகைக் குழுவின் தலைவர்.**

---

### இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

**வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு**

## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

## விலைமனு அழைத்தல்

01. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெறுகைக்குழுத் தலைவரினால் பின்வரும் கருமங்களிற்காக, முன் தகைமைகளுடைய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விலைமனு இல | பெறுகை இலக்கம் | கருமத்தின் பெயர் | பொறியிய லாளரின் மதிப்பீடு (வட் இன்றி) (ரூபா. மில்) | ICTAD பதிவு | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் ரூபா | விலைமனுப் பிணையப் பெறுமானம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20/ T-01-2020 | குமண தேசிய பூங்காவின் ஒகந்த குளத்தின் சுத்திகரிப்பு வேலைகள் | 6.7 | C7 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம்) | 2,500/- | 101,000/- 2021.01.27 வரை செல்லுபடி யாகுதல் வேண்டும் |

02. இவ் விலைமனுவானது, தேசிய போட்டிரீதியிலான விலைமனுக் கோரல் முறை மூலம் நடாத்தப்படும்

03. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், 2020.10.13 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை பத்தரமுல்ல, வனசீவராசிகள் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. 2020.10.13 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை, 'வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்' என்ற பெயரில், எழுத்துருவ விண்ணப்பமொன்று மற்றும் ICTAD பதிவுப் புத்தகத்தின் மூலப்பிரதிகளுடன், மீளளிக்கப்படாத வைப்புத்தொகையை திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்தி, ஆங்கில மொழியில் அச்சிடப்பட்டுள்ள விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், குறித்த செயற்றிட்ட வளாகத்தைப் பரிசீலனை செய்த பின்னர், விலைமனு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் பிணையத்தை வங்கியொன்றினூடாக சமர்ப்பிப்பதாயின், குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானம் வரையான திகதி வரை செல்லுபடியாகும் அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். அதனைக் காசாகச் செலுத்துவதாயின், திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும். விலைமனுப்பிணையம் இணைக்கப்பட்டிராத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் கம்பனிகள் பதிவாளரின் திணைக்களத்தில் பதிவு செய்யப்பெற்று PCA 03 சான்றிதழ் விலைமனுஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், அவ்வாறில்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள், 'மூலப்பிரதி' மற்றும் 'நகல் பிரதி' தனித்தனி தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு முத்திரையிட்டு, மீண்டும் அவ்றை ஒருறையில் சேர்த்து முத்திரையிட்டு, அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில், குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கம் குறிப்பிடப்பட்டு, 2020.10.14 பி.ப. 2.30 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது இத்திணைக்களத்தின் நிதிப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2020.10.14 அன்று பி.ப. 2.30 இற்கு விலைமனுத் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

08. விலைமனு தொடர்பான மேலதிக விபரங்களை 0112-871537 தொலைபேசியூடாக இத்திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் (நிதி)ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனு தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமை, திணைக்கள பெறுகைக்குழுவிற்கு உரித்தாவதுடன், இவ்வறிவித்தலில் அல்லது விலைமனு மாதிரிப் படிவங்களில் காணப்படும் அல்லது காணப்படாத இவ்விலைமனுத் தொடர்பான ஏதேனும் விடயங்கள் தொடர்பாகத் தீர்மானமெடுக்கு் அதிகாரம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தாகும்.

09. விலைமனுப்படிவங்களைத் தயாரித்தல் தொடர்பான ஏதேனும் செலவினங்கள் தொடர்பாக, பெறுகைக்குழுத் தலைவரினால், பொறுப்பேற்கப்பட மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல.**

---

### இலங்கை துறைமுக அதிகார சபை

## 2021ஆம் வருடத்தின் பொருட்டு உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2021ஆம் வருடத்தின் பொருட்டு பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கைத் துறைமுக அதிகார சபையில் பதிவு செய்து கொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், கூட்டுத்தாபனம், கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அரச நிறுவனங்கள், தனியார் மற்றும் கூட்டு நிறுவனங்கள் மற்றும் ஏனைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 01 | பெற்றரி, ஈயம், அமிலம் மற்றும் அவ்வாறான பொருட்கள் |
| 02. | இயந்திராதிகளுக்குத் தேவையான சகல பெயாரிங் வகைகள் |
| 03. | கட்டிடப் பொருட்கள் (செங்கல், கல், மணல், இரும்பு, PVC குழாய்கள் மற்றும் உருப்படிகள், கூரைத் தகடுகள் மற்றும் சீலிங் சீட்டுகள்) |
| 04. | இரசாயனப் பொருட்கள், கைத்தொழில், விவசாய இரசாயனங்கள், களைக் கொல்லிகள், அனைத்து வகையான சவர்க்காரங்கள், சுத்திகரிப்புப் பொருட்கள், கிருமிநாசினி வகைகள் |
| 05 | சீருடைகள் மற்றும் துணி வகைகள் |
| 06 | கணனி, தொலைநகல் இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், கணனி அச்சுப் பொறிகள், மென்பொருள்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், டோனர் வகைகள் |
| 07 | வீட்டு மின் உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள், VHF மற்றும் ஏனைய இலத்திரனியல் உபகரண உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப் பாகங்கள், கட்புல செவிப்புல உபகரணங்கள், வளிச் சீராக்கி இயந்திரங்கள், உறைநிலை குளிரூட்டிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| 08 | மின்சார கேபள்கள் மற்றும் தொலைத்தொடர்பு கேபள்கள் |
| 09 | மின்சார கட்டுப்பாட்டு முறைமை மற்றும் துணைப்பொருட்கள் மற்றும் மின்சார பொருத்தும் பொருட்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 10 | தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 11 | பொறியலாளர் கருவிகள் மற்றும் உபகரணங்கள், நீர்க்குழாய் திருகு மூடிகள், பம்பிகள், எரிவாயு மற்றும் சமையலறை உபகரணங்கள், உருக்கியொட்டும் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 12 | பாதணிகள் - கன்வஸ் மற்றும் தோற் சப்பாத்துகள், பூட்ஸ், பாதுகாப்பு காலணிகள் போன்றன |
| 13 | உலோகப் பொருட்கள் (ஆணிகள் மற்றும் முறிச்சுகள், பித்தளை உபகரணங்கள், உலோகக் குழாய்கள் மற்றும் குழாய் பொருத்தும் பகுதிகள், உலோகத் தகடு, உலோக பொதுவான பல்வேறு வடிவங்கள் மற்றும் கவசப் பொருட்கள், வலை வகைகள், தும்புத்தடி, ஈர்க்கில், தும்புக் கயிறு மற்றும் ஏனைய தும்பு உற்பத்திகள், கம்பித் தூரிகை மற்றும் அனைத்து வகையான நிறப்பூச்சுகள் பூசும் தூரிகை வகைகள், கண்ணாடி, மெல்லிய பலகைகள் MDF மற்றும் போர்மிகா வகைகள் |
| 14 | தகரங்களைச் சுத்தம் செய்யும் கிறிட் பிளாஸ்டிங் செயற்பாடுகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் வார்ப்பு மணல் |
| 15 | ஹோஸ் குழாய்கள் (ஹைட்ரோலிக், அதியமுத்த வாயு, தீயணைப்பு போன்றவைகளுக்கானது) |
| 16 | உராய்வுநீக்கி எண்ணெய்கள் |
| 17 | மெனிலா, புரோலிபொப்லின் மற்றும் நைலோன் கயிறுகள் |
| 18 | கையடக்கத் தொலைபேசிகள் |
| 19 | அலுவலக காகிதாதிகள் மற்றும் அச்சடிக்கப்பட்ட காகிதாதிகள் |
| 20 | நிறப்பூச்சுகள் (இனாமல் மற்றும் இமல்ஷன்) பொலிஷ் மற்றும் அதனைச் சார்ந்த உற்பத்திகள், விசிறியடிக்கும் நிறப்பூச்சு வகைகள் மற்றும் அதனைச் சார்ந்த நிறப்பூச்சு வகைகள் (உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் மட்டும்) |
| 21 | போர்சலின் பொருட்கள், துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் |
| 22 | வீதிகளுக்கான தார் வகைகள் மற்றும் தார் கலந்து தயாரிக்கப்பட்ட சீமெந்து மற்றும் அதனைச் சார்ந்த உற்பத்திகள் |
| 23 | இறப்பர் மற்றும் வேல்கனைக்சிங் உற்பத்திகள் |
| 24 | பாதுகாப்புப் பொருட்கள் மற்றும் தீயணைப்பு உபகரணங்கள், சுழியோடும் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 25 | வாகன உதிரிப்பாகங்கள், ரேடியேட்டர் மற்றும் ரேடியேட்டர் கோர்கள் |
| 26 | கிரேன், போக் லிப்ட், டொப் லிப்ட் போன்றவற்றுக்கான உதிரிப்பாகங்கள், கடல்சார் சாதனங்களுக்கான உதிரிப்பாகங்கள், பிரைம் மூவர்கள் மற்றும் யாட் டிராக்டர்களுக்கான உதிரிப்பாகங்கள் |
| 27 | உருக்குத் தளபாடங்கள், மரத் தளபாடங்கள் மற்றும் ஏனைய அலுவலகத் தளபாடங்கள் |
| 28 | அரியப்பட்ட பலகைகள் |
| 29 | டயர்கள் மற்றும் டியூப்கள் |
| 30 | வயர் ரோப் வகைகள் |
| 31 | மேற்கத்திய மற்றும் உள்நாட்டு மருத்துவ உபகரணங்கள் |
| 32 | புகைப்படங்களை அச்சிடல் மற்றும் வடிவமைத்தல் |

**நிபந்தனைகள்:**

01. வழங்குநராக பதிவு செய்து கொள்ள விரும்பும் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்கள் தமது வியாபாரப் பதிவுச் சான்றிதழை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. மேற்குறிப்பிடப்பட்டுள்ள 01 தொடக்கம் 32 வரையான பொருட்களுக்காக பதிவு செய்து கொள்வதற்கு அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 03.30 மணி வரை 2020-11-30ஆம் திகதி வரையில் தேவையான விண்ணப்பப் படிவங்களை 1000.00 ரூபா மற்றும் வெட் வரியைச் செலுத்தியதன் பின் இல. 45, லேடன் பஸ்டியன் வீதி, கொழும்பு-01இல் அமைந்துள்ள வழங்கல் பிரிவின் பிரதான வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றைச் செய்யவும்)

03. வழங்கலின் பொருட்டு பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் பதிவு செய்து கொள்ளாத ஏனைய வழங்குநர்களிடம் இருந்து விலைகளைக் கோரவும் கொள்வனவு செய்வதற்கான உரிமை துறைமுக அதிகார சபையைச் சார்ந்தது.

04. முறையாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத மற்றும் நேர காலத்திற்கு பொருட்களை வழங்கத் தவறுபவர்கள், துறைமுக அதிகார சபையினால் வழங்கப்படும் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் மாதிரிகளுக்கு ஒவ்வாத தன்மையிலுள்ள பொருட்கள் மற்றும் சிறந்த தரத்துடனான பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கப்படும்.

05. அனைத்து விண்ணப்பங்களும் ''2021ஆம் வருடத்திற்கான உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்), வழங்கல் பிரிவு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 எனும் முகவரிக்கு 2020-11-30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலுள்ள பிரதான வழங்கல் முகாமையாளர் அலுவலகத்தில் இந்த விண்ணப்பங்களை நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம். இதன் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

06. மேலதிக விபரங்களை 2323102, 2432866, 2328342, 2320250, 2482761 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல் பிரிவு, இலங்கைத் துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு - 01**

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### தேசிய கல்வி நிறுவகம்

## Supply, Installation, Commission and Maintenance of 100 Kw Solar PV Roof Top System for National Institute of Education, Maharagama.

## Contract No.: NIE/EE/2019/74

1. மஹரகம, தேசிய கல்வி நிறுவகத்திற்கு 100Kw Solar PV Roof Top System இன் வழங்கல், நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்காக பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தேசிய கல்வி நிறுவகமானது அழைக்கின்றது. முழுமையான விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களில் அடக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தம் வழங்கப்படும் திகதியிலிருந்து எதிர்பார்க்கப்படும் வழங்கல் காலப்பகுதி 4 இலிருந்து 6 வரையுமான வாரங்களாகும். விலைமனுதாரர் அனைத்து உருப்படிகளுக்கும் விலைமனுக்கூறுகளை சமர்ப்பிக்கலாமென்பதுடன் கீழே குறிப்பிட்டுள்ளவாறான விலைமனுப்பிணையுடன் விலைமனுவானது இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| தொடர் இல. | சுருக்கமான விளக்கம் | எண்ணிக்கை | விலைமனுப்பிணைத் தொகை (ரூபாவில்) | மீளளிக்கப்படாத ரொக்கப் பணக் கொடுப்பனவு (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| 01 | Procurement of supply, installation, commission and maintenance of 100Kw Solar PV Roof Top system for National Institute of Education, Maharagama. | 01 | 175,000.00 | 4,500.00 |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஆர்வமும் தகுதியுமுள்ள மற்றும் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையுடன் சோலர் பிவி சேவை வழங்குநராகவுள்ள விலைமனுதாரர் மீளளிக்கப்படாத கட்டணத்தை மஹரகம இலங்கை வங்கியிலுள்ள பணிப்பாளர் நாயகத்தின் 607628 என்ற கணக்கிலக்கத்திற்கு (பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்) செலுத்திய பின்னர், மஹரகம, ஹைலெவல் வீதி, தேசிய கல்வி நிறுவகம், ''பொறியியல் சேவைகள் திணைக்கள'' அலுவலகத்திலிருந்து சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். விலைமனுக்கோரல் ஆவணங்களின் பரீட்சித்தல் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் வழங்கல் ஆகியவற்றிற்கான இறுதித்திகதி 2020.10.14 ஆம் திகதி பி.ப. 2.00 மணியாகும்.

4. 2020.10.05 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு மஹரகம, தேசிய கல்வி நிறுவகத்தின் பொறியியல் சேவைகள் பிரிவில் விலைமனு முன்னோடிக்கூட்டம் நடைபெறும். விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு முன்னர் பொறியியல் சேவைகள் பணிப்பாளருடனான ஆலோசனையின் பின்னர் மஹரகம, ஹைலெவல் வீதி, தேசிய கல்வி நிறுவக தளத்திற்கு விஜயம் செய்யுமாறு விலைமனுதாரர்கள் அறிவுரை வழங்கப்படுகின்றனர். (தொலைபேசி : 011-7601600 அல்லது 011-7601603).

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Supply, installation, commission and maintenance of 100Kw Solar PV Roof Top System for NIE" என குறிப்பிட்டு 2020.10.15 ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகவே பெறுகைப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம என்ற முகவரியை அடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரம் முடிந்தவுடன் விரைவாகவே சமுகமளிப்பதற்கு ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் 175,000 இலங்கை ரூபா பெறுமதியானதும் 2021.02.12 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. மேலதிகமான விபரங்களை அலுவலக நேரங்களில் 011-7601600 அல்லது 011-7601603 ஆகிய தொலைபேசி எண்களினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**த.பெட்டி 21,**
**தேசிய கல்வி நிறுவகம்,**
**மஹரகம.**

தினகரன்
விளையாட்டு
2020 செப்டெம்பர் 22 செவ்வாய்க்கிழமை
sports.tkn@lakehouse.lk




# 2021 ஐ.பி.எல். தொடரும் ஐக்கிய அரபு இராச்சியத்தில்



அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறவுள்ள இங்கிலாந்து மற்றும் இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் மற்றும் அடுத்த வருடம் நடைபெறவுள்ள இந்தியன் ப்ரீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடர் என்பவற்றை ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்துவதற்கு பிசிசிஐ திட்டமிட்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி முடிந்ததும், இந்திய கிரிக்கெட் அணி டிசம்பர் மாதம் முதல் அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து 4 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

அடுத்து இங்கிலாந்து அணி அடுத்த ஆண்டு ஜனவரியில் இந்தியா வருகிறது. அந்த அணி இந்தியாவுடன் 5 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் மூன்று ரி20 போட்டிகளில் விளையாடவுள்ளது.

இதைத்தொடர்ந்து அடுத்த ஆண்டுக்கான ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் தொடங்கும் என்று தெரிகிறது.

இந்த நிலையில், இந்திய கிரிக்கெட் சபைக்கும், ஐக்கிய அரபு இராச்சிய கிரிக்கெட் சபைக்கும் இடையே எதிர்காலத்தில் கிரிக்கெட் போட்டிகளை நடத்துவது தொடர்பாக கடந்த (19) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த தகவலை இந்திய கிரிக்கெட் சபையின் செயலாளர் ஜெய் ஷா தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். எனினும், அந்த ஒப்பந்தத்தில் என்ன விபரங்கள் இடம்பெற்றுள்ளது என்பது குறித்து வெளிப்படையாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள இந்திய மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் இந்தியாவில் தான் நடக்கும் என பிசிசிஐ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"தற்போதைய சூழல் காரணமாக மத்திய அரசின் அனுமதியுடன் ஐ.பி.எல் தொடரானது ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று வருகிறது. அதேநேரம், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள இங்கிலாந்து டெஸ்ட் தொடர் இந்தியாவில் நடக்கும் என நம்புகிறோம்.

இந்தியாவில் தற்போது பல்வேறு தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. எமது நாட்டுக்கு வருகின்ற அணியுடன் சேர்ந்து கொவிட் – 19 வைரஸ் தடுப்பு உயர்மட்ட பாதுகாப்பு வளையத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

அந்த வகையில் கிரிக்கெட் போட்டிகளை இரசிகர்களுடன் மீண்டும் இந்தியாவில் காணலாம்" என அவர் தெரிவித்தார்.

பிசிசிஐ அதிகாரிகள் மற்றும் ஐக்கிய அரபு இராச்சிய கிரிக்கெட் சபை அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் பிசிசிஐ இன் தலைவர் சவுரவ் கங்குலி, செயலாளர் ஜெய் ஷா, பொருளாளர் அருண் துமால், ஐக்கிய அரபு இராச்சிய கிரிக்கெட் சபையின் பிரதித் தலைவர் காலித் அல் சரூனி ஆகியோர் கலந்துகொண்டனர்.

SINCE 1978
42nd
OBSERVER MOBITEL
SCHOOL CRICKETER
OF THE YEAR 2020
Recognizing talent, inspiring greatness.
Sri Lanka Telecom Mobitel
உங்களுடனே. என்றும்.

## 42வது ஒப்சவர்-மொபிடெல்

### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ........................................

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை : ........................................

**(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)**

பாடசாலை : ........................................

வாக்களித்தவர் பெயர் : ........................................

முகவரி : ........................................

மொபைல் இல. : ........................................

SUNDAY OBSERVER

**Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்**

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

**1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router** **2வது பரிசு: ரூ. 2,500**
**3வது பரிசு: ரூ.1,500** **4வது பரிசு: ரூ. 1,000**

42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி **2020-09-26** இல. **29**




23 வயதுக்குட்பட்ட உள்ளூர் கழக அணிகளின் கிரிக்கெட் போட்டி

## நுவனிதுவின் சதத்தினால் எஸ்எஸ்சி அணி வெற்றி



இலங்கை கிரிக்கெட் , 23 வயதுக்குட்பட்ட உள்ளூர் கழக அணிகளின் கிரிக்கெட் வீரர்களுக்காக ஒழுங்கு செய்து நடாத்தும் மேஜர் யூத் கிரிக்கெட் தொடரில் (20) மொத்தமாக 11 போட்டிகள் நிறைவுக்கு வந்தன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டிகளில் குழு டி இற்கான மோதல் ஒன்றில் கொழும்பு எஸ்எஸ்சி கழகம், காலி கிரிக்கெட் கழகத்திற்கு எதிராக வெற்றி பெற்று இந்த தொடரில் தமது மூன்றாவது வெற்றியினைப் பதிவு செய்தது. எஸ்எஸ்சி அணியின் வெற்றிக்காக துடுப்பாட்டத்தில் நுவனிது பெர்னாந்து சதம் (108) பெற்று உதவ, இடதுகை வேகப்பந்துவீச்சாளரான கலன பெரேரா 4 விக்கெட்டுக்களை கைப்பற்றி பங்களிப்புச் செய்தார்.

மற்றுமொரு போட்டியில், மொஹமட் சமாஸ் பெற்றுக் கொண்ட 90 ஓட்டங்களுடனும், பசிந்து சூரியபண்டார (57), டினுக்க டில்ஷான் (53) ஆகியோரின் அரைச் சதங்களுடனும் சோனகர் கிரிக்கெட் கழக அணி இலங்கை துறைமுக அதிகார சபை அணிக்கு எதிராக 94 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதேவேளை என்சிசி அணி தினேத் ஜயக்கொடி (78), கலன விஜேசிரி (50) ஆகியோர் பெற்ற அரைச் சதங்களுடன் செரசன்ஸ் விளையாட்டுக் கழகத்தினை தோற்கடித்து, இந்த தொடரில் தமது அடுத்தடுத்த வெற்றிகளை பதிவு செய்துகொள்கின்றது.

இதேநேரம் களுத்துறை நகர கழகம் மற்றும் கோல்ட்ஸ் கிரிக்கெட் கழகம் அணிகள் இடையில் நடைபெற்ற த்ரில்லர் மோதலில், கோல்ட்ஸ் கிரிக்கெட் கழகம் ஒரு விக்கெட்டினால் அபார வெற்றியினைப் பதிவு செய்தது. கோல்ட்ஸ் அணியின் வெற்றியினை தேசிய கிரிக்கெட் அணி வீரரான அவிஷ்க பெர்னாந்து அரைச்சதம் (58) பெற்று உறுதி செய்தார்.

இப்போட்டிகள் தவிர தமிழ் யூனியன் கிரிக்கெட் கழகம், லங்கன் கிரிக்கெட் கழகம், புளூம்பில்ட், விமானப்படை, பிஆர்சி, இராணுவப் படை மற்றும் பதுரெலிய கிரிக்கெட் கழகம் ஆகியவை வெற்றிகளைப் பதிவு செய்த ஏனைய அணிகளாக மாறியிருந்தன.

## கொரோனா அச்சத்தால் 37 கோல்களை விட்டுக்கொடுத்த ஜெர்மன் அணி

ஜெர்மனியில் கீழ் நிலை லீக் கால்பந்து அணியான ரிப்டோப், கொரோனா வைரஸ் தொற்றுக்கான சமூக இடைவெளியை பேணி ஏழு வீரர்களுடன் கால்பந்து போட்டியில் ஆடியதால் எதிரணிக்கு 37 கோல்களை விட்டுக்கொடுத்து படு தோல்வி அடைந்துள்ளது.

உயெல்சன் நகரைச் சேர்ந்த ரிப்டோப் அணி கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்த நகரின் போட்டி அணியான ஹோல்டன்ஸ்டட் கழகத்தை எதிர்கொண்டது. ஜெர்மனி கால்பந்தின் கீழ் நிலை லீக்கான கிரைஸ்லிகா தொடருக்காகவே இந்த இரு அணிகளும் மோதிக்கொண்டன.



என்றாலும் ஹோல்டன்ஸ்டட் அணி ஆடிய முந்தைய போட்டியில் எதிரணி வீரர் ஒருவருக்கு கொவிட்19 தொற்று இருப்பது உறுதியாகி இருந்தது. இதனால் ஹோல்டன்ஸ்டட் அணி வீரர்களுக்கு கொரோனா சோதனை செய்யப்பட்டு எவருக்கும் நோய் தொற்றவில்லை என்பது உறுதியானது.

ஆனால் 14 நாள் நோய் தொற்றுக் காலம் பூர்த்தியாகாததால் ரிப்டொப் வீரர்கள் ஹோல்டன்ஸ்டட் அணியுடன் விளையாட பயப்பட்டார்கள். இதனால் போட்டியை ஒத்திவைக்க நாம் கடுமையாக முயன்றாலும் ஹோல்டன்ஸ்டட் அணி போட்டியில் ஆடுவதில் உறுதியாக இருந்ததாக ரிப்டொப் கழகத்தின் இணைத்தலைவர் பட்ரிக் ரிஸ்டோவ் தெரிவித்தார்.

இதனால் கொரோனா அச்சம் காரணமாக ரிப்டொப் அணியின் பல வீரர்களும் போட்டியில் பங்கேற்பதில் தயக்கம் காட்டினார்கள். எவ்வாறாயினும் கால்பந்து போட்டி ஒன்றில் விளையாடுவதற்கு தேவையான குறைந்த பட்சம் ஏழு வீரர்களை திரட்டுவதற்கு ரப்டோப் அணியினால் முடிந்தது.

'போட்டியில் ஆடுவதற்கு சுயமாக முன்வந்ததற்காக நாம் அந்த ஏழு வீரர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். இல்லாவிட்டால் போட்டியை கைவிட்டதற்காக 200 யூரோ அபராதம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருக்கும்' என்று ரிஸ்டோவ் கூறினார். 'இந்தப் பெருந்தொற்றுக்கு இடையே அது எமக்கு பெரும் தொகை' என்றும் அவர் குறிப்பிட்டார்.

போட்டி ஆரம்பித்த போது மைதானத்திற்கு வந்த ரிப்டோப் அணி வீரர்களில் ஒருவர் பந்தை எதிரணி பக்கமாக உதைத்து விட்டு தொடர்ந்து ஆடாமல் ஒதுங்கிக்கொண்டார்கள்.

கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஹோல்டன்ஸ்டட் அணியினர் கோல் மழை பொழிய ஆரம்பித்தனர். என்றாலும் விளையாட்டுத் தன்மையுடன் நடந்து கொள்ளவில்லை என்று ரிப்டோப் அணித் தலைவருக்கு நடுவர் மஞ்சள் அட்டை காட்டினார்.

'ஹோல்டன்ஸ்டட் அணி வீரர்களுக்கு நிலைமை புரியவில்லை. ஆனால் நாம் எந்த ஆபத்துக்கும் முகம்கொடுக்க விரும்பவில்லை. அந்தப் போட்டி முழுவதும் வீரர்கள் மைதானத்தில் இருந்தபோதும் வெறுமனே அங்கு நின்று கொண்டிருந்தார்கள்.

அவர்கள் எதிரணி வீரர்களுடன் இரண்டு மீற்றர் இடைவெளியை தக்கவைத்துக் கொண்டு சமூக இடைவெளி விதியை பின்பற்றியதோடு நேரடியாக மோதிக்கொள்ளவில்லை' என்று ரிப்டோப் கழக இணைத் தலைவர் கூறினார்.



## இலங்கை அணியின் சுழல் பந்துவீச்சு ஆலோசகராக ரங்கன ஹேரத்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரரும் இடதுகை சுழல் பந்துவீச்சாளராக அதிக டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தி உலக சாதனை படைத்தவருமான ரங்கன ஹேரத், இலங்கை கிரிக்கெட் அணியின் சுழல் பந்துவீச்சு ஆலோசகராக நியமிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

முன்னதாக, இலங்கை கிரிக்கெட் அணியின் சுழல் பந்துவீச்சு ஆலோசகராக இணைந்து கொள்வதற்கு ரங்கன ஹேரத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தாலும் அதை அவர் மறுத்து இருந்தார்.

அதில் குறிப்பாக, சர்வதேச அணியொன்றுடன் இணைந்து பயிற்சியாளராகச் செயற்பட்டு அதன் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதால் அந்த அழைப்பினை அவர் மறுத்திருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

42 வயதான ரங்கன ஹேரத், தற்போது இலங்கை கிரிக்கெட் அணியின் சுழல் பந்துவீச்சு ஆலோசகராக செயற்படுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக கிரிக்கெட் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுதொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபைக்கும், ரங்கன ஹேரத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

பெரும்பாலும், பங்களாதேஷ் மற்றும் இங்கிலாந்து அணிகளின் டெஸ்ட் தொடர்களின் போது அவர் இலங்கை கிரிக்கெட் அணியின் சுழல் பந்துவீச்சு ஆலோசராக செயற்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த இரண்டு தொடர்களின் போது வெவ்வேறாக அவருக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் சுழல் பந்துவீச்சு ஜாம்பவானான முத்தையா முரளிதரனுக்குப் பிறகு இலங்கை அணியின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தவர் ரங்கன ஹேரத்.

அதிலும் குறிப்பாக, அண்மைக்காலங்களில் இலங்கை அணி பெற்றுக்கொண்ட பெரும்பாலான டெஸ்ட் வெற்றிகளில் ரங்கன ஹேரத்தின் பங்களிப்பு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன.

டெஸ்ட் அரங்கிலிருந்து ரங்கன ஹேரத் ஓய்வுபெறும் போது 93 போட்டிகளில் விளையாடி 433 விக்கெட்டுக்களை விழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 செப்டெம்பர் மாதம் 22ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.